அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 25-02-1994

உள்ளே...

1. சுதந்திரத்தைத் தேடி... — 2 ஆம் லெப். ரூபி
2. இலங்கைக்கு மீண்டும் இந்திய இராணுவம்...
3. போர் உலா
4. சிறுகதை - விடியும்
5. சென்று வா மகளே வென்று வா
- ஒரு போராளியின் கள நினைவுகள்.
6. பட்டை தீட்டப்பட்ட வைரங்கள்.
- மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி.
7. போராளியின் பேனாக்கள் பேசுகின்றன.

# போருக்காக ஒரே முறையில் 500 கோடி ரூபா ஆயுதம்

## ▣ விமான இறக்குமதி துரிதப்படுத்தப்படுகிறது !

## ▣ சிறீலங்கா ஜனாதிபதி 6 மாத காலக்கெடு !!

தமிழீழப் பிரதேசங்கள் மீது இராணுவம் மேற்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பாரிய ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கென, சிறீலங்கா அரசாங்கம் சீனாவிடமிருந்து ஐநூறு கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை அவசரம் அவசரமாக இறக்குமதி செய்துள்ளது. கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த சீனக் கப்பலிலிருந்து, எழுநூறு தொன்னுக்கும் அதிகமான ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும் பலத்த பாதுகாவலுடன் தரை இறக்கப்பட்டு, இராணுவ ஆயுதக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இது ஒரு புறமிருக்க சிறீலங்கா அரசாங்கம் தரைவழி, கடல்வழிச் சண்டைகள் மூலம் விடுதலைப் புலிகளை வென்று தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்துவிட்டதனால், வான்வழிச் சண்டைக்கான நவீனப்படுத்தல்களை அதிக அளவில் மேற்கொள்வதிலேயே அதிக அக்கறை காட்டி வருகிறது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் ரஸ்யாவில் இருந்து எம். ஐ. 8 ரக நவீன இராட்சத விமானங்களும், மே மாதத்திற்கு முன்னர் தென்னாபிரிக்காவிலிருந்து யுத்த நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நவீன கனரக வாகனங்களும், சிறீலங்கா அணியை வந்தடைந்து விடுமென கொழும்பு இராணுவ வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. விமானப் படையின் தேவையை அதிமுக்கியமாகக் கருதும் சிறீலங்கா ஜனாதிபதி, சிறீலங்கா விமானப் படையின் தளபதியாக ஒலிவர் ரணசிங்காவை நியமித்துள்ளமை, யுத்த முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

### ஆறுமாத காலக்கெடு

"எவ்வகையிலாவது இன்னும் ஆறு மாதத்தில் யுத்தத்திற்கு முடிவுகட்டி, வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்" என மாத்தளையில் வைத்து சிறீலங்கா ஜனாதிபதி தூளுரைத்துள்ளார். "இந்நாட்டு சிறுபான்மையின மக்களுக்கு உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வாழ சந்தர்ப்பம் உள்ளது. பெரும்பான்மை இனமக்கள் இந்த நாட்டில் மட்டுமே வாழ வேண்டியுள்ளது. எனவே இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பு, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரினதும் தலையாய கடமை" எனக் கூறியுள்ள சிறீலங்கா ஜனாதிபதி, "வடக்கு பயங்கரவாதிகள் பொதுமக்கள் மத்தியிலேயே உலாவுகின்றனர். ஆகவேதான்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



காந்தரூபன் அறிவுச்சோலையிலே தமிழீழத் தமிழன்னையின் குழந்தைகளுடன் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

# அமைதிப் பேச்சுவார்த்தை பற்றிய புலிகளின் நிலைப்பாடு தெளிவாக்கப்பட்டது

## ✶ சிறீலங்கா யுத்தத்தில் ஈடுபட்டால் அதையும் சந்திக்க புலிகள் தயார்

"சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சமாதானச் சூழ்நிலை ஏற்பட வேண்டும். சமாதானச் சூழ்நிலைக்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் அவசியம். போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் சேர்ந்து, ஒரு சகஜமான -சுமூகமான நிலைமையைத் தோற்றுவித்தால் மட்டுமே, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள். ஆனால், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. நாம் கேட்பவை இரண்டும் கோரிக்கைகளே. இந்தக் கோரிக்கைகளை நாம் விடுப்பதற்கு காரணம் என்னவென்றால், போர் நடந்து கொண்டிருக்கும் போது -மக்கள் சாவையும், அழிவையும் சந்தித்துக் கொண்டிருக்கும்போது -பேச்சுக்கள் நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. இராணுவ, பொருளாதார அழுத்தங்களின் மத்தியில் பேச்சு வார்த்தை நடத்துவது, தமிழ் மக்களுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்காது என்பது மட்டுமல்ல, சுதந்திரமாகவும் இருக்காது".

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், யாழ்ப்பாணத்திற்கு தெற்கிலிருந்து கத்தோலிக்க பேராயர் தலைமையிலும், அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலும், மெதடிஸ்து திருச்சபையாளர் தலைமையிலும் வந்த மூன்று வெவ்வேறான நல்லெண்ணத் தூதுக் குழுக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் பற்றி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் எடுத்துரைத்தார்.

"இந்நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் எந்தத் தீர்வையும் கொண்டுவரவில்லை. நாமும் எந்தத் திட்டத்தையும் கொடுக்கவில்லை. ஆனால் சமாதானக் குழுக்களின் பங்கு என்னவென்றால், சமாதானத் தீர்வு பற்றிப் பேச்சு நடாத்துவதற்கான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதே ஆகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை சிறீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில்தான் நடக்க வேண்டும். இதற்கான ஆரம்ப படிமுறைகளைச் செய்யுமாறு கிறீஸ்தவ குழுக்களிடம் கேட்டுள்ளோம். அப்படியான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு சமாதானச் சூழ்நிலை உருவானால் - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார். ஆரம்பப் பேச்சுக்களை யாழ்ப்பாணத்தில் நடாத்தலாம் எனவும் நாம் கூறியுள்ளோம். சமாதானக் குழுக்களிடம் இவைகளைத்தான் நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம். எமது நிலைப்பாட்டை இந்த நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் சிறீலங்கா அரசாங்கத்திடம் எடுத்துக்கூறிப் பேசிய பின் மீண்டும் வந்து எம்முடன் பேசலாம். சிறீலங்கா அரசினர் தாம் முன்பு விதித்த நிபந்தனைகளை நீக்குவதாகக் கூறியுள்ளார்கள். ஆயுதத்தைப் போடத் தேவையில்லை என்று

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

### தேர்தலுக்காக

# பத்தாயிரம் மேலதிக இராணுவத்தினர் தென்தமிழீழத்தில் குவிப்பு

மார்ச் மாதம் 1 ஆம் திகதி சிறீலங்கா அரசாங்கம் நடத்தும் பொம்மைத் தேர்தலைச் சாக்காக வைத்து, பத்தாயிரம் இராணுவத்தினரைக் கொண்ட ஒன்பது அணிகள் தென் தமிழீழத்தை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்கிடையில், வவுனியாப் பகுதியில் ஆயுதமயப்படுத்தப்பட்டுள்ள குழுக்கள், மக்கள் மேல் ஆயுதப் பயமுறுத்தல்களை மேற்கொண்டு தேர்தலில் தமக்கு வாக்களிக்கும்படி வற்புறுத்தி வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் மேலிடத்திடம் புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது. சிறீலங்கா இராணுவத்தின் ஒரு பங்காக, தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கும் இத் தமிழ்க் குழுக்கள், பொம்மைத் தேர்தல் களத்தில் 'தமிழர் தாயகமே ஜீவாதார உரிமை' எனப் பிரகடனப்படுத்தியும் ஐ. தே. க. அரசாங்கத்தைக் கண்டித்தும் முதலைக் கண்ணீர் வடித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் வவுனியாவில் 12, 604 பேர் மட்டுமே வாக்காளராக பதிவாகியுள்ளதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் அல்லாதவராக உள்ளனர் எனவும் செய்தி ஒன்று கூறுகின்றது. ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# போருக்கான சூழ்நிலை

சிறீலங்கா அரசாங்கம், இவ்வருட ஆரம்பம் முதல் எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கவனமாக அவதானிக்கும் எவரும் சிறீலங்கா, தமிழீழ மக்கள் மேல் பாரிய இனஅழிப்பு யுத்தம் ஒன்றுக்கான இறுதி ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருவதைத் தெளிவாக இனங்கண்டு கொள்வர். முதல் காலாண்டில் ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஆயுத இறக்குமதியில் செலவிட்டுள்ள சிறீலங்கா, இவ்வருடம் தேர்தல் ஆண்டாகப் பிரகடனம் படுத்தப்பட்டுள்ளதால் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது எனக் காரணம் கூறி, தான் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு செலவிடும் தொகையை சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாதவாறு மூடிமறைக்கவும் திட்டமிடுகிறது. இவ்விதம் இலங்கைத் தீவின் தேசிய வருமானத்தில் பெருந்தொகையான சதவீதத்தை யுத்தத்தில் விரயமாக்கும் சிறீலங்கா அரசாங்கம், இதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமைகளால் சிங்கள மக்கள் அனுபவிக்கும் கஸ்டங்கள், சிங்கள மக்களை அரசாங்கத்திற்கு எதிராகத் திருப்புவதைத் தடுக்கும் கவசமாக 'சிங்கள பௌத்த பேரினவாதவெறி'யை சிங்கள மக்கள் மத்தியில் தட்டியெழுப்ப அரும்பாடுபட்டு வருகின்றது. இதுவே சிறீலங்கா ஜனாதிபதியின் "இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே காணப்படுகிறது" என்ற 'விஜேதுங்க தத்துவத்தின்' தாற்பரியம். பாசிச போக்கினை தன் வெற்றியின் துணையாகக் கொள்ள விரும்பும் எந்தத் தலைவனும் இன மொழி மத உணர்வுகளுக்குப் புத்துயிர் கொடுக்க முயன்றார்கள் என்பது உலக வரலாறு. இலங்கைத் தீவின் வரலாற்றைப் பொறுத்த மட்டில் 'பௌத்த அழுக்கக் குழுக்களின்' (Buddhist Pressure Group) தாக்கம் இத்தீவின் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகவும் திகழ்ந்து வருகின்றது என்பது வேதனை தன கலந்த உண்மை.

இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண சமீபகால வரலாற்றில் முயல்வுகள் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் எல்லாம், 'தமிழர் தாயகக் கோட்பாடு' அதாவது, வடக்கு -கிழக்கு இணைப்பு என்பதே பௌத்த சிங்கள பேரினவாதிகளால் முதலில் எதிர்க்கப்பட்டு வருகிறது. தொண்டமானின் பிரதேச சபை என்ற கருத்து முன்வைக்கப்பட்டதைக் கூட தாங்கமுடியாத மல்வத்தை பீடத்தின் பிரபல பௌத்த பிக்குவான ரம்புக்கவெல விபுசி தேரோ, "இது ஈழத்தை தமிழர் கையில் தூக்கிக் கொடுக்கும் முயற்சி. நாங்களே இந்த நாட்டின் சட்ட பூர்வமான உரிமையாளர்கள். இதனை அனுமதியோம்" என்று கூறியுள்ளார். இதே பாணியிலான கருத்தை மற்றொரு மகாநாயக்க தேரோவான மாதிதி பணதிஸ்ஸ மகாநாயக்க தேரோவும் கூறிவந்தார். மார்கழி 1991 இல் சிறீலங்காவின் பௌத்த கலாச்சார அலுவல்கள் அமைச்சுக்கு ஆலோசகராக இருந்த பௌத்த பிக்குகள் ஐந்து நிபந்தனைகளை எந்தவொரு அரசியற் தீர்வின் போதும் சிறீலங்கா கடைப்பிடிக்க வேண்டும் என சிறீலங்கா அரசுக்கு கட்டளை விதித்தனர். (1) சிறீலங்காவின் இறைமைக்கும், நாட்டெல்லைகளுக்கும், ஐக்கியத்திற்கும் எந்தவித பாதகமும் விளைவிக்காத வகையில் சிறீலங்கா பார்த்துக் கொள்ளல் வேண்டும். (2) எந்தச் சூழ்நிலையிலும் வடக்கும், கிழக்கும் இணைக்கப்படலாகாது. (3) காணிப்பங்கீடு எப்பொழுதும் சிறீலங்கா மத்திய அரசின் கையில் இருக்க வேண்டும். (4) அவ்வாறே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்பும் முற்று முழுதாக சிறீலங்காவின் மத்திய அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். (5) கருத்தளவில் கூட வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்பதை சிறீலங்கா ஏற்றுக் கொள்ளக்கூடாது.

இவ் ஐந்து நிபந்தனைகளும் மீறப்படாத வகையில் ஒரு அதிகாரத் திணிப்புக்கே சிறீலங்கா முயன்று வருகின்றது என்பது, சிறீலங்காத் தலைவர்களின் பேச்சுக்கள் மூலம் தெளிவாகிறது.

இவ்வாறு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பின்னணியில் சிறீலங்கா அரசாங்கம் இயங்கினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னலமற்ற தியாக வேள்வியான தமிழீழ மண்மீட்புப் போரின் முன்னால் நிலை நிற்க முடியாத நிலையில் சிறீலங்கா அரசாங்கம், இலங்கைத் தீவில் தேசிய இனங்களுக்கிடையான முரண்பாட்டுக்கு தீர்வு கண்டேயாக வேண்டிய கால கட்டாயத்துக்கு இலக்காகி வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்றுமே அமைதித் தீர்வுக்கான வழியை நிராகரிக்கவில்லை. மாறாக அமைதித் தீர்வுக்கான வழிமுறைகள் ஊக்கமடைவதை பலப்படுத்தி வருகின்றனர். இவ்வகையிலேயே நல்லெண்ணத் தூதுக்குழுக்களாக யாழ். வந்த கத்தோலிக்க -அங்கிலிக்க -மெதடிஸ் திருச்சபையினரிடம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உருவாவதற்கான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தும்படி கேட்டனர். இதற்குதவியாக (1) பொருளாதாரத்தடையை நீக்குதல் (2) போர் நிறுத்தம் செய்தல் ஆகிய இரு கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர். இவை நடைமுறைப்படுத்தப்பட்டால் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயார் எனவும் கூறியுள்ளனர். அதுவும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பப் பேச்சுக்களை நடாத்தலாம் எனவும் கூறியுள்ளனர். ஆனால் பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கம், தனது பதவியை தக்க வைக்கும் ஆசைக்கு முதலிடம் கொடுத்து அதற்குப் பக்கத்துணையாக பௌத்த சிங்கள வெறியைக் கட்டியெழுப்பக் கூடிய பேச்சுக்களை பேசி வருகின்றது. தந்தை செல்வநாயகம் கூறியதுபோல, "தமிழர்கள் நாட்டைப் பிரிப்பதற்காக இயக்கம் நடாத்தவில்லை. இழந்த உரிமைகளை மீட்பதற்காகவே விடுதலை இயக்கத்தை நடாத்துகிறார்கள்". இதனை சிறீலங்கா உணர்ந்தால் அழிவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். இல்லையேல் சத்தியம் தன்னைத் தானே நிலை நிறுத்திக் கொள்ளும்போது ஏற்படக்கூடிய இழப்புக்களை இலங்கைத் தீவு சந்தித்தே ஆகவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிவிடும். இதனை உணர்ந்தே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் அமைதியுடன் பாதுகாப்புடன் வாழக்கூடிய வகையில் 'தமிழர் தாயகம்' அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்கத் தயார் எனத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறியுள்ளார். இது உணரப்படுமானால் போருக்கான சூழ்நிலை தவிர்க்கப்படும். ■

# போருக்கு புதிய தளபதி தயாராகின்றார்!

சிறீலங்காவின் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா சுறுசுறுப்பாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தொடர்ந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. படையணிகளைச் சீரமைத்தல், பயிற்சி வழங்கல், புதிய ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல், ஆயுதக் கொள்வனவு என்பவற்றில் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் இராணுவக் கட்டமைப்பிலும் அதிகாரிகள் மட்டத்திலும் பல மாற்றங்களைச் செய்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. அதாவது போருக்கு இராணுவத்தை முடுக்கிவிடும் செயலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனலாம்.

இதற்கு அடுத்த கட்டமாக வடபகுதியில் பாரிய தாக்குதல்களை நடத்த இராணுவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. யுத்தங்களுக்கான உபாயங்களும் விடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பகிரங்கமாகவே அறிவித்துள்ளார். தாக்குதலுக்கு பயிற்சி பெறும் இராணுவத்தினர் வெளிவரும் வரையிலும் வெளிநாட்டில் இருந்து ஆயுதங்கள் வந்து சேரும் அளவிலும் இராணுவத் தலைமை காத்திருப்பதாகத் தெரிகிறது.

இதேவேளை இராணுவத் தளபதி விடுக்கும் அறிக்கைகள், பேட்டிகள் என்பனவற்றில் அவர் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகும், அதுவே முடிந்த முடிபு என்ற ரீதியிலும் பேசி வருகின்றார். ஜெரி டி சில்வாவின் இப்பேச்சானது அவர் உண்மையிலேயே இராணுவத் தீர்வு காணப்பட முடியும் என நம்புகிறாரா? அல்லது அவருக்கு பதவிக்கால நீடிப்பும், பதவி உயர்வும் வழங்கிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றாரா என்று கூறமுடியாது.

இதில் இராணுவத் தீர்வை அவர் முழுமையாக நம்புவதாக இருந்தால் கடந்த கால வரலாற்றையும் உலகின் வரலாற்றையும் அறியாதவர்; அனுபவங்களைப் புறக்கணிப்பவர் என்றே கூறவேண்டும். அவ்வாறு இல்லை ஜனாதிபதியின் விருப்பத்தை பிரதிபலிப்பதாக இருப்பின் இப் பேச்சுக்கள் போலித்தனமானவையாக சிறீலங்கா அரசையும், சிங்கள மக்களையும் ஏமாற்றுவதாக இருக்க வேண்டும்.

"இனப்பிரச்சினையை தீர்த்து சமாதானத்தைக் கொண்டு வர இராணுவத்தினாலேயே முடியும்", "இறுதி வெற்றி பெறப்படும் வரை யுத்தத்திற்கும் யுத்திற்கான பயிற்சிக்கும் மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்" என்ற இராணுவத் தளபதியின் அறைகூவல்கள், புதியதாக இராணுவத் தலைமைப் பதவியை பொறுப்பேற்பவர்கள் கூறிக்கொள்பவைதான். கடந்த காலத்தில் இதுவே நடந்தது. முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னவும் இவ்வாறே கூறினார். ஆனால் சிறீலங்காவின் "புகழ் பூத்த தளபதிகள்" பலர் முயன்று தோற்றுப் போன விடயம் ஒன்றை புதிய இராணுவத் தளபதி மறந்து பேசுவதுபோல் உள்ளதுதான் ஆச்சரியத்துக்குரியதாகும்.

சிறீலங்கா இராணுவத் தோல்விகள், பின்னடைவுகள் இராணுவத்தின் பலவீனத்தால் எழுந்தவை என்பதை விட, புலிகளின் திறமையால் விளைந்தவையே ஆகும். முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, "ஆசியாவிலேயே சிறந்த தொழில்சார் திறனுள்ள இராணுவம்" எனக் குறிப்பிட்டுள்ள இராணுவத்தை பலவீனமானது என எவ்வாறு கூறிவிட முடியும்?

இந்நிலையில், இராணுவம் கடந்த காலத்தில் சந்தித்த தோல்விகள் என்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ள தார்மீக பலத்தினாலும், விடுதலைப் புலிகளின் ஆற்றலினாலுமே ஏற்பட்டவையாகும். ஆனால் கடந்த காலத்திலும் சரி, தற்பொழுதும் சரி சிங்கள அரசியல்வாதிகளும் சரி, இராணுவத் தளபதிகளும் சரி அதனைச் சரியாகக் கணிப்பீடு செய்ததாக இல்லை என்றே கூறமுடியும். அவ்வாறு சரியாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருக்குமானால் புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, "ஜனகபுரத் தாக்குதலில் புலிகள் ஒரு சில மணி நேரத்தில் முகாமைத் தாக்கி முடித்துவிட்டார்கள். ஆனால் பூநகரித் தாக்குதலின் போது அவர்கள் பலவீனம் அடைந்தமையால் முகாமைக் கைப்பற்ற 48 மணி நேரம் பிடித்தது" எனக் கூறியிருக்க மாட்டார். இது இராணுவத் தளபதியின் தப்பான கணக்கு மட்டுமல்ல, தவறான தகவலும் ஆகும்.

ஆனால், புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவும் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளும்வரை போராடித்தான் ஆகவேண்டுமானால் தவிர்க்க முடியாததுதான். ஆனால் வரலாறு தந்த பாடத்தைக் கற்க மறுப்பதுதான் விவேகமானதாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. ■

நன்றி: ஈழநாதம்

# புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் தொடரும் என்கிறார் இராணுவ அதிகாரி

கொழும்பு அதிமேற்றிராணியார் மேதகு மார்க்கஸ் பெர்னாண்டோ சமாதானத் தீர்வுக்கும், யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடன் அண்மையில் யாழ் சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால், இராணுவத்தைப் பொறுத்தவரையில் எமக்கு இது பற்றி அறிவித்தல் எதுவும் தரப்படவில்லை என்று இராணுவ தரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் அவ்வதிகாரி, வடக்கில் நடைபெறும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தளர்த்தப்பட மாட்டாது என்றும், இனங்காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது இப்போது தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் பாரிய தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளுவது குறித்து அவர் அபிப்பிராயம் தெரிவிக்க மறுத்துவிட்டார். எமது எதிர்காலத் தாக்குதல் திட்டங்கள் மற்றும் தாக்குதல் இலக்குகள் அல்லது தாக்குதல் நடக்க இருக்கும் நேரகாலத்தைப் பற்றிய தகவல்களை தாம் வெளியிடப்போவதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். ■

# வடக்கு - கிழக்கு இன்றைய நிலைக்கு ஜே. ஆரின் ஆட்சியே பொறுப்பு

## - விஜயவிக்கிரமரத்ன

"வடக்கு - கிழக்கு பிரச்சினையை சிக்கலாக்கியதற்கும், இன்றைய நிலையை இப்பிரச்சினை எட்டுவதற்கும் காரண கர்த்தா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே. எனவே அவர்தான் இப்பிரச்சினைக்கான முழுப்பங்கையும் ஏற்க வேண்டும். வடக்கு - கிழக்கு பிரச்சினை இன்று யாராலும் எந்தவிதத்திலும் தீர்க்க முடியாத கட்டத்தை அடைந்துவிட்டது" இவ்வாறு சிறீலங்காவின் மத்தியமாகாண எதிர்க்கட்சித் தலைவர் விஜயவிக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி கருத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கு முன்பாக எமது நிலைமையை நாம் உணர வேண்டும். இன்று இந்த அளவுக்கு நாடு தீப்பற்றி எரிவதற்குக் காரணம் ஜே. ஆரின் ஆட்சி தான். எனவே அவர்இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க முடியாது என்றார். ■

# புலிகளுக்கு வெற்றி வேண்டி முல்லையில் யாகம்

சிறீலங்காப் படையினருடனான போரில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற வேண்டும் எனவும், தமிழீழ மக்களுக்கு சுபீட்சமான வாழ்வு கிடைக்க வேண்டும் எனவும், முல்லைத்தீவு மக்கள் யாகம் ஒன்றினைச் செய்துள்ளனர். பத்து நாட்கள் இந்த யாகம் செய்யப்பட்டது.

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் அமைந்துள்ள ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலிலேயே யாகம் நடைபெற்றது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் யாகத்தில் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டு இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்த காலத்திலிருந்து அப்பகுதி மக்கள் இந்த யாகத்தினை வருடந்தோறும் நடத்தி வருகின்றனர். ■

# தப்பி ஓடிய படையினரைப் பிடிப்பதற்கு புதிய திட்டம்

■ இராணுவ அதிகாரி கூறுகிறார்

வடபகுதி முகாம்களில் இருந்து தப்பியோடிய பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட படையினரைத் தேடிக் கண்டுபிடிப்பதனைத் துரிதப்படுத்தப் போவதாகவும், அதுவே தம் முன் உள்ள முக்கிய பணி எனவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்வது தொடர்பாக விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது கிடைத்துள்ள புள்ளி விபரங்களின்படி பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை இவ்வாறு தேடிக்கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை தப்பியோடுபவர்கள் பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் அரசியல்வாதிகளுடன் இணைந்து தம் செல்வாக்கின் மூலம் வேறு பல தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், "சுயவிருப்பின் பேரில் சரணடையும் தப்பியோடிய படையினருக்கே மன்னிப்பு வழங்கப்படும். தவிர இன்னும் தலைமறைவாக வாழும் படையினருக்கு நாம் மன்னிப்பு வழங்கப்போவதில்லை" இதுவே இராணுவத் தளபதியின் கொள்கை என அப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ■

# தலைவர் பிரபாவின் பணிப்பில் சிங்கள மீனவர் விடுதலை

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் விசேட பணிப்பின் பேரில் தமிழீழக் காவல்துறையின் பாதுகாப்பில் இருந்த சிங்கள மீனவர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். கபிரியல் பேர்னாண்டோ எனும் இவர் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் இச் சிங்கள மீனவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியிடம் ஒப்படைத்தார். திருமலையைச் சேர்ந்த பேர்னாண்டோ கடந்த நவம்பரில் நாகர் கோயில் கரையோரமாக வைத்து தமிழீழக் காவல்துறையினரால் கைதாகியிருந்தார். ■

# விடுதலைப் புலிகளுடன் மகளை இணைத்த தாய்

விடுதலைப் போராட்டத்திற்காக, தனது மகளை தாயார் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துள்ளார். இளவாலையில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசிக்கும் திருமதி இரத்தினசிங்கம் என்பவரே, தனது மகளை புலிகள் இயக்கத்தில் சேர்த்தார்.

இத்தாயாருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். இதில் ஒருவர் மண்மீட்புப் போருக்குப் பங்களித்துக் கொண்டிருந்தபோது மரணத்தைத் தழுவிக்கொண்டார். ■

# இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு அதிரடிப்படை செல்லத் தடை

மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளினுள் விசேட அதிரடிப்படையினர் செல்லக்கூடாது என இராணுவத்தினர் அதிரடிப்படையினரை எச்சரித்துள்ளனர். இதனால் சிறீலங்கா இராணுவம் முற்றாக வெளியேறிய பின்னரே அப்பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் தமது நிலைகளை அமைத்துக் கொள்கின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு பெரிய கல்லாறு பகுதியில் விசேட அதிரடிப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். மட்டு -கல்முனை வீதியில் இது அமைந்துள்ளது. மார்ச்சில் நடத்த உள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டே இப்புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் வாகனங்கள் சோதனைக்குள்ளாகி வருகின்றன. ■

# சிறீலங்காவின் பொருளாதாரம் யுத்தத்தினால் பெரும் நெருக்கடி

யுத்தத்தினால் ஏற்பட்ட அதிக செலவீனத்தினால் சிறீலங்கா அரசாங்கத்தில் பெரிய அளவில் பொருளாதாரத் தாக்கம் ஏற்பட்டு இருப்பதாகவும் பல இன்னல்களுக்கு சிறீலங்கா அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டி இருப்பதாகவும் தெரியவருவதாக 'சந்தேசிய' வானொலி தெரிவித்துள்ளது.

தற்போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் இடத்து, இவை மிகத் தெளிவாகத் தெரிவதாகவும், எனவே இது தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம் ஒரு முடிவுக்கு வராதவிடத்து யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற அழுத்தத்தை அரசாங்கத்தின் மீது போடவேண்டும் என்றும் அரசாங்கத்திற்குப் புறம்பாகச் செயற்படும் நிறுவனங்கள் முன்வந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

எனவே யுத்தத்தின் இறுதித் தீர்வின் முடிவு மிக விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இந்த நிலை தொடருமானால் அழுத்த அடிப்படையில் தீர்வுகள் திணிக்கப்படலாம் என்பதையே பெரும்பாலும் எதிர்பார்க்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது எனவும் மேலும் அது குறிப்பிட்டது. ■

# குண்டு வெடிப்பினால் ஒன்பது சிப்பாய்கள் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளி சிறீலங்கா இராணுவ முகாமில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக் காரணமாக ஒன்பது சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி முகாமில் உள்ள வெடிகுண்டுக் களஞ்சியத்தில் இருந்த குண்டு ஒன்றே வெடித்தது. இதன்போதே இச்சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகத் தெரிய வருகின்றது. ■

# பாதுகாப்பு வலயத்துள் எறிகணைத் தாக்குதல்

இரவு மண்டை தீவுப் பகுதியில் இருந்து சிறீலங்காப் படையினரால் யாழ் நகரை நோக்கி நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலின்போது ஏவப்பட்ட எறிகணை ஒன்று யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீடொன்றின் மேல் விழுந்து வெடித்ததினால் வீடு பலத்த சேதம் அடைந்துள்ளது. ஏ. சுப்பிரமணியதாஸ் என்பவர் குடும்பத்தினருடன் நித்திரை செய்த அறையின்மேல் கூரையில் இந்த எறிகணை விழுந்து வெடித்ததினால், அவ்வீட்டின் ஒரு பகுதி சேதமாகியது. ஆயினும் எவரும் காயம் எதுவுமின்றித் தப்பிக் கொண்டனர். அத்துடன் இவ்வீட்டின் அயலிலுள்ள வீடுகளின் கண்ணாடிகள் நொருங்கியுள்ளதோடு இப்பகுதியில் நின்ற தென்னை மரங்கள் சிலவும் சேதம் அடைந்துள்ளன. இதையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி செற்றிக் பிரதா சேதமடைந்த வீட்டை பார்வையிட்டார். ■

# அதிகரித்த விலையில் செக். டாங்கி கொள்வனவு

செக்கோசெலவாக்கிய யுத்த 'டாங்கிகள்' கொள்விலையில் அதன் உண்மையான விலையை விட சுமார் 150 வீதம் அதிகவிலையில் சிறீலங்கா இராணுவத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

செக்கோசெலவாக்கியா அரசாங்கத்துடன் சிறீலங்கா அரசாங்கம் யுத்த டாங்கிகளைக் கொள்வனவு செய்யக்கூடிய நேரடியான வாய்ப்புகள் இருந்தபோதிலும், யுத்த டாங்கிகளை ஏன் சிறீலங்கா அரசாங்கம் இவ்வாறான அதிகரித்த விலையில் கொள்வனவு செய்ய வேண்டும் என அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் யுத்த டாங்கிகளை இராணுவத்தினருக்கு வழங்கியவரான ரஜ்ஜீத் ஜயரேத்தி, முன்னாள் கடற்படை உயர் அதிகாரியின் மனைவியின் சகோதரராவார். இவர் இராணுவத்தினருக்கு தொடர்ந்து ஆயுத சப்ளை செய்யும் பிரிட்டன் ஆயுத உற்பத்தி நிறுவனமொன்றில் இலங்கைப் பிரதிநிதியாகச் செயற்படுபவர். இவரின் சகோதரர் ஒருவர் இராணுவ பிரிகேடியர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# வல்வெட்டித்துறை-பருத்தித்துறை கரையோரம் மீது பீரங்கித் தாக்குதல்

■ ஒருவர் அதிர்ச்சி மரணம்; மூவர் காயம்

வடமராட்சிக் கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறீலங்காக் கடற்படையினர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறைக் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான பயங்கரத் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடற்படையினரின் இத்தாக்குதலுக்கு இலக்காகி ஒரு வயோதிபர் அதிர்ச்சியால் மரணமானார். ஒரு யுவதி உட்பட மூவர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. பயன்தரும் மரங்கள் நாசமடைந்தன. பருத்தித்துறை துறைமுகப்பகுதியுள்ளும் பீரங்கிகள், செல்கள் விழுந்து வெடித்தன.

கட்டைக்காடு பகுதியிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த டோறா நீருந்து விசைப்படகிலிருந்து ஏவப்பட்ட பீரங்கிகளும், செல்களும் மாறி மாறி குடியிருப்புக்களில் வந்து விழுந்தன.

வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த இராசதுரை சோமசுந்தரம் (வயது 65) என்பவரே அதிர்ச்சியால் மரணமடைந்தவராவர். மற்றும் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தசாமி (வயது 56) காயமடைந்தார். இவரருகில் விழுந்து வெடித்த சன்னங்கள் இவரது கன்னத்தில் காயத்தை ஏற்படுத்தின. வல்வெட்டித்துறைப் பகுதியில் இருந்து தாக்கியபோதே இவர் காயமடைந்தார். சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியில் கிளினராகப் பணிபுரியும் சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரன் (வயது 32) என்பவரும் காலில் காயமடைந்தார். இவர் பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்றுவதற்காக வந்து தங்கியிருந்தபோது காயமடைந்தார். துறைமுகத்தில் விழுந்து வெடித்த செல் ஒன்றுக்கே இவர் காயமடைய நேர்ந்தது. எனினும் அருகில் இருந்தோர் மயிரிழையில் தப்பித்துக் கொள்ள நேர்ந்தது. இவர் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் தாக்கியபோது காயமடைந்தவராவர். மேற்குறித்த இருவரும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் நடந்த தாக்குதலின்போது பரமகுரு பாமினி (வயது 17) என்ற யுவதியும் காயமடைய நேர்ந்தது. இவர் வீட்டில் நித்திரையில் இருந்தபோது இவரது வீட்டைச் சேதப்படுத்திய குண்டு இவரது காலைப் பதம் பார்த்தது. இவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். இவரது வீட்டின் கூரைப்பகுதியும் அருகில் உள்ள சிவன் கோயில் கூரைப் பகுதியும் சேதமடைந்தன.

மற்றும் முனைப் பகுதியில் பல தென்னை மரங்கள் முறிந்தன. சுவர்கள், மதில்கள் சேதமடைந்தன. கம்பர்மலையில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

கடற்படையினர் ஏவிய பீரங்கி செல் குண்டுகள் குடியிருப்புகளுக்கு மேலாக தீச்சுவாலைகளுடன் சென்று வெடித்துச் சிதறியது. வீதியில் காணப்பட்ட வெளிச்சங்களை இலக்கு வைத்து தாக்கியதாகவும் தெரியவருகிறது. ■

# யாழ் வைத்தியசாலையில் நூல்நிலைய வசதி

யாழ் போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் பொதுமக்களின் வசதி கருதி நூலக வசதி செய்யப்பட உள்ளது.

பொதுமக்களுக்கான மேற்படி நூலக வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் யாழ். மாவட்ட றோட்டறிக் கழகம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. வெளிநோயாளர் பகுதியில் காணப்படும் நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு அண்மையில் மேற்படி நூலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ■

# கொழும்பு நகர் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் 2000 பேர் ஜனவரியில் மட்டும் கைது

தமிழ்ப் படங்கள் திரையிடப்படும் தியேட்டர்களில் இருந்து படம் முடிந்து வெளியேறும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கூட கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய கைதுகளின் போது, கொழும்பில் பரம்பரை 'பரம்பரையாக வாழ்பவர்கள், மற்றும் பல தேர்தல்களில் கொழும்பில் வாக்களித்தவர்கள் கூட தவறவிடப்படுவதில்லையாம். இந்த வருடம் ஆரம்பம் முதல் இது வரை 2000 இற்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ■

# இலங்கைக்கு மீண்டும் இந்திய இராணுவம்: சிறீலங்கா அரசின் புதிய அணுகு முறை

**ஜெயராஜ்**

"வெளி விவகாரங்களைக் கையாளும் நீண்ட அனுபவத்தில் இன்றைய நிலைபோல் இருநாடுகளுக்கும் -இந்தியா சிறீலங்கா -இடையில் ஆழ்ந்த புரிந்துணர்வும், நெருங்கிய நட்புணர்வும் என்றுமே இருந்ததில்லை. அரசியல் சூழ்நிலை நன்றாக உள்ளது. இந்தியாவிற்கும், சிறீலங்காவிற்கும் இருதரப்பு பாதைக்கு வழிவகுக்கும் முகமாக ஒரு ஸ்திரமான பொருளாதார பாலத்தை கட்டி எழுப்புவதன் மூலம் எமது உறவை ஸ்திரப்படுத்தி பலப்படுத்தலாம்."

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். கமீத்தின் இக்கூற்றானது, சிறீலங்கா -இந்தியா ஆகியவற்றின் பொருளாதார ஒத்துழைப்பு குறித்ததாக இருப்பினும், அடிப்படையில் இந்திய சார்பு கொள்கை ஒன்றைத் தெளிவாக சிறீலங்கா கடைப்பிடிக்க முற்படுவதையே காட்டுவதாக உள்ளது.

சிறீலங்கா அரசாங்கம் 1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையானது, அடிப்படையில் இந்திய விரோதப் போக்குக் கொண்டதாக இருப்பினும், அதன் பின்னர் அதன் வெளியுறவுக் கொள்கையானது பெரும்பாலும் இந்தியாவை முதன்மைப்படுத்தியதாகவே இருந்தது.

இதற்கு 1987 ஆம் ஆண்டு ராஜீவ் -ஜே. ஆர். ஜெயவர்த்தனா கையொப்பம் இட்ட ஒப்பந்தம் வழிவகுத்தது. இருப்பினும் ஜனாதிபதி பிரேமதாசா தனது ஆரம்ப கால ஆட்சிக் காலத்தில் இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்தினாலும் இறுதியில், இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவைக் கடைப்பிடித்தார் என்றே சொல்ல முடியும்.

இதற்கு ஜனாதிபதி பிரேமதாசா ஒரு வருடத்தில் மூன்று தடவை இந்தியாவுக்கு விஜயம் செய்ததை சுட்டிக் காட்டப்படுவதுண்டு. ஏனெனில் இதற்கு முன்னர் எந்தவொரு சிறீலங்கா ஆட்சியாளரும் ஒரு வருடத்தில் மூன்று தடவை இந்தியாவுக்கு விஜயம் செய்ததில்லை.

இவ்வுறவு நிலை அமைச்சர் கமீத் கூறியதுபோன்று, இன்று பெரும் பலம் பெற்றுள்ளது. அதாவது அமைச்சர் கமீத் இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பாகக் குறிப்பிடுகையில், "இன்றுவரை இப்பிராந்தியத்துக்கு வெளியேதான் நாம் பார்த்தோம்..... ஆனால், பாக்கு நீரிணைக்கு அப்பால் பாய்ந்து செல்லக்கூடிய வாய்ப்பிருக்கையில் ஏன் இவ்வளவு தூரத்தையும் கடந்து ஐரோப்பிய சமூகத்துக்குச் செல்லவேண்டும்?" எனத் தெரிவித்துள்ளமையானது இந்தியாவுடனான உறவில் சிறீலங்கா காட்டும் கரிசனையையே வெளிக்காட்டுவதாக உள்ளது.

ஆனால், பொருளாதார ரீதியாக அமைக்கப்படும் இந்நெருக்கமான உறவின் அடிப்படையே சிறீலங்க -இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையின் அடித்தளமாகவும் மாறிவருகின்றது. இதன் அடிப்படையிலேயே மீண்டும் ஒருமுறை இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் அழைப்பதற்கான சிந்தனையின் அடித்தளத்தை சிறீலங்கா அரசிற்கு கொடுப்பதற்கு முற்பட்டதெனலாம்.

அண்மையில் சிங்கள -ஆங்கில வார இதழ்கள் -சிறீலங்கா அரசாங்கக் கட்டுப்பாட்டில் இல்லாதவை -மீண்டும் ஒரு தடவை இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியில், சிறீலங்கா அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், இவ்விடயம் டில்லியில் நடைபெறவிருந்த இந்திய -சிறீலங்கா கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரால் பேசப்படவிருந்ததாகவும் தெரிவித்தன.

சிறீலங்கா அரசாங்கம் இதனை உடன் மறுத்திருப்பினும், பத்திரிகையில் வெளியான இத்தகவல்களை பெரும்பாலும் ஊர்ஜிதமானவை என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். இதற்கு அண்மைக் காலத்தில், குறிப்பாக கடந்த வருட இறுதியில் பூநகரியில் சிறீலங்கா இராணுவம் சந்தித்த தோல்வியானது முக்கிய காரணமாக இருந்ததெனவும் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு ஆதரவாக அண்மைக் காலத்தில் சில அரசியற் தலைவர்களும் கருத்து வெளியிட்டமையானது அரசாங்கம் இவ்வழி குறித்து சிந்திக்க வாய்ப்பாக இருந்தது.

ஆனால், இந்திய இராணுவ உதவியைப் பெறுதல், பயன்படுத்துதல் என்பது புது முயற்சியல்ல. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி சுமார் ஒரு வருடம் தாண்டிய நிலையில், இராணுவ வெற்றி நிச்சயிக்கப்படாத நிலையில் இந்தியாவுடன் இணைந்து கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றி, சிறீலங்கா அரசாங்கம் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது. ஆயினும் இந்தியா இவ்விடயத்தில் வெளிப்படையாகப் பெரிதும் அக்கறை காட்டவில்லை. இருப்பினும் மறைமுகமாக சிறீலங்காவுடன் கணிசமான அளவில் ஒத்துழைத்தது.

**சிறீலங்காவின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பேர்னாண்டோ காலத்தில் பாக்கு நீரிணையிலும், வங்காள விரிகுடாவிலும் கூட்டு ரோந்துக்கு சிறீலங்கா ஆர்வம் காட்டிய போது அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்த இந்தியா, சிறீலங்கா கடற்படையுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஒத்துழைக்கவும் தயார் நிலையில் இருந்தது. இது வங்காள விரிகுடாவில் சிறீலங்காக் கடற்படைக்குப் பெரும் உறுதுணையாக இருந்தது.**

**இதேபோன்றே சிறீலங்காப் புலனாய்வுத் துறையினருக்கும் இந்திய புலனாய்வுத் துறையினருக்கும், இரு நாட்டுப் பொலிசாருக்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு உருவாகியிருந்தது. இதன் அடிப்படையானது தகவல் பரிமாற்றம் என்பதற்கு அப்பால், கைது செய்யப்படுபவர்கள் மீதான நேரடி விசாரணை வரையும் சென்றது.**

இதில் இந்தியா கடைப்பிடித்த தனித்துவமான அம்சமாக இருந்தது, கூட்டு நடவடிக்கைக்கு உடன்படாமையேயாகும்.

இதுவே இன்று சிறீலங்கா அரசாங்கத்தை புதியதொரு கோணத்தில் அணுகச் செய்துள்ளதெனலாம்.

இவ்வணுகுமுறையே தனித்துவமான ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைமூலம், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய அனுமதிக்கும் நடவடிக்கைக்கு இந்தியப் படையை அழைக்க எண்ணியமையாகும்.

ஆனால், இது குறித்து சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ள எத்தனித்த இராஜதந்திர அணுகுமுறையானது மிகவும் நேர்த்தியானதாகவும் நன்கு சிந்தித்து முடிவெடுக்கப்பட்டதாகவும் இருந்ததென்பதை தகவல்கள் வெளிக்காட்டுகின்றன. இந்தியத் தரப்பு தேவை ஒன்றை மையப்படுத்தி தனது இராஜதந்திர நடவடிக்கைகளை சிறீலங்கா மேற்கொள்ள முற்பட்டுள்ளமையே இதில் முக்கியமான அம்சமாகும்.

தலைவர் பிரபாகரன் இந்தியாவில் ராஜீவ் கொலையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதனால், ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியா இதில் அக்கறை காட்டக்கூடும் என சிறீலங்கா கருதுகின்றது. இது தவறான மதிப்பீடும் அல்ல. இதன் அடிப்படையில் இந்தியாவின் தேவைக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ற ரீதியில், சிறீலங்கா அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது என்ற ரீதியில் சிறீலங்காவின் இவ்வழைப்பு அமைந்துள்ளது எனலாம்.

ஆனால், இவ்விவகாரத்தில் -தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தில் -இந்தியாவின் தலையீட்டை தவிர்ப்பதற்கும் ஏற்ற விதத்திலேயே சிறீலங்கா தனது அணுகுமுறையை ஏற்படுத்த விரும்பியது. அதாவது தலைவர் பிரபாகரன் விவகாரத்துடன் இவ்விடயம் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பது சிறீலங்காவின் குறிக்கோளாகும்.

அத்தோடு வடக்கிற்கு அப்பால் இந்திய இராணுவத்தை அனுமதிப்பதையும் சிறீலங்கா விரும்பவில்லை. கிழக்கில் இந்திய இராணுவத்தை அனுமதிப்பது என்பது அப்பகுதியில் புதிய நெருக்கடிகளையும், சிறீலங்கா அரசின் கிழக்கு குறித்த நிலைப்பாட்டையும் குழப்புவதாக அமைந்து விடக்கூடும் என்பதே சிறீலங்காவின் இத்தீர்மானத்திற்குக் காரணமாகும்.

இதனை சர்வதேச ரீதியாக உறுதிப்படுத்தவும் சிறீலங்கா அரசாங்கம் விரும்பியது. இதன் வெளிப்பாடாகவே இராணுவத்தை அனுப்ப இந்தியா அனுமதிக்கும் பட்சத்தில் இவ்விடயம் தொடர்பாக ஐ. நா. வுடன் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பாகவும் சிறீலங்கா ஆராய முற்பட்டதெனலாம். அதாவது இந்திய வருகையையும், வெளியேற்றத்தையும் ஐ. நா. மூலம் சிறீலங்கா உறுதிப்படுத்த விரும்பியது.

இதேவேளை சிறீலங்கா, இந்திய இராணுவத்திற்கு இச்சந்தர்ப்பத்தை வழங்குவது மூலம், தனது இரு குறிக்கோளை நிறைவேற்ற முடியும் எனக் கருதியது. ஒன்று, தலைவர் பிரபாகரனைச் சிக்க வைப்பதன் மூலம் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முடியும் என்ற திடமான நம்பிக்கை. இரண்டாவது, இவ்வாண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றியீட்டி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுதல் ஆகும்.

சிறீலங்கா அரசு வகுத்துக் கொண்ட இந் நுணுக்கமான இராஜதந்திர அணுகுமுறையானது இந்திய அரசைப் பொறுத்து சில அம்சங்கள் இலாபகரமானதாக இருப்பினும் இந்தியாவின் உள்நாட்டு நிலையும், இவ்வணுகு முறையில் உள்ள பலவீனங்களும் சர்வதேச ரீதியாக இன்று இடம்பெற்றுள்ள சம்பவங்களும் இந்தியாவை அம் முயற்சிக்கு ஆதரவாகச் செயற்பட முடியாமல் செய்துள்ளது என்றே கூறமுடியும்.

**தலைவர் பிரபாகரனை சிக்க வைக்கும் முயற்சியானது இந்தியாவைப் பொறுத்து தனியாக ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புபட்டது அல்ல. வெளிப்படையான காரணமாக அதனை இந்தியா கூறிக்கொண்டாலும், தென்னாசியாவில் தேசிய இனங்களின் விடுதலைப் போருக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும், விடுதலைப் புலிகளின் இயக்கமும் அதன் தலைமைத்துவமும் இந்தியாவைப் பொறுத்து ஒப்புக் கொள்ள முடியாததொன்று என்பதே உண்மையாகும்.** ஆகையினால் சிறீலங்கா வழங்க முன்வந்த சந்தர்ப்பம், இந்தியாவின் அடிமனதில் சில அபிலாசைகளையும், தூண்டுதல்களையும் ஏற்படுத்தக் கூடியதாயினும், அதில் உள்ள முட்டுக்கட்டைகள் பெரும் நெருக்கடிகளை, பின்னர் விளைவிக்கும் என்பதை இந்தியா ஓரளவு சரியாகக் கணிப்பிட்டுள்ளது என்றே கொள்ளலாம்.

முதலில் இந்தியா இன்று தனது இராணுவத்தை வெளிநாட்டுக்கு அனுப்பும் நிலையில் இல்லை என்றே கருதப்படுகின்றது. இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் பெருந்தொகை இராணுவம் பயன்படுத்தப்படுவது குறித்து, ஏற்கனவே இராணுவ உயர்பீடத்திற்கும் அரசுக்குமிடையில் மனத்தாங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இந்திய விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு உள்நாட்டுப் போர்களில் இராணுவம் பயன்படுத்தப்படுவதினால், இராணுவம் கட்டுக்கோப்பை இழந்து வருவதோடு பயிற்சி அளிப்பதற்கான நேரம் போதவில்லை என்பதும் இராணுவச் சிப்பாய்கள் பெரிதும் மனச்சோர்விற்கும் மன உளைச்சல்களுக்கும் உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்தியா இராணுவத்திற்கு என ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பங்கு உள்நாட்டுப் போருக்கு பயன்படுத்தப்படுவதிலும் அதிருப்தியுள்ளது.

இந்நிலையில், மீண்டும் வெளிநாட்டிலாயினும் ஓர் உள்நாட்டுப் போர் மாதிரியிலான கெரில்லாப் போர்முறைக்கு இந்திய இராணுவம் முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் முன்னர் மேற்கொண்ட முயற்சியில் தோல்வியுற்ற பின்னர், மீண்டும் ஒரு முறை அதே முயற்சியில் தோல்வியுற நேரிடின் அது இந்திய இராணுவத்தின் 'இமேஜை' முற்றாகவே அழித்துவிடக் கூடியதாகும். அமெரிக்க இராணுவத்திற்கு அண்மையில், சோமாலியாவில் ஏற்பட்ட படிப்பினையானது இந்திய அரசிற்கு முன்னுதாரணமாக இருந்திருக்கலாம்.

**மேலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அணுகுவதென்பது, சிறீலங்கா அரசாங்கம் கோரியிருந்தது போன்ற ஒரு கொமாண்டோப் பாணியிலான மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலினால் எந்தளவிற்குச் சாத்தியமாகும் என்பதும் கேள்விக்குரியதே. ஏற்கனவே இவ்வாறானதொரு தாக்குதலை 1987 இல் இந்தியா யாழ். பல்கலைக்கழக வளாகப் பகுதியில் மேற்கொண்டு படுதோல்வியையும், இழப்பையும் சந்தித்த அனுபவம் அதற்கு உண்டு.**

இந்நிலையில், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சிக்க வைக்கும் முயற்சியானது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான -தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு முழு அளவிலான யுத்தமாகவே இருக்க முடியும். இதன் வெற்றியையும் உறுதி செய்ய முடியாது. இந்நிலையில், இந்தியாவின் இராணுவ முயற்சியானது, மீண்டும் ஒரு முறை சேற்றில் காலை வைக்கும் முயற்சியாகவே அமையும்.

இதற்கு மேலாக, இலங்கைத் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழகத்தில் இன்றுள்ள நிலை, மீண்டும் ஒருமுறை இந்தியா இராணுவத்தை அனுப்பிய பின்னர் நீடிக்குமா? என்பது சந்தேகத்துக்குரியதே.

ஏற்கனவே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்த கொள்கை தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பதோடு இந்தியா தமிழருக்குத் துரோகம் இழைத்தது என்ற கருத்தும் கணிசமான அளவில் உள்ளது. இந்நிலையில் தமிழருக்கு எதிரான முழு அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை நடாத்த இந்திய மத்திய அரசு முயல்வது சில நெருக்கடிகளை தமிழகத்தில் உருவாக்கக் கூடும்.

இதற்கும் மேலாக சிறீலங்கா அரசு, கடந்த காலத்தில் நடந்து கொண்ட முறையானது இந்தியாவைச் சிந்திக்க வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் கடந்த காலத்தில் குறிப்பாக 1987 ஆம் ஆண்டு இந்திய -சிறீலங்கா உடன்பாட்டிலும் அதன் பின்னர் நடந்த நடவடிக்கையிலும் இந்திய இராஜதந்திரத்திற்கு பெருத்த தோல்வியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது என்பதே பலரதும் அபிப்பிராயமாகும்.

**தொடர்ச்சி 13ம் பக்கம்.....**

# இரண்டாம் பதவிக் காலத்தில் அரியணை ஏற டி.பி.விஜேதுங்கா தயார் செய்கிறார்

சிறீலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது இரண்டாவது பதவிக் காலம் குறித்து மிகவும் அக்கறையாகவே இருந்து வருகின்றார். இதற்கென கடந்தகால சிறீலங்கா ஜனாதிபதிகள் போன்று இவரும் தனது தற்போதைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் முனைப்பாக இருப்பதாகத் தெரிகிறது.

இரண்டாவது பதவி நிலைக் காலத்தைக்கொண்ட டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கைகள் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஒன்று தனது 'வாக்கு வங்கி'யை பௌத்த -சிங்கள அடிப்படை வாதத்தில் இருந்து உருவாக்க முனைகின்றார். இதில் அவர் கணிசமான வெற்றியும் கண்டுள்ளார். இது இன்று மறைமுகமான ஓர் அம்சமாகவும் இல்லை.

டி. பி. விஜேதுங்காவின் இப்போக்கு குறித்து பி. பி. சி. அரசியல் விமர்சகர் கல்பனா ஐசக் "எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுவதற்காக டி. பி. விஜேதுங்கா சிங்களத் தேசியவாதத்தைப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றார். இலங்கையில் சிங்கள தேசியவாதம் ஓர் அரசியல் சக்தியாக மீண்டும் வெளிப்படுகின்றது" எனக் குறிப்பிடுகின்றார்.

டி. பி. விஜேதுங்காவின் இரண்டாவது நடவடிக்கையாக எதிர்க் கட்சிகளைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையுள்ளது. இது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பாணியிலானது. இவ்விடயத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என முக்கிய கட்சிகள் வரை இவரது கை நீண்டுள்ளது. இந் நடவடிக்கையின் மூலம் சி. சு. கட்சியின் தேசிய அமைப்பாளர் கட்சியைவிட்டு வெளியேறினார். இ. தொ. காவின் செயலாளரும், மேலும் பலரும் தலைமையுடன் முரண்பட்டுக் கொண்டுள்ளனர். ஜ. ஐ. தே. முன்னணித் தலைவரே கட்சியைவிட்டு ஐ. தே. கவுடன் இணைந்துகொண்டார். செயலாளர் காலம் கனிந்து வரும்வரையில் காத்துக் கொண்டுள்ளார்.




இவ்விரு நிலைகளிலும் கணிசமான வெற்றி கண்டுள்ள டி. பி. - விஜேதுங்கா மூன்றாவது நடவடிக்கை மூலமாக தனது பதவியை சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்த விளைகின்றார். அரசியலமைப்பு முறையில் செய்யப்படும் மாற்றம் ஒன்றின் மூலம் இதனை நிறைவேற்றலாம் என அவர் திட்டமிடுகின்றார். இதன்படி தற்பொழுதுள்ள ஜனாதிபதித் தேர்தல் முறையை இரத்துச் செய்துவிட்டு புதிதாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் அதாவது பெரும்பான்மை பலம்பெறும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் முறையை அமுலாக்க முற்படுகின்றார். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இதற்குச் சில காரணங்களையும் கற்பிக்க முற்படுகின்றார்.

இதில் 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு முறை நாட்டில் பெரும்பான்மை சிங்கள சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கும் குழுக்களுக்கு இடையே கருத்து முரண்பாடுகளை, பிளவுகளை ஏற்படுத்துவதோடு, ஒற்றையாட்சி முறைக்கும் பாதகமான சூழ்நிலையை உருவாக்கின்றது என்பதும், அடுத்த தேர்தல் முறையானது சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறிய அளவில் உரிமை கொண்டாடவும் வகை செய்கின்றது எனவும், ஜனாதிபதித் தேர்தல் செலவீடான 40 கோடி ரூபா மீதப்படுத்தப்படும் என்பதும் அவர் வெளிப்படையாகக் கூறியுள்ள காரணங்கள் ஆகும்.

டி. பி. விஜேதுங்கா இவ்வாறு காரணங்களை அடுக்கிக் கொண்டு போனாலும் அவர் கூறியவற்றில், சிறுபான்மை மக்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு மீறிய அளவில் உரிமை கொண்டாடுகின்றனர் என்பதும், அவர் கூறாதவற்றில், இரண்டாம் பதவிக் காலத்தில் எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்பதுமே அடிப்படைக் காரணங்களாகும். சுருக்கமாகக் கூறின் டி. பி. விஜேதுங்காவின் இந்நிலைப்பாடானது அவரது அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான நடவடிக்கை என்பது மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதிகளிடம் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தும் நடவடிக்கையும் ஆகும்.

டி. பி. விஜேதுங்கா ப்தவி ஏற்ற காலத்தில் இருந்தே பொதுவாக அரசியல் அமைப்பு மாற்றத்தைப் பற்றிப் பேசி வருகின்றனர். டி. - பி. விஜேதுங்கா பதவி ஏற்று ஒரு மாத காலத்தில் இந்தியாவிலிருந்து வெளியாகும் 'புரன்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பற்றி இப்போதுள்ள கருத்து இரண்டாகப் பிரிந்துள்ளது. முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அவசியம் என்றனர். இப்போது வெஸ்மினிஸ்டர் முறை வேண்டும் எனக் கூறுகின்றனர்... நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு பரவலான பெரும் அதிகாரங்கள் இருப்பதையிட்டு நான் சந்தோசப்படவில்லை. எனக்கு அப்படியான பெரிய அதிகாரங்கள் அவசியமில்லை" எனத் தெரிவித்திருந்தார்.

**ஜெயராஜ்**

இதற்கு ஏற்றால் போல் சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் அமைப்பு -அரசியல் விவகாரங்களுக்கென புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கென பிரபல சட்டத்தரணியான சொக்ஸியும் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதேவேளை, தேர்தல் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து அரசிலமைப்பில் மாற்றம் செய்வதற்கென பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் கடந்த ஆண்டு யூலை மாதத்தில் நியமிக்கப்பட்டது.

ஆனால், சுமார் ஏழுமாத ஆட்சி அதிகாரத்தின் பின்னர் டி. பி. - விஜேதுங்கா அரசியலமைப்பு முறை மாற்றம் குறித்துப் பேசுவது, முன்னர் அவர் கூறிக்கொண்ட மாற்றத்தில் இருந்து வேறுபட்டதாகவே உள்ளது. அதாவது கடந்த வருடம் யூலையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு 19-88, 1989 ஆம் ஆண்டு ஜனாதிபதி, மற்றும் பொதுத் தேர்தலில், இடம்பெற்ற குறைபாடுகளை நீக்குவதற்கான சிபார்சுகளைச் செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், தற்போது டி. பி. விஜேதுங்கா அறிவித்துள்ளமையானது, ஜனாதிபதித் தேர்தலையே நீக்குவதற்கான சிபார்சாக அமையப் போவதாகவுள்ளது.

டி. பி. விஜேதுங்காவின் இந் நிலைப்பாடு ரீதியான மாற்றமானது, அவர் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரச் சுவையைக் கண்டுகொண்டதன் வெளிப்பாடு என்றே கூற முடியும். பதவி ஏற்ற காலத்தில், தமக்குப் பெரும் அதிகாரங்கள் இருப்பதையிட்டு நான் சந்தோசப்படவில்லை எனக்கூறிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தற்பொழுது தனது பதவியை அடுத்த பதவிக் காலத்திற்கு நீடிப்பதற்கு வசதியாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முற்பட்டுள்ளமையையே இது புலப்படுத்துகின்றது.

> "உலக நாடுகளில் இலங்கை நாட்டில் மட்டுமே சிறுபான்மையினருக்கு சமஅந்தஸ்த்து உண்டு. புத்த தர்மத்தை கடைப்பிடிக்கும் நாம் அதே வழியிலேயே செயலாற்றி வருகின்றோம்."
>
> - டி.பி.விஜேதுங்கா

ஆனால், டி. பி. விஜேதுங்கா, முன்னர் கூறியவை ஓர் ஒப்புக்காக கூறினாரா எனக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னரும் சில முக்கிய அமைச்சர் பதவிகளை அவர் வைத்திருந்தமையானது அவர் நிறையவே அதிகார ஆசையைக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது என சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அரசியலமைப்பில் டி. பி. விஜேதுங்காவால் செய்யப்படும் மாற்றமானது, நன்கு திட்டமிடப்பட்டு, கடந்தகால தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை என்றே கொள்ள வைக்கின்றது. அதாவது ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் உருவாக்கப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஐ. தே. கட்சியை ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து பாதுகாப்பதற்கு எவ்வாறு உதவுகின்றதோ அதே போன்று ஜனாதிபதி பதவியையும் ஐ. தே. க. வினரே தொடர்ந்தும் வகிப்பதற்கான வழிசெய்யும் நோக்கம் கொண்டதாகும். அத்தோடு டி. பி. விஜேதுங்கா தனது இரண்டாவது பதவிக் காலத்தை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டதுமாகும்.

இவ்வாறானதொரு அரசியலமைப்பு மாற்றத்தைத் செய்வதற்கு டி. பி. விஜேதுங்கா இன்று முற்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதித் தேர்தல் வெற்றியில் அவருக்கு எழுந்துள்ள சந்தேகமே காரணமாகும். அதாவது சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய தலைமைத்துவ ஆற்றல், தனக்கு இருக்கின்றதா என டி. - பி. விஜேதுங்காவிற்கு எழுந்துள்ள தடுமாற்றமே ஆகும்.

ஏற்கனவே டி. பி. விஜேதுங்கா தனது ஆதரவுத் தளத்தை பௌத்த -சிங்கள அடிப்படைவாதிகளுடன் இனம் காட்டியுள்ளார். இது ஒருவகையில் அவரது தளத்தைச் சுருக்கியுள்ளது என்றே கூற வேண்டும். ஜே. - ஆர். ஜெயவர்த்தனாவைப் போன்றோ, அன்றி பிரேமதாசாவைப் போன்றோ சிறுபான்மையின் வாக்குகளைப் பெற அவர் முயற்சிக்கவில்லை. மாறாக அவர்களை ஓரம் கட்டவே முற்பட்டு நிற்கின்றார்.

இந் நிலையில் டி. பி. விஜேதுங்கா தனது அரசியல் பலத்தை பலப்படுத்த அரசியலமைப்பையும் தமக்குச் சாதகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். **அதாவது முதலாவது பதவிக் காலம் எதிர்பாராத பிரேமதாசாவின் மரணத்தினால் கிட்டியதென்றால், இரண்டாவது பதவிக் காலத்தை திட்டமிட்ட முறையில் அரசியலமைப்பில் செய்யப்படும் திருத்தத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப் பார்க்கின்றார்.**

அதாவது கடந்த காலத் தேர்தல் அனுபவமே விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிமுகம் செய்ய வைத்தது. 'சுதந்திர இலங்கையில்' நடைபெற்ற தேர்தல்களில் இருந்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டுகொண்டதானது ஐ. தே. - காவினது வாக்கு வங்கித்தனமானது மிகவும் பலமானது என்பதாகும். 1956 ஆம் ஆண்டைத் தவிர (பண்டாரநாயக்கா காலம்) எந்தத் தேர்தலிலும் ஐ. தே. க. சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட குறைவான வாக்குகளைப் பெறவில்லை. 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் எட்டு ஆசனங்களை மட்டுமே ஐ. தே. க. பாராளுமன்றத்தில் பெற்றதாயினும் சுதந்திரக் கட்சியைவிட அதிக வாக்குகளையே பெற்றிருந்தது. இந்நிலையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பது எப்போதும் ஐ. தே. கவிற்கு சார்பாகவே தேர்தல் முடிவுகளைக் கொண்டு வரக்கூடியது ஆகும். சிலவேளை எதிர்க் கட்சிகளின் கூட்டு முறை அமைப்பினாலும், தனிப்பெரும் கட்சியாக ஐ. தே. கட்சியே இத் தேர்தல் முறை மூலம் இருப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும்.

அத்தோடு ஐ. தே. கட்சியின் வாக்கு வங்கியில் தளம்பல் மிகவும் குறைவாகவே உள்ளது. 1960 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட தேர்தல்களில் ஐ. தே. க. எப்போதும் சுமார் 40 வீத வாக்குகளை பெற்றே வந்துள்ளது. கடைசியாக இடம்பெற்ற ஏழு மாகாண சபைத் தேர்தலில் ஐ. தே. க. மூன்று மாகாண சபைகளை இழந்தபோதும் 46. 9 வீத வாக்குகளைப் பெற்றிருந்தது.

ஆகையினால் ஐ. தே. கவின் வாக்கு வங்கியில் டி. பி. விஜேதுங்கா நம்பிக்கை வைப்பதில் தவறில்லை. இந் நிலையில் டி. பி. விஜேதுங்கா தனக்குள்ள தேர்தல் வெற்றிக்கான அனுகூலங்களைவிட ஐ. தே. கவிற்கான தேர்தல் வெற்றிக்கான அனுகூலங்கள் அதிகமாக இருப்பதாகவே கருதுகின்றார். இதற்குக் கடந்த் காலத்தில் தென்னிலங்கையில் இடம்பெற்ற கருத்துக் கணிப்புக்கள் சிலவற்றில் இவரது பெயர் பின்னணியில் இருந்தமையும் காரணமாக இருக்கலாம். இதன் காரணமாக அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் அவர் தனது பதவியை உறுதிப்படுத்திக் கொள்ள முற்படுகின்றார்.

*தொடர்ச்சி 14ம் பக்கம் ....*




**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

## அத்தியாயம்- 5 இன் தொடர்ச்சி

மாலை 6. 30 மணியளவில் எமது அணிகள் பயிற்சியை முடித்துக் கொண்டு மாங்குளம் பயணமாகின. ஒரு ரைக்ரரில் அதே ஏழு பேர் ஏறியிருந்தோம். அழகுக்குப் பதில் இதயன். அவன் வேறு கோஸ்டியுடன் சேர்ந்ததால் எம்முடன் இணையாது இப்போது தான் வந்திருந்தான். இம்முறை வாத்தியார் அவதானமாக இருந்தார்.

"ஓடுற ரைக்ரரில இருந்து தள்ளிப்போட்டு பேந்து கை கால் முறிய, முசுப்பாத்தி என்றவங்கள்!

'போடுற உடுப்பிலையும் அழகையாவும் வரதனுமாய் சேர்ந்து மட்டத்தேளை, எறும்பை விட்டுடுவான்களோ?'

அவர்கள் இருவரையும் தன் கதையில் வர்மன் இழுத்தான்.

"பொறு பொறு இரண்டு பேருக்கும் நல்லாய் குடுக்கிறன்".

வாகனம் விரைந்தது.

இரவின் ஆரம்பத்தில் இன்னும் நிலா வரவில்லை. வெறும் வெள்ளிகள் மட்டும் கூட்டம் கூட்டமாய், தொலைந்த நிலாவை சிமிட்டிச் சிமிட்டித் தேடிக்கொண்டிருந்தன. மேகவேலிகள் இடையிடையே குறுக்கறுத்துச் சென்றன.

சிதைந்துபோய்க் கிடந்த பரந்தன் கட்டடங்களும் மகாவித்தியாலயமும் இருட்டில் லேசாகத் தெரிந்தன. எவ்வளவு சந்தோசமாக மக்கள் வாழ்க்கை நடாத்திய இடம்? இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாய் அழுதுவடிக்கும் குப்பி விளக்குகள் குடிசைகளில் மாத்திரமிருக்க, முன்பு விதம்விதமாய் நிறபல்புகள் பளிச்சிட்ட நகரம் இன்று ஊமையாக, சோகமே உருவெடுத்து குந்தியிருந்தது. ஏனிந்த அவலம்? தமிழரின் தாயகமென்பதால்தான் இப்படியோ? புதியதோர் விதி இனிதாய் சமைத்திடுவோம்.

"பார்த்தீங்களேடா ரவுணும், பள்ளிக்கூடமும் கிடக்கிறகிடையை? இதெல்லாம் அவனுக்கு என்ன செய்ததுகள்? சும்மா எங்கட இடத்த பாழடிக்க வேண்டுமென்று அவன் செய்கிற வேலை". மாஸ்ரர் கறுவியதை இப்போதுதான் கண்டேன். அவரின் குமுறுகின்ற எரிமலை உள்ளத்தை இப்போதுதான் உணர்ந்தேன். கண்களில் ஒரு ஒளி பிரகாசமாக சுடர்விட்டது. உண்மையில் சந்தோசமாக சிரித்துப் பழகும் ஒவ்வொரு போராளியின் மனமும் பூமிக்குள் எரிமலைக் குழம்பு கொதிப்பது போல் உள்ளேயிருக்க, புறத்தோற்றத்தில் அவர்களின் சந்தோசங்கள் மிதக்கின்றன. எரிமலை கீழிருக்க குளிர்ந்து ஓடும் ஆறுபோல்தான் அவர்களது சந்தோசச் சிரிப்பும் அன்பான வாழ்க்கையும்! இது ஒவ்வொரு போராளி விடயத்திலும் உண்மை.

அந்நியனோடு சமராடுகையில் தேசப்பற்று அக்கினிக் குழம்பாய் பாயும். எதிரிகூட புலிகளை வியப்பான். ஒருமுறை இந்திய இராணுவ தளபதி ஒருவர் கூறுகையில், "புலிகளின் ஆயுத ஆட்பலத்தை சரியாக கணித்திருந்த நாம் அவர்களின் ஆன்மபலத்தை (மனோபலம்) சரிவரக் கவனிக்கத் தவறியதால் இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது திணறுகிறோம்" என்றார் - இதேபோன்றுதான் இன்று உலகமே புலிகளைக் கணித்திருக்கின்றது.

எமது பயணம் நீண்டதாய் மிக நீண்டதாய், குடிசைகளை, வயல்களை, வாய்க்கால்களை, காடுகளை கிராமங்களைத் தாண்டி நீண்டு சென்றது.

"மச்சான் கிளிநொச்சி பழைய காம்படியில கொஞ்சம் சிலோவாப் போ, பார்த்துக்கொண்டு போவம்". சலாமிற்கு குரல் கொடுத்தேன்.

"இதுதான் பழைய காம்ப். இப்ப இரண்டு மூன்று மாதத்துக்குள் தான் ஓடினவன். உந்த பெரிய மாடியிலை இங்கால இருக்கிறதுதான் பழைய பொலிஸ் ஸ்ரேசன். உதுக்குள்ள எல்லாம் ஆமி இருந்தவன். பின்னுக்கு ஒரு சின்னக்குளக்கட்டு இருக்கு. அதுக்கு இங்கால அவன்தான் இருந்தவன்".

"இப்பிடி இருந்தவன் ஒன்றையும் உடைக்கேலையே?" இது வாத்தியாரின் குரல்.

"உங்கால வாற கட்டிடங்களை பார்த்தாத் தெரியும். எல்லாக் கடைகளையும் உடைச்சு எரிச்சு உள்ளதெல்லாத்தையும் களவெடுத்தும் போட்டான்கள்".

அந்நிய ஆக்கிரமிப்பில் சிக்கிச் சிதைந்த கட்டடங்கள் கருகிக் கறுப்பாகி, அரைகுறையாய் போட் பலகையுடன் நின்றன.

நகரின் கடைகளெல்லாம் கடந்து கோயிலைக் கடந்துவர "அந்தா அங்க தெரியிறது ஆஸ்பத்திரி. இங்கால திரும்பிப் பாருங்கோ".

ஒரு பெரிய கட்டடம் குகை மாதிரி வெள்ளையாய் உடைந்து போயிருந்தது. தொட்டந்தொட்டமாய் பல கட்டடங்களும்.

"இதுதான் மாஸ்ரர் நெல் சந்தைப்படுத்துற ஸ்ரோர். இதுக்கதான் எங்கட துரோகிகள் இருந்தவன்கள். இதுக்க இருந்து செய்த அநியாயங்கள் சொன்னா கேட்கேலாது. ரெயினிங் என்று சொல்லி ஊர்ப்பெடியள் எல்லாத்தையும் இங்க தான் கொண்டுவந்து வைச்சிருந்தவன்கள்.

இதுக்குள்ள பிடிபட்டிருந்த எனக்குத் தெரிந்த பெடியள் சொன்னவங்கள். தங்களுக்கு முன்னாலேயே எத்தனையோ பெடியள் செத்திருப்பாங்களாம். அநேகமான பொடியள் நிலத்தில துவண்டும் இழுபட்டும்தான் திரிவான்களாம். எத்தனையோ பொம்பிளையள் பெரிசா குளறுவது கேட்குமாம். பின் தரதர வென்று இழுத்துக் கொண்டு போய் ரெலிக்கா வானில் போட்டு காட்டில எரிப்பான்களாம். ஒரு பெடியனை முள்ளுக் கம்பியால கட்டிப்போட்டு கழுத்தைச் சுற்றி ரயரைக் கொழுவி எரித்தவன்களாம்" ஆத்திரத்துடன் கொட்டினேன்.

"ஒரு நாள்..."

"சொல்லாதையடா, என்னால கேட்கேலாது".

இவ்விதம் ஒருமுறை என்னை உலுப்பிவிட்ட அந்தச் சிலுப்பிய கரத்தின் நடுக்கத்திலிருந்து, அந்த உள்ளத்தின் கோபத்தையும் உறுதியையும் உணர்ந்து கொண்டேன்.

"மச்சான், என்ர நெருக்கமான நண்பர் இரண்டு பேர் இப்பிடித் தான்ரா காணாமல் போனவங்கள். ஒரு பிடி சாம்பல் கூட கிடைக்கல்லேயடா. துவக்கில்லாதவனிடம் வீரம் காட்டுற பேடிகளடா".

வாத்தியாரின் இருதுளி சூடான கண்ணீர் என் கரத்தில் சிதறியது. வானை அண்ணாந்து பார்த்தேன். சந்திரன் ஏறத் தொடங்கினான். யானை ஒன்று பிளிறிய புறத்தை வெறித்துப் பார்த்தபடி வாத்தி இருந்தான். முழங்காலில் ஊன்றியபடி ஒற்றைக்கரத்தில் இறுகப் பற்றியிருந்த ஏ.கே. குழல், வாகன அசைவிற்கு ஆடுவது தெரிந்தது. (இது நாம், வாழ்வில் மிக உணர்ச்சிவசப்பட்ட தினம்).

மாங்குளத்தில் ஏனைய அணிகள் தங்கிவிட 3 அணிகள் மாத்திரம் மாங்குள முகாமின் மறுபுறம் வரவேண்டிய தேவையிருந்ததால், சுமார் 40 மீற்றர் தூரத்தினால் செல்ல வேண்டிய இடத்திற்காய் ஏறத்தாழ 40 மைல் தூரம் பயணமானோம். இரவு 1.00 மணியளவில் ஒட்டுசுட்டான் சந்தியில் ஒரு தேநீர்க் கடை ஐயாவை எழுப்பி, தேநீர் வைத்துப் பருகினோம். உண்மையில் எமது போராளிகள் ஒவ்வொருவரும் இரு குவளை தேநீரை அருந்தினர். பசி ஒரு புறமாகவும், பனி மிக மும்முரமாகவும் வாட்டி எடுத்தன.

தேநீர் அருந்திய பின் பயணம் கனகராசன் குளத்தை நோக்கியதாக அமைய, நாம் சகலரும் நித்திரை தூங்க ஆரம்பித்தோம். ஒவ்வொருவற்கும் ஒவ்வொருவர் அணையாக தோள்களைச் சாய்த்து தூங்க ஆரம்பித்தோம். இடையிடையே மூச்சுவிடாதபடி ரைக்ரர் குலுக்கவும் திடுக்குற்று சலாமைத் திட்ட, அவன் விசமமாய்ச் சிரித்து ஓட்டினான். இடையிடையே நித்திரை தூங்கினாலும் தொடர்ந்து 5 நிமிடம் கூட ஒருவரும் நித்திரை கொள்ளவில்லை. இருபுறமும் அடர்ந்த காடுகள் எமக்கு எதிராக ஓட்டம் காட்டின. நிலவு இப்போ நன்றாக மேலெழுந்துவிட்டது. சடுதியான நிறுத்தத்துடன் திடுக்குற்று விழித்தோம்.

"மச்சான் டேய்! உங்கற்றா, எந்தப் பெரிய பாம்பென்று பாருங்கோ".

எங்க? தடக்கியபடி முன்னே பார்த்தோம், ரைக்ரரின் கெட் லைற் ஒளி வெளிச்சத்தைக் கக்க, மண்ணிற வர்ணத்தில் பெட்டி பெட்டியாய் அமைத்து மினுக்கத்தைக் காட்டியது, அந்த 6, 6 1/2 அங்குல அகல உடற்பாகம்.

"உதே மலைப்பாம்பு"?

வாத்தியார் நித்திரை முறிக்க, "இங்க எங்க கிடக்கு மலை. ஒருவேளை கற்றன் பக்கம் இருந்து வந்துதோ?" வேண்டுமென மாஸ்ரரைச் சீண்டினேன்! மாஸ்ரரின் சொந்த இடம் மலைநாடு. கற்றன் என்பார். என்னைப் பொறுத்தவரை, எங்கும் உள்ள ஊர்களெல்லாம் மலை என்ற எண்ணம் உண்டு. மாஸ்ரர் என்னைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்து, "போடா விசரா" என கையைக் காட்டியபடி நகர -"உதுதான்ரா வெங்கிணாந்தி. மச்சான், நீ ரைக்ரரை தலைப்பக்கத்துக்கு கிட்டவா ஏத்து பார்ப்பம்" என்றேன்! ரைக்ரரை றிவேஸ் செய்து, இடதுபுறமாக மெலிந்த உடல் தெரிய அதைத் தலைப்புறமென ஊகித்து, முன்சில்லைப் போகவிட்டு பின்சில்லை ஏற்றி நசியவிட்டான். பாம்பு தலையைத் தூக்கினால் பாய்வதற்கு ஆயத்தமாக நாம் எதிர்ப்புற ஓரத்தில் நின்றுகொண்டோம். வாற்புறமாகத் துடிப்பது தெரிய உற்சாகமானோம்!

"மச்சான் விடாதே காண்பிறேக்க. அந்த இடத்தில போடு என்ன செய்யிறார் பார்ப்பம்".

"உது சாகுமோடா?" மாஸ்ரர் கேட்டார்.

"ஏன் சாகாது? ரைக்ரர் பின் சில்லு ஏறினா தப்புமே! அப்ப கட்டியிழுத்துக்கொண்டு போவம்!"

உற்சாகமாய்க் கூறி முடிப்பதற்குள் கிட்டத்தட்ட எல்லோரும் வாய்விட்டு மனம்விட்டு ஒருங்குசேர, "ஆ... ஐயோ!" என்றோம். ஏனென்றால் அந்த வேகத்தில் 20 அடி நீள வாற்புறத்தால் பெட்டியில் உறைப்பாக ஒரு அடிபோட்டது! கொஞ்சம் எங்கள் மேல் விழுந்திருப்பின் மூவரது காலும் உடைந்து போயிருக்கும். அடுத்தகணம் பாய்ச்சலாக மறுபுறம் வந்தோம்.

"என்ன மச்சான், இந்த அடியடிக்குது. கெட்ட சாமான் போல".

சடார் சடார் எனத் தொடர்ந்து போட," இண்டைக்கு பெட்டிப் பலகை சுக்குநூறுதான் என்றேன்".

மாஸ்ரருக்கு கீழ நிற்கவும் பயம். மேலை நிற்கவும் பயம்!

"போடா விசரா!" அவர் உண்மையாகச் சினந்தார்.

வாய்ப்புறமாக சரசரக்க பெட்டியின் ஓரத்தில் நின்று எட்டிப் பார்க்க, உடலை வளைத்து மெதுவாக உயர்த்தி ரைக்ரரின் முன்புறமாக வளைந்து வந்தது. வாலால் பெட்டிக்கு அடிக்கும் வரை சிரித்துக் கொண்டிருந்த சாரதி சலாம் இப்போது, சீற்றுக்கு மேல் ஏறி நின்றான். அடுத்து எதிர்க்கரை மட்காட்டில் ஏறும் எண்ணம்போல் ஊன்றி நின்றான். அகன்ற கழுத்தைத் திருப்பி வாய்க்குள் இருந்த இரையை மெதுவாகக் கக்கியது. ஒரு பஞ்சுபோன்ற முயல் இரத்தக் களரியில் முகம் எது உடல் எதுவென தெரியாது சிதைந்து கிடந்தது.

"மச்சான், இரையைக் கக்கிட்டுது. இனி கலைச்சு கலைச்சு கடிக்கப் போகுது" என்று பயம் காட்டி தோளைப் பிடித்து தள்ளுவதாக உலுப்ப, றஞ்சன் "ஐயோ என்றான்! சிரித்தபடி கவனமாய் நின்றோம். வாயை அகலத்திறந்து முன்சில்லின் றிம் பகுதி வெட்டுக்குள் கொடுத்து ரயரைக் கௌவியது. அப்போதுதான் பார்த்தோம். சிறு முயற்குட்டிகள் மூன்று, லைற் வெளிச்சத்தில் மும்முரமாக எதையோ தேடின; மணந்து மணந்து பிஞ்சுக் கால்களால் விரைவாகத் தேடின. ஐயோ! பார்க்க முடியவில்லை! இந்தக் கொடியவனால் கொல்லப்பட்ட பாசமிகு அம்மாவைத் தேடுகின்றன. அது பாலுக்காகவும் இருக்கும், பாசமாகவும் இருக்கும்.

முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்ள, கொடியவனின் வால் ஒருமுறை உயர்ந்து தாழ, வாய் அகலமாய் விறைக்கத் தொடங்கியது. முயற்குட்டிகள் பாவம். தாயைத் தேடுதுகள். பாம்பைக் கட்டி இழுக்கும் உற்சாகம் இல்லாது சலிப்புடன் வாகனத்தை இயக்கி மறைந்தோம். போராளிகள் ஈரமான உள்ளம் படைத்தோர்கள். அவர்கள் தங்களை விடப் பிறரது இழப்புக்களை, அற்ப பிராணியின் உயிர்ப் பிரிவையும் தாங்க மாட்டாதவர்கள். தம்மைத் தாரைவார்ப்போர்க்கு இப்படி ஒரு மனம்!.

எந்தச் சூழலிலும் ஒரு வாழ்க்கைப் போராட்டம் இடம்பெறத்தான் செய்கின்றது. இழப்புகள் எங்கோ நடக்கத்தான் செய்கின்றன. அன்று பசுவின் கன்றை முதலை பிடிக்கின்றது. அழுங்கு ஒன்று மயிலைக் கொல்கின்றது. பாம்பை மயில் கிழிக்கின்றது. ஆரைக் கண்டாலும் எச்சரிக்கும் ஆட்காட்டியின் முட்டையையும் வயல்களில் ஏதோ திருடுகிறது. முயலை பாம்பு பிடிக்க குழந்தைகள் தேடுகின்றன. இதுதான் உணவுக்கான உயிரின வாழ்வுப் போராட்டம் போலும்!

மனிதன் வேறுபட்டவன், அவற்றைவிட மேலானவன் எனக் காட்ட வேண்டாமா? அவன் உணவுக்காக தன் மனித இனத்தவனைக் கொல்லவில்லை. ஆனால் ஆக்கிரமிப்பிற்காகக் கொல்கிறான்! அடக்கி அடிமையாய் ஆள்கின்றான். அவன் கொடூரமானவன் அப்படியானவனை அழிப்பது வெங்கணாந்தியை, முதலையைக் கொல்வதைவிட உத்தமமான செயல். அவனை அழித்து அபயம் அளிப்பவனே ஆத்மஞானி. ■

## அத்தியாயம் - 6

காலை 5.10 மணியளவில் பனிப்புகார் மண்டியிருக்க அவசர அவசரமாய் ஓங்கி வளர்ந்திருக்கும் பற்றைக் காட்டிடையே ரைக்ரரை உள் நுழைத்து வீதியால் செல்லும் எவருக்கும் தெரியாதவண்ணம் நன்றாக மறைத்தபின், முகத்தை கழுவுவதற்காய் குடிசை தேடி நடக்கத் தொடங்கினோம். இருள் அகன்றது. பனிப்புகார் மூட்டமாக இறுகி நின்றது. வீதியின் இடதுபுறமாக சற்று உள்ளே ஒரு சிறிய வீடு தென்பட்டது. "வெளியில நின்று கூப்பிட்டுப் பிரயோசனமில்லை உள்ளுக்குப் போவம்" என்று ரஞ்சன் கூற, உள்ளே கடப்புத் தடிகளில், மேலிரண்டு தடிகளை கழற்றிய பின் உள்ளே நடக்க ஆரம்பித்தோம்.

பாதையின் இரண்டு மருங்கிலும் செவ்வரத்தைச் செடிகள் சிவப்பும் மஞ்சளுமாக பூத்திருந்தன. சிறிது நேரத்திற்கு முன்னர்தான்

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# போர் உலா....

அவை முகை அவிழ்த்திருக்க வேண்டும். ஈரமான சுருக்கம் நீங்காத இதழ்களுடன் நின்றன. மூலையில் பெரிய வேம்பு மரமும் படர்ந்து நிழலை ஏராளமாகக் கொடுத்தது. வேம்பின் அடியில் சின்னஞ்சிறிய கோயில் ஒன்று.

"அம்மா! அம்மா! ஒருக்கா கிணற்றடியில முகம் கழுவலாமே?"

"அதுக்கென்ன, வாருங்கோ இதாலை".

வீட்டின் நாயகன் வழிகாட்ட பின் தொடர்ந்தோம்.

"இந்தாங்கோ பற்பொடி. கழுவுங்கோ", என்றார்.

கிணற்றுக்கு அருகாகத் தோட்டம், பச்சைப் பசேலென பரந்து கிடந்தது. மரக்கறிப் பயிர்களுடன் செழித்திருந்தது. கத்தரிகள் காய்களை சுமக்க முடியாமல் பனி ஈரத்தில் தடுமாறின.

"இவற்றிற்கு என்னவென்று தண்ணி ஊத்திறனீங்கள். மண்ணெண்ணை சரியான விலையே"?.

"மண்எண்ணை ஆருக்குத் தேவை? உதிலை கிடக்கிற பட்டையால இறைச்சுத் தள்ளலாம். மகன் துலாமிதிப்பான். நான் ஒரு இரண்டு மணித்தியாலத்தில இறைச்சுப்போடுவன்".

அருகில் நின்ற அந்த மகன் இப்போதுதான் ஒன்பது வயதை அடைந்திருப்பான் போலத் தோன்றினான். யாழ்ப்பாணத்துப் பக்கத்தில இப்படியே? இந்த நேரம் எழும்பியிராதுகள். இல்லாட்டி ரியூசனுக்குப் போயிருக்குங்கள். மனதுக்குள் எண்ணிக் கொண்டேன்.

இன்று அந்நிய உணவுக் கப்பல்களையும் லொறிகளையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இத்தகைய காரணிகளால் காலனித்துவ காலத்திலிருந்து படிமுறையாக சிதைக்கப்பட்ட எமது சொந்த சுய பொருளாதாரம் மீண்டும் என்று, முளைவிடுமோ என்று எம்மக்கள் உணரத் தலைப்படுகின்றார்களோ, அன்றுதான் நாம் எம்மைச் சீர்படுத்தி அந்நிய தேவையை செயலிழக்கச் செய்யலாம்.

"தம்பியவை வாருங்கோ, தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம்".

"இல்லை அங்க குடிக்கிறம்".

"பரவாயில்லை, வாருங்கோ".

ரம்ளர் நாகரீகமில்லாது மூக்குப் பேணிகளில் வார்த்து தாயார் தந்த பசும்பால் தேனீரை மணக்க மணக்க குடித்தோம். உற்சாகம் மீண்டும் குடிகொண்டது.

"அப்ப போட்டுவாறம்".

வரிசையாய் ரோட்டுக்கு விரைந்தோம். வீதியில் சிறிது தூரம் நடந்து ஒரு மதகில் அமர்ந்தோம். பழைய பழக்கம் தொத்திட்டுதப்பா என்ன செய்யிறது? என கையைக் காட்டியபடி மாஸ்ரர் அருகில் அமர்ந்தார். குரங்கு ஒன்று முன் வீரையில் இருந்து பார்த்துக் கொண்டிருக்க "உங்க பார் எங்கட பாட்டனை" -என்று கல்லை வீச அது பாய்ந்துபோனது.

ராத்திரி துப்பரவாக நித்திரையில்லை. எங்கையாவது கட்டையில் சாயவேணும். மக்கன்றோ அண்ணா கொண்டு வந்த பாணையும் வாழைக்குலையையும் தின்று முடித்தபடி ஆலோசித்தோம்.

"மத்தியானம் எங்கையடாப்பா இருப்பியள்"? மக்கன்றோ அண்ணர் கேட்டார்.

"தின்றுபோட்டு விடிய விட்டத் துக்குப் பக்கத்தில நித்திரை கொள்ளுவம். வேற ஒரு இடமும் போகமாட்டம்".

"நான் போறன், உதுக்க பிஸ்கற்றும் கோல்மன்சும் இருக்கு".

"சரியண்ணை, போயிட்டு வாங்கோ".

தலை மறைந்தவுடன் உரைப் பையில் பாய்ந்தார்கள். "விடுங்கடாப்பா நான் எடுத்து தாறன், "மாஸ்ரர் பிஸ்கற்றை உடைத்துக் கொடுத்தார்.

அட்டகாசமான காற்று. நல்லா நித்திரைவரும். தடியால் கஞ்சல்களை ஒதுக்கி சாக்கை விரித்துச் சாய்ந்தோம். மாலை சிறிய நடையொன்றைப் போட்டு வயல்களைக் கடந்து பெரிய மாந்தோட்டமும் ஏதோ அரச கட்டடமும் குறுக்கிட, கேட்பாரின்றி இறங்கி விலாட்டு, சேலம் மாங்காய்களைப் பறித்து நீர்ப் பாய்ச்சும் வாய்க்காலில் அமர்ந்து சப்பத் தொடங்கினோம். முன் வயலுக்குள் இரண்டு மயில்கள் தோகை விரித்து ஆடவில்லை. சுருக்கியபடி ஓடின. எங்களில் ஒன்று எழும்பி நின்று பெரிதாக கத்தியதன் விளைவுதான்.



சண்டையின்போது காயமடைந்த ஒரு தோழனைக் காடுகளுடு தூக்கிச் செல்லும் புலிவீரர்கள்.

இரவு புறப்பட்டு முகாமிற்கு அருகாக மன்னங்குளப்புறத்தில் இரகசியமாகத் தரித்தோம். இனிமேல்தான் நாம் சரிவர இரகசியம் பேணும் அவசியம் ஏற்பட்டது. மக்கள் எவரும் பார்ப்பின் விளைவுகள் பாரதூரமாக அமைவதுடன் எமது திட்டங்கள் சிதைவடைவதற்கும், எதிரியின் தயாராக்கத்துக்கும் அடிகோலாக அமையலாம். இதனால் வரும் கட்டுக்காவலை பரந்து பலமாக்கினோம்.

மறுதினம் முற்றாக அவ்விடத்தில் தரித்த பின்னர் அடுத்த நாள் முகாம் நோக்கி நாம் மட்டும் சென்றோம். ஏனெனில் பல ஆயத்த வேலைகள் செய்ய வேண்டியிருந்தமையாகும். 16 ஆம் திகதி காலை 9.45 மணியளவில் முகாமில் எமது காவலரண்களை அடைந்தோம். வர்மன் முகாமின் மறுபுற இலக்கிற்கு உடையவனாகையால் அப்பால் அனுப்பிவைத்தோம். மாஸ்ரர் வாருங்கோ இந்த வீட்டுக்குள்ள இருப்பம். முதல் வருகையின்போது நான் கண்ட அந்த ஒரு புறச் சுவரிடிந்த வீட்டினுள் குடிபுகுந்தோம். "மாஸ்ரர், பொடியனை வளைச்சு காட்ட வேண்டியது உங்கட வேலை. நாங்கள் சொன்னா வடிவாய் செய்ய மாட்டான்கள்",

"நீ சும்மா ஏத்தாதை".

"சத்தியமாய்ச் சொல்லுறன்" என தலையில் அறையப் போக மறித்து, "சரி சரி உண்மைதான் அங்கால போ நான் செய்விக்கிறன். உன்ர மூஞ்சியைக் கண்டாலே செய்யமாட்டான்கள்".

"சரி சரி, நான் பொயின்றுக்கு போறன்".

கடப்பைத் தாண்டி அப்பாலே குதித்தேன். காவலரண் போராளிகளுடன் சிறிது நேரம் உரையாடியபின் மீண்டும் குடிசைக்குத் திரும்பினேன். பளிச்சென்று குடிசை, முற்றம் எல்லாம் காட்டி மாஸ்ரரும் அழகையாவும் நீளக்காற்சட்டைகளை மடித்து விட்டு நீர் தெளித்த வண்ணம் நின்றார்கள்.

"அழகு எப்ப மச்சான் வந்தனி".

"மாப்பிள்ளை இப்பத்தான் வந்தவர். கோதாரி விழுவான் ரைக்ரரை மாறி ஏறி அங்காலப் பக்கம் வந்து இறங்கிற்றானாம்",

வாத்தியார் பெரிதாய் சிரித்து, "ஏன்ரா என்னை தண்ணிக்குள் விழுத்தினனி"? என்றார்.

எனக்கு விசயம் விளங்கிவிட்டது. இப்போ போனால் என்னை இருவரும் சண்டை பிடிப்பது போல் குளிப்பாட்டுவார்கள் என்று தெரிந்து முடிந்தவுடன், "ஏன்ராப்பா உள்ளுக்க வாவன். நாங்கள் உனக்கு ஏதும் செய்வமே"?

"நீங்கள் பொல்லாத எஸ். ரி. எவ். ஆட்கள். பிறகு எங்கள தண்ணியில தாட்டு எடுப்பியள்"!

அவரின் குரல் கேலியாக இருந்ததைக் கவனிக்காமல், அப்பிடி வாங்கோ வழிக்கு, என்று நினைத்தபடி வீட்டுக்குள் நுழைந்து திண்ணையில் அமர்ந்தேன். "அழகு உள்ளே போய் அந்த பிஸ்கற் பெட்டியை..." மாஸ்ரர் சொல்லி வாய் மூடுவதற்குள் அழகை முந்திக்கொண்டு பாய்ந்துபோய் கதவைத் திறக்க, கதவின் உச்சியில் கட்டப்பட்டிருந்த ஒரு வாளி நீரும் என்னை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை தோய்த்தெடுத்தது!

"ஆகாகா...!" மாஸ்ரரும் அழகும் பெரிதாய் சிரித்து, பார்த்தியா எப்பிடி எங்கட ரெயினிங் என்று கூற, சிரித்தபடி தோற்றுப்போய் கிணற்றடிக்குச் சென்றேன் பின்னால் கூக்காட்டு கேட்டது.

"கண்ணன் எப்படிச் செத்தவர்? சாக்குப்படுக்கையில் இருந்தபடி மாஸ்ரர் இப்படிக் கேட்டார்".

"சனியன் பிடிச்சவன். நித்திரை தூங்கி தூங்கி வந்தவன். நான் தட்டத் தட்ட என்னைப் பேசிப்போட்டு "நானென்ன குழந்தைப் பிள்ளையே, நித்திரை தூங்கி விழுவதற்கு! சும்மா தட்டாமல் இரண்பார்ப்பம், என்றான். கொஞ்ச நேரத்தில ஒருக்கா ரைக்ரர் சங்கத்தானை ரெயில்வே ஸ்ரேசனடியில் கட்டையில ஏறி விழுந்த மாதிரியிருக்க என்னென்று பார்த்தேன் கண்ணனைக் காணவில்லை. பிறகு நிற்பாட்டி ஓடிப்போய் பார்க்க நெஞ்சில ஏறிட்டுது. மச்சான், ஆள் உடனை சரி".

அந்தப் போராளியை நினைத்து பெருமூச்சொன்றை உதிர்த்தபடி தூக்கத்திற்கு (துக்கத்திற்கு) போனேன். நல்ல ஆமறி வேலை செய்யக்கூடியவன் கண்ணன். கடை முதலாளி ஒருவருக்கு மகனாயிருந்து எம்முடன் இணைந்த போராளி...

சிரிப்பும் சந்தோசமும் வேலையுமாக 22 ஆம் திகதியும் வந்தடைந்தது. அன்றைய தினம் அவ்வளவாகப் பனிகொட்டவில்லை. அதிகாலையிலேயே சூரியன் வீதிக்கு வந்தான். புள்ளினங்கள் அதிகமாக மரம்விட்டு மரம் தாவிக் கீதம் இசைத்தன. பட்டமர உச்சிகளில் இருக்கும் மயில்கள் வயல்வெளிகளில் கும்பல் கும்பலாய் இறங்கிவந்து ஆடின. சந்தோசமாய் தானியங்களைப் பொறுக்கின. கிளிகள் கூட்டம் கூட்டமாய் காடாய் அடர்ந்து கிடந்த கொவ்வைக் கொடிகளைப் பற்றி பழங்களை நறுக்கத் தொடங்கின. குரங்குகள் இன்று வழமைக்கு மாறாய் அமைதியாக வீரை மரங்களில் அமர்ந்து விழிவெட்டாது போராளிகளைப் பார்த்தன. இடையிடையே கண்களை துடைத்துக் கொண்டன.

தென்றல் இலேசாக வீசி போராளிகளை தழுவித் தழுவிச் சென்றன. பிரிய மனமில்லாது அவை காவலரண்களின் சுவர்களில் தலையை மோதிக்கொண்டன. வேகமாய் வந்த முகிற் கூட்டம் கண்ணைக் கசக்கி இருதுளிநீரை சிந்தியபடி விம்மிப் போனது. ஆம், அந்த இனிமையான காலை விடியல் போராளிகளிடம் இறுதியாக விடைபெற்றுப் போனது. பறவைகள் சோகமாய் பாடிப் பிரிந்தன. எங்கோ தொலைவில் சேவல் ஒன்று கூவிக் கேட்டது. அந்த இனிமையான விடியலில் நாம் ஒன்றாய் அமர்ந்து தேநீர் அருந்தியபின் அவசர வேலைகளையும் தயார்படுத்தலையும் ஆரம்பித்தோம்.

அருகில் வந்த வாத்தியார் என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்ன மாஸ்ரர் அப்படிப் பார்க்கிறியள்"?

"இன்றைக்கு உன்னை வடிவாப் பார்த்திட்டு விடுறதுக்குத்தான்".

அடப்பாவிப்பயலே, என்று துரத்தினேன். மதிய உணவை பாலைமரத்தின் நிழலில் ஒன்றாய் பரப்பியிருந்து உண்டோம். வழமையாக மாறி காலத்தில் சுட்டெரிக்கும் சூரியன் சாந்தமான மஞ்சள் கதிர்களை பாய்ச்சி குளிரவித்தான். வெக்கையால் சோரும் பூவரசு மரங்கள் நிமிர்ந்து நின்றன. பூவரசம் பூக்களை உதிர்த்தபடி, இதமான தென்றல் போராளிகளை சூழ்ந்து நின்றது. ஓலைக் குடிசை இதமாக குளிர்ந்தது. காகங்கள் அருவருப்பாக கதறாமல் உசாராகி இனசனத்தைக் கூப்பிட்டன.

காகம் பறந்து பறந்து கத்தினால் கடிதம் வரும். நடந்து கத்தினால் ஆட்கள் வருவினம் -மாஸ்ரர் சொல்ல, இருந்து கத்தினா? என்றேன். "செல்தான் வரும், உன்ர தலையை எடுக்க," என்றார் வாத்தியார். அவசரமான கலந்துரையாடலுக்குச் சென்றோம்.

ஏராளமான போராளிகள் வரிசை வரிசையாக அமர்ந்து இருந்தார்கள். அவர்களின் கரங்கள் உறுதியாக நிமிர்ந்து நிற்கும் விதம் விதமான ஆயுதங்களைப் பற்றியிருந்தன. முகத்தில் என்றுமில்லாத ஒருவித ஒளியும் சந்தோசப் புன்சிரிப்பும், உறுதியும், உத்வேகமும் நிரம்பி வழிந்தது. வாழ்க்கையில் பெறுதற்கரிய பேறு ஒன்றை ஆட்கொண்டுவிட்டதாக திளைத்திருந்தனர்.

ஒரு புறமாக பெண் போராளிகள் அணிவகுத்து இருந்தனர். ஒரு பெண்ணடிமைச் சமுதாயத்தின்று கொழுந்துவிடும் தீச்சுடர்கள் இவர்கள்! தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்து, கைகளில் வலிய ஆயுதம் தரித்து எதிரி முகாம் தேடி தாக்கப் புறப்பட்ட வரலாற்றுப் படிகள். தன்னம்பிக்கை, சிறந்த கொள்கைத் தெளிவு, வீரம் கொண்ட இவர்கள் களம் காணப் புறப்பட்டு கைகளில் கனமேந்தியிருக்கின்றார்கள். பெயர் குறிப்பிட முடியாத தளபதி ஒருவர் மாங்குள முகாம் மீதான தாக்குதல் பற்றி ஒரு சிறு கருத்துரையைக் கூறினார்.

1971 ஆம் ஆண்டுப் பகுதியில் ஜே. வி. பி. அடக்கப்படலுக்கு நிறுவப்பட்டு பின், 1978 இல் மீள நிறுவப்பட்டடு எமது நகர்விற்கு பெரும் முட்டுக் கட்டையாகவும் மக்களின் இயல்பு வாழ்வைக் குலைக்கும் கொலைகாரனாகவும் ஈழவளத்தைச் சிதைக்கும் ஒரு கொரேமான முகாம் இது. ஏற்கனவே ஒரு முறை தாக்குதலை நாம் நடாத்தி பூரண வெற்றியைப் பெற முடியவில்லை. அந்தத் தாக்குதலின் குறைநிறைகள் இந்தத் தாக்குதலில் பூரணப்படுத்த வேண்டும். மேலும் பல இரகசிய விடயங்களுடன் கலந்துரையாடலை முடிக்க, அவர்கள் எது பகுதிகளை நோக்கிச் செல்லத் தொடங்கினோம். நேரம் 4.-30 என்பதைக் காட்டி நின்றது. எமது நிலைகளை பூரணமாகத் தயார்படுத்துவதில் ஈடுபட்டிருந்தோம். பேச்சுக்களை வெகுவாகக் குறைத்து தயாரானோம். பிற்பகல் 5.00 மணியளவில் இருவை. 12 விமானங்கள் தெற்கிலிருந்து பறந்து வந்தன. சூரிய ஒளியை வெட்டியபடி குழந்தை முகில்களைப் பிளந்துகொண்டு வானவெளியில் ஊர்ந்து வந்தன.

"என்ன மச்சான் சகடை வருகுது. அலேட்டாயிருக்கிறானோ?" கவலையாக மாஸ்ரர் கேட்டார். கைகளில் துப்பாக்கி உறுதியாய் இருந்தது.

"பொறுங்கோ பார்ப்பம். சிலநேரம் சாப்பாட்டை கீப்பாடை போட வருவான்கள்". அவரை சமாதானப்படுத்தினேன்.

வந்த இரு சகடைகளும் ஒன்றையொன்று பிரிந்து பெரிதாய் வட்டமிடத் தொடங்கின.

"மாஸ்ரர், நீங்கள் செல்லுகளை, பொடியன்களைக் கூப்பிட்டு தூக்கி பங்கருக்குள் கெதியா வையுங்கோ. நான் பார்த்துக் கொள்ளுறன்". அவர் விரைந்து போவது தெரிந்தது. அருகில் இதயன் வோக்கியுடனும் டாரவின் அப்பால் மாஸ்ரரிடம் செல்வதும் றஞ்சன் மரத்தடியில் குந்தியிருப்பதும் தெரிந்தது.

"என்னடாப்பா ஏதாவது போடுறானோ?" றஞ்சன் கேட்க "பொறு பொறு ஆ! அந்தா, போட்டுட்டான்! சாமான் போல கிடக்கு! ஆடுது!"

மூவரும் பார்க்க ஸ்... ஸ்... என ஆடியாடி வந்து முகாமிற்கு தொலைவில் ஏறத்தாழ மகாவித்தியாலயத்தடியில் விழுந்திருக்க வேண்டும். 'பொத்' எனக் கேட்டது.

"சாமான்தான் போட்டிருக்கிறான், பிழைச்சுப் போட்டுது".

ஓரமாக மரத்தடியில் மாஸ்ரர் சொல்லியபடி நின்றிருந்தார். அடுத்த சகடை வேகமாக உட்புறம் வெட்டி சின்ன வட்டமிட்டு வீசியது. "மச்சான் உது குண்டு தான் பார். சற்றில்கொக் மாதிரி வருகுது, கவனம். எல்லாரும் கவரில இருங்கோ" இதயன் கூற, குண்டு எம்மை விலகுவது தெரிந்து நிமிர்ந்தோம்.

கும்... கும்... படபடபட! குண்டு வெடித்தவுடன், முகாமிலிருந்து ஆமறியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

(தொடரும்...)

# பட்டை தீட்டப்பட்ட வை

**கா**ரிருள். . . .

தம்மை உருமறைத்தபடி இருளோடு இருளாக, வயல் வரம்புகளுடன் சில உருவங்கள் நகர்ந்தன. பூநகரி இராணுவத் தளத்தின், 'போக்கஸ் லைற்றுகள்' திடீரென உயிர் பெற்றன. பிரகாசமான வெளிச்சம் வயல்மீது வீசப்பட்டது. அந்த உருவங்கள் சட்டென மண்ணுடன் இரண்டறக் கலந்தன. 'போக்கஸ் லைற்' வேறுபுறம் திருப்பப்பட்டது. உருவங்கள் மீண்டும் உயிர்த்தன. முன்னோக்கி நகர்ந்தன. திடீரென 'போக்கஸ் லைற்' இந்தப் பக்கம் திருப்பப்பட்டது. உருவங்கள் மீண்டும் மண்ணுடன் கலந்தன. ஆனாலும் இராணுவத்தினருக்குச் சந்தேகம் வந்துவிட்டது போலும். சரமாரியாக ரவை மழை பொழிந்தனர். அந்த உருவங்கள் தம்மை நன்றாக மறைத்துக் கொண்ட போதும், இராணுவத்தினரின் சில ரவைகள் அவைகளைத் தாக்கி காயம் விளைவித்தன.

காயப்பட்ட உருவங்களை இழுத்துக் கொண்டு ஏனைய உருவங்கள் பின்னோக்கி ஊர்ந்தன.

தமது பாசறைக்கு வரும்வரை சத்தமெதுவும் எழுப்பாமல் வந்தவர்கள், பாசறைக்கு வந்ததும், பரபரப்புடன் காயமடைந்த தோழிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வேவுப் பிரிவினர். எதிரியின் எல்லைக்குள் யார் கண்ணிலும் படாமல் புகுந்து நடமாடும் துணிச்சலான பெண்கள்.

இருளிலே நீர் தேங்கி நிற்கும் வயல்களிலே ஊர்ந்து போவதால், உடல் முழுவதும் சேறு தாராளமாக அப்பும். போன வேலை முடிந்து திரும்பிய பின்னர்தான் குளிக்கலாம். அது வரையில் அந்தச் சேற்றுடன்தான்.

'பூநகரி இராணுவத் தளத்தை அழிக்க வேண்டும். மக்கள் சங்குப்பிட்டிப் பாதையால் பயணம் செய்ய வேண்டும்' என்ற ஒரே நோக்கமே எல்லோர் மனங்களிலும் எழுந்து நின்றதால், எந்தத் தடைகளுமே அவர்களைப் பாதிக்கவில்லை.

நல்ல குளிர் இரவுகளில், பூநகரிக் கடலினை நீந்திக் கடந்து, கரையேறி இராணுவத்தின் கண்களில் மண்ணைத் தூவி, நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைக்கூட தமது வேவுக் கண்களில் இருந்து விட்டு வைக்கவில்லை. தொடர்ந்து பல நாட்களாகக் குளிருக்குள் நீந்தியதால் ஏற்பட்ட காய்ச்சலையும் பொருட்படுத்தாமல், மீண்டும் நீந்தி நாகதேவன்துறையில் கரையேறி...... ஒரு சாதாரண மனிதனால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத அளவு தீரம் புலிகளுடையது.

'ஒப்பரேசன் தவளை'யை வெற்றிகரமாக நடத்துவதற்காக எமது படையணிகளின் ஒரு சிறு பிரிவு, மாதக்கணக்காக தண்ணீரிலும் தரையிலுமாகத் தவளைகள் போலவே நடமாட வேண்டியிருந்தது.

தாக்குதலுக்கான பயிற்சி கூட வித்தியாசமானதுதான். தாக்குதலும் வித்தியாசமானதுதான். மின்னல் வேகத் தாக்குதல். விடுதலைப் புலிகள் மகளிர் படையணிக்கு ஏறத்தாழ இரண்டரை மைல் நீளமான தூரத்திலுள்ள காவலரண்களைத் தாக்கி அழிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. தாக்குவதற்கான உத்தரவு கிடைத்ததும் எம்மவர்கள் முன்னேறினார்கள்.

தம்மால் கைப்பற்றப்பட்ட காவலரண்களுடாக உள்ளே நுழைந்த புலிகள் ஏனைய காவலரண்களையும் தாக்கி அழித்தனர். பெண் புலிகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் ஒரு போராளி ஏறத்தாழ இருபதில் இருந்து நூறு மீற்றர் வரையிலான தூரம் கொண்ட பகுதியைக் காவல் செய்யக்கூடிய அளவிலேயே பெண் போராளிகள் எஞ்சியிருந்தனர்.



விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி
செல்வி ஜெனா அவர்கள்

காவல் செய்த போராளிகளிலும் பலர் படுகாயமடைந்திருந்தனர். ஆனாலும் தளரவில்லை.

பின்னாலிருந்து இன்னொரு பெண்கள் அணி வந்து அந்தப் பிரதேசத்தை பொறுப்பெடுக்கும் வரை, யாருமே பின்வரவில்லை. காவலரண் தகர்ப்பில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது என்னவென்றால், இராணுவக் காவலரண்களிலிருந்து புலிகளை நோக்கி வெறுமனே துப்பாக்கிச் சூடு மட்டும் நடத்தப்படவில்லை. பெரும்பாலும் எல்லாக் காவலரண்களில் இருந்துமே கனரக ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தனை தாக்குதலுக்கும் மத்தியில் முன்னேறிய புலிகள் தாம் கைப்பற்றிய காவலரண்களில் இருந்து ஆயுதங்களையும் ரவைகளையும், செல்லையும் எடுத்து அடித்தே ஏனைய காவலரண்களைக் கைப்பற்றினர்.


பெண்புலிகளால் அழிக்கப்பட்ட காவலரண்களினூடாக இன்னொரு பெண்கள் அணி நகர்ந்து பிரதான தளமான வில்லடி மீதான தாக்குதலில் கலந்து கொண்டது. ஆயுதக் கிடங்கைத் தாக்கி பல ஆயுதங்களையும் அள்ளிக் கொண்டது. இன்னுமொரு அணி நகர்ந்து முன்னேறி, வில்லடி தளத்திலிருந்த இராணுவத்தினர் நாகதேவன்துறைத் தளத்திற்கும், நாகதேவன்துறைத் தளத்திலிருந்த இராணுவத்தினர் வில்லடித் தளத்திற்கும் உதவி வழங்கச் செல்ல முடியாதவாறு, இருதளங்களுக்குமிடையே ஊடுருவி இராணுவத்தினரை இணையவிடாது பிரித்து வைத்துத் தாக்கியது.

பூநகரித் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினரை படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா அவர்கள் வழிநடத்தினார். அவர் பத்திரிகைக்கு அளித்த செவ்வி கீழே;

"பெண் போராளிகளின் போரிடும் திறனில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி எத்தகையது என்பதை விளக்குவீர்களா?"

"ஆம். இதுவரை காலமும் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தாக்குதல்களில் மட்டுமே கலந்து கொண்டது. எமக்காக வேவு பார்த்தது ஆண் -பெண் போராளிகள். போகும் பாதையில் உள்ள கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்தது ஆண் -பெண் போராளிகள். ஆனால் ஒப்பரேசன் தவளை நடவடிக்கையில் அப்படியல்ல. வேவு பார்த்தது பெண் போராளிகள். பாதை காட்டியது பெண் போராளிகள். எமது பாதையில் உள்ள கண்ணிவெடிகளைச் செயலிழக்கச் செய்தது பெண் போராளிகள். பூநகரிக் கடல் வழியாகத் தளத்தைத் தகர்க்க முன்னேறிய சில ஆண் போராளிகளின் அணிகளுக்கு வேவு பார்த்து, பாதைகாட்டியது கூட பெண்போராளிகள்தான். இவை எல்லாவற்றையும் விட, எமக்குக் கொடுக்கப்பட்ட ஏறத்தாழ இரண்டரை மைல் நீளமான பகுதியில் உள்ள காவலரண்களை அழித்து, ஆயுதங்களை அள்ளி, அந்தப் பகுதியை வேறு எவரின் துணையுமின்றிக் காவல் செய்ததும் பெண் போராளிகள்தான்."

"இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் ஆற்றல் எவ்வாறு உள்ளது? 'உங்களின் பிள்ளைகள் செய்தது' என்று நீங்கள் பெருமைப்பட்டுக் கொண்ட சம்பவங்கள் ஏதாவது?"



"பெண் போராளிகள் இக்கட்டான சூழ்நிலைகளை கையாண்ட விதத்தைப் பார்த்தே நான் பெருமைப்படுகின்றேன். ஒரு காவலரணைப் பெண் போராளிகள் தாக்கினர். அதற்குள் இருந்த இராணுவத்தினர் தமது ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, காவலரணுக்குப் பின்னால் இருந்த பற்றைக்குள் தயாராக வெட்டியிருந்த காப்பகழிக்குள் ஓடிப்போய் ஒழித்துக் கொண்டு தாக்கத் தொடங்கினர். காவலரணுக்கும் பற்றைக்குமிடையே ஏறத்தாழ நூறு மீற்றர் தூரத்திற்கும் வெளிகொண்ட பிரதேசமாக இருந்தது. காவலரணை அழித்த பெண் போராளிகள் பற்றையை நோக்கி நகர்ந்த போது, இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று பேர் காயமடைந்து விழுந்தனர். குழுத் தலைவியும் காயப்பட்டு விழுந்து விட்டார்.

உடனேயே தொடர்ந்து முன்னேறுவதை நிறுத்தி, ஒரு பக்கமாக நகர்ந்து நீண்ட தூரம் சுற்றி பின்பக்கமாக வந்து, அந்த இருளுள்ளும் இராணுவத்தினர் மறைந்திருந்த பற்றை எது என்பதைக் கண்டுபிடித்து அவர்களை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஒரே இருள். எங்கே என்ன இருக்கிறதென்பதைப் பார்க்க முடியாது. எம்மில் பலர் காயமடைந்து வீரச்சாவடைந்து விட்டதால், அவ்விடத்தில் எஞ்சியிருந்தது ஒரு சிலர் மட்டுமே. இப்படியான ஒரு நிலையில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களே தீர்மானித்துச் செய்தார்கள்.

இன்னொரு இடத்தில் காவலரண் தகர்ப்பில், எல்லோருமே காயமடைந்து விட்டனர். ஏ. கே. எல். எம். ஜியை இயக்குபவர் உட்பட எல்லோருமே காயம். ஒரு பெண் போராளி மட்டும் எஞ்சியிருந்தார். எதிர்ப்புக்குறைவாக இருந்ததால், இராணுவம் முன்னேற முயற்சித்தது.

ஒரு துப்பாக்கியை வைத்துக் கொண்டு இராணுவத்தினரைத் தடுக்க முடியாது. இலகு இயந்திரமான எல். எம். ஜியை ஒருபோதுமே இயக்கியிராத அந்தப் பெண் போராளி தனித்து நின்று எல். எம். -ஜியை இயக்கினார். பின்னாலிருந்து இன்னொரு பெண்களணி அந்த இடத்திற்கு வரும்வரையில் இராணுவத்தினரை ஒரு அங்குலம் கூட முன்னேற விடாமல் தாக்கினார். வழமையாக ஏ. கே. எல். எம். ஜியை இயக்க ஒரு இயக்குனரும், ஒரு உதவியாளரும் தேவை. ஆனால் யாருமேயற்ற அந்த நிலையில் இராணுவ நகர்வைத் தடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அவர் துணிகரமாகச் செயற்பட்டு வெற்றியைத் தேடித் தந்தார்.

இன்னொரு இடத்தில் காவலரணைத் தகர்ப்பதற்காகப் பெண்களணி முன்னேறிக் கொண்டிருந்தது. எல்

# Network

February 1994

Published by the International Federation of Tamils


"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."

- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

## At the 50th Sessions of the United Nations Commission on Human Rights in Geneva:

**World Council of Churches, American Association of Jurists, International Educational Development, International Association of Educators for World Peace, International Indian Treaty Council, Consejo Indico de Sud America, Comision de Deeches Homonas de El Salavador, Commission for the Defence of Human Rights in Central America, International Movement against all Forms of Discrimination and Racism, Action des Christians Pour L'Abolition de la Torture, FIMARC, International Council of Women, Centre Europe-Tiers Monde, Servieiv Pax Justica America Latina, Pax Romana, International League for the Rights and Liberation of Peoples, and World Christian Live Community, declare-**

# Tamils are a 'people with the right to self determination'

Seventeen non governmental organisations with consultative status at the UN, including the World Council of Churches, the American Association of Jurists and International Educational Development, declared in a joint statement on February 4 at Geneva:

**"A social group, which shares objective elements such as a common language and which has acquired a subjective political consciousness of oneness, by its life within a relatively well defined territory, and by its struggle against alien domination, clearly constitutes a 'people' with the right to self determination and in our view, the Tamil population of the north-east of the island are such a 'people'."**

**Earlier, Mr.Anton Ponraj of the Swiss Confederation of Tamil Associations and the Swiss Section of the International Federation of Tamils presented a 50 page appeal by the International Federation of Tamils to the UN Commission on Human Rights.**

**The IFT Appeal detailed the recent systematic aerial bombardment of the Tamil homeland and pointed out that during the past two years and more the Parliamentary Select Committee mechanism had been used by the Sri Lanka government as a way of avoiding direct talks with the Liberation Tigers of Tamil Eelam.**

The Appeal also pointed out that the constitutional reality was "that the unitary character of the Sri Lanka constitution cannot be changed except with a referendum - and, this, Sinhala chauvinism will not permit to be done" and furthermore that the "Parliamentary Select Committee prevaricates when it pretends to offer 'federalism' (with a nod and a wink) without using the term 'federal' in 'any manifest sense'!"

**The IFT Appeal quoted the comment of the British Refugee Council publication, the Sri Lanka Monitor that "President D.B.Wijetunga's repeated assertion in early September that there is no ethnic problem in Sri Lanka only a terrorist problem, already signalled a new hard line consensus in the South to pursue the military option."**

**IFT told the Commission "that recent events show that the Sri Lanka government is, in truth, engaged in creating a legitimising framework for a further genocidal onslaught on the Tamil people" and urged the Commission to support the call made by 15 NGOs at the 49th Sessions last year, for recognition of the right of self determination of the Tamil people in the north and east of the island of Sri Lanka.**

In a separate Appeal dated 1 February 1994 presented to the UN Commission by the **Australasian Federation of Tamil Associations through its Secretary, Mr.Ana Pararajasingham**, the AFTA urged that in order for the human rights of the Tamil people and for others in a similar situation to be realised, the international community must invoke the principle of self determination as it arises from persistent non fulfilment of the rights of peoples who have been subsumed into larger states.

The 17 NGOs made their Joint Statement on 4 February 1994 under the agenda item on 'The right of peoples to self determination

*continued on page 2*

## "It is our view that the peaceful and just resolution of the conflict in the island will not be furthered by a blanket categorisation of the armed resistance of the Tamil people which arose in response to decades of oppressive alien Sinhala rule as 'terrorism'."


.....17 NGOs at UN in Geneva

# ..Meanwhile, Sri Lanka bombers rain terror on Tamil homeland

**During recent months, in retaliation for the reverses suffered by the Sri Lanka army at Pooneryn and elsewhere, the Sri Lanka air force has intensified its aerial bombardment of the Tamil homeland. Temples, churches, hospitals and public offices have been systematically targeted. These attacks evidence the intent of the government to let loose a reign of terror in violation of all legal norms of armed conflict.Some nine months ago,In July 1983, the British Refugee Council publication Sri Lanka Monitor, commented that 'over 1,000 civilians have been killed in the three years bombing of Jaffna.' Since then, hundreds more Tamil civilians have been killed or injured.**

**On the 12th of November 1993 the Jaffna Secretariat was bombed. One person was killed and over 25 injured. On the 13th of November, Sri Lankan bombers attacked St. James Church, one of the largest and oldest Roman catholic church in Jaffna. Ten persons were killed and over 30 injured.**

*continued on page 3*




"How many deaths will it take till he knows that too many people have died? ... The answer, my friend, is blowing in the wind. The answer is blowing in the wind."..
Bob Dylan

**Networking to secure international recognition of Tamils' right to self determination**

**The battle of Waterloo may have been won on the playing fields of Eton. But it will be idle to pretend that the struggle for Tamil Eelam will be won on the playing fields of the UN Human Rights Commission in Geneva.**

# Candidly Speaking

Nadesan Satyendra

Nevertheless, the Joint Statement by 17 non governmental organisations at the UN Commission on Human Rights on 4 February 1994 represents a welcome step forward in the long march to secure international recognition of the Tamil struggle for freedom. The 17 NGO Joint Statement succinctly spelt out the legitimacy of the Tamil struggle :

"A social group, which shares objective elements such as a common language and which has acquired a subjective political consciousness of oneness, by its life within a relatively well defined territory, and by its struggle against alien domination, clearly constitutes a 'people' with the right to self determination and in our view, the Tamil population of the north-east of the island are such a 'people'."

**Of particular significance was the Joint Statement's reference to the 1879 Cleghorn Minute which recognised the existence of two states in the island prior to the imposition of British rule.**

## Power and Principle

In 1972, when the representatives of the Sinhala people met outside the Sri Lanka Parliament, in Navarangahala and gave themselves an autochthonous constitution they broke the legal continuity with the past. The result in law was that sovereignty reverted to the Tamil people in their homeland. It was on this issue that the Tamil leader Mr.S.J.V. Chelvanayagam resigned his seat in the Sri Lanka Parliament and thereafter won a mandate from the Tamil people for the establishment of an independent Tamil Eelam state - a mandate later reiterated at the 1977 General Elections.

In 1983, Mr. Timothy J.Moore from the Australian Section of the International Commission of Jurists commented: "The proponents of Tamil Eelam argue that the northern and eastern of the nine provinces of Sri Lanka coincide with the historic boundaries of the kingdom of Jaffna and argue a case that seeks to establish that sovereignty over these territories was never ceded to any conqueror and that, even if such concession had been made at any time in the past, the unilateral renunciation of links with the United Kingdom which took place at the assumption of Mrs. Srimavo Bandaranaikes's government in 1972, resuscitated the Tamil sovereignty which had merely lain dormant until then... In the abstract theory of international law, it would appear that the Tamils have, at the very least, an arguable case, and possibly, a sustainable one..."

**Mr.Moore was ofcourse right to emphasise the 'abstract' and 'theoretical' nature of making a case in international law.** The leader of Tamil Eelam, Velupillai Pirabakaran, speaking on Maha Veerar Thinam, in November 1993 addressed the concrete and practical political reality. He said: **"We are fighting for a just cause... Our people are entitled to the right to self determination... Under international law this right cannot be denied... (But) we are fully aware that the world is not rotating on the axis of human justice. ...International relations and diplomacy between countries are determined by the self interest of each country. Therefore we cannot expect an immediate recognition of the legitimacy of our cause by the international community. But at the same time we must agitate for that recognition... In reality, the success of our struggle...depends on our own efforts, on our own strength, on our own determination..."**

The Tamil struggle for free dom is just because it arose in response to decades of ever widening and deepening oppressive alien Sinhala rule. It is lawful because every people have the right to freely choose their political status - and no people may seek to rule another. It is lawful also because Tamil sovereignty which had lain dormant during the period of successive British and Sinhala rule, was resuscitated with the break in legal continuity in 1972. The Tamil struggle for freedom is principled because the Tamil people do not deny the existence of the Sinhala nation but seek to associate with it freely and on equal terms.

**But, we have learnt on the hard anvil of experience that principle without power is powerless. We are not a people of servile pleaders for fairplay and abject supplicants for justice. The armed resistance of the Tamil people led by the Liberation Tigers of Tamil Eelam reflects the marriage of principle with power and lights the way forward, difficult though the path ahead may be. But, history does not record that freedom was ever served to a people on a silver platter. Again to seek change without a willingness to suffer to bring about that change, is but to issue airy ultimatums without sanctions. The success of our struggle will depend on our own efforts, on our own strength, and, above all else, on our own determination - and every Tamil has a contribution to make, however small or large that may be.**

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi-polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

## At UN: Tamils are a 'people with the right to self determination'

*continued from front page*

and its application to peoples under colonial or alien domination or foreign occupation'. It follows upon the Joint Statement made by 15 NGOs including Pax Christie and the World Confederation of Labour in February 1993 which declared that "any meaningful attempt to resolve the conflict (in the Island) should address its underlying causes and recognise that the armed struggle of the Tamil people for self determination, arose as a response to decades of an ever widening and deepening oppression by a permanent Sinhala majority, within the confines of an unitary Sri Lankan state".

### Text of 17 NGO joint statement

"The armed conflict in the island of Sri Lanka and the continuing violations of humanitarian law cause us deep and grave concern.

In March 1987, the Commission in a Resolution on Sri Lanka called upon all parties to the armed conflict in the island to respect fully the universally accepted rules of humanitarian law.

Six years later in February 1993, at the 49th Sessions of the Commission, 15 non governmental organisations in a joint statement under agenda item 9 declared that there was an 'urgent need for the international community to recognise that the Tamil population of the North and East of the island were a people with the right to freely choose their political status' and further that such' recognition would prepare the ground for the resolution of a conflict which had taken such a heavy toll in human lives and suffering during the past several years.' However, today, an year later, the economic blockade imposed on the Tamil homeland continues and Tamil civilians continue to be subject to indiscriminate aerial and artillery bombardment by the Sri Lanka armed forces.

**The attacks on the Tamil homeland have been coupled with the declared opposition of the Sri Lankan Government to the merger of the North and East of the island into a single administrative and political unit.**

After more than two years of deliberations, the Parliamentary Select Committee mechanism has failed to resolve the conflict and in August 1993, Sri Lanka rejected a peace initiative submitted by four Nobel Laureates.

Furthermore, the President of Sri Lanka has declared in recent months, on more than one occasion, that there is no 'ethnic problem' in the island, but that there is only a 'terrorist problem'.

**It is our view that the peaceful and just resolution of the conflict in the island will not be furthered by a blanket categorisation of the armed resistance of the Tamil people which arose in response to decades of oppressive alien Sinhala rule as 'terrorism'.** It is also our view that there is a need to recognise that the deep divisions between the Sri Lanka government and the Tamil people cannot be resolved by the use of force against Tamil resistance.

The Tamil population in the North and East of the island, who have lived from ancient times within relatively well defined geographical boundaries in the north and east of the island, share an ancient heritage, a vibrant culture, and a living language which traces its origins to more than 2500 years ago.

**The 1879 minute of Sir Hugh Cleghorn, the British Colonial Secretary makes it abundantly clear that:**

**"Two different nations, from a very ancient period, have divided between them the possession of the Island: the Sinhalese inhabiting the interior in its Southern and western parts from the river Wallouwe to Chilaw, and the Malabars (Tamils) who possess the Northern and Eastern Districts. These two nations differ entirely in their religion, language and manners."**

Before the advent of the British in 1833, separate kingdoms existed for the Tamil areas and for the Sinhala areas in the island. The Tamil people and the Sinhala people were brought within the confines of one state for the first time by the British in 1833. After the departure of the British in 1948, an alien Sinhala people speaking a language different to that of the Tamils and claiming a separate and distinct heritage has persistently denied the rights and fundamental freedoms of the Tamil people.

It was an alien Sinhala domination which found expression in the disenfranchisement of plantation Tamils, the enactment of the Sinhala Only law, discriminatory employment policies, inequitable allocation of resources to Tamil areas, exclusion of eligible Tamil students from Universities and higher education and in genocidal pogroms in 1958, 1977 and again in 1983.

**At the sametime systematic state aided Sinhala colonisation attempted to render the Tamil people a subject minority in parts of their own homeland. In 1946, there were 23,400 Sinhalese in the Eastern Province constituting 8.4% of the population. By 1981 this number had increased tenfold to 234,000 and constituted 25% of the population of the Eastern Province.**

A social group, which shares objective elements such as a common language and which has acquired a subjective political consciousness of oneness, by its life within a relatively well defined territory, and by its struggle against alien domination, clearly constitutes a 'people' with the right to self determination and in our view, the Tamil population of the north-east of the island are such a 'people'.

**It is also our view that the Secretary General should consider invoking his good offices with the aim of contributing to the establishment of peace in the island of Sri Lanka through respect for the existence of the Tamil homeland in the North-East of the island of Sri Lanka and recognition for the right of the Tamil people to freely determine their political status.**

*continued from front page*

# Sri Lanka bombers rain terror on Tamil homeland...

On the same day, in the afternoon bombs were dropped within the safety zone of the Jaffna Hospital within the control of the ICRC. Four persons were injured. The Nanthavil Hindu temple at Kokuvil was targeted on 13 November and the Vairavar Hindu Temple at Varany bombed on 14 of November. More than 15 persons were injured. The Killinochi Hospital was bombed on 15 November. The maternity ward was badly damaged. On the same day, the Mullativu District hospital was attacked by the Sri Lanka airforce.

**On 17 November 1993 in a joint statement, three religious heads in Jaffna, Bishop D.J. Ambalavanar, Bishop Thomas Saundranayagam and Nallai Thiru Sampandar Atheenam protested: "These events are not just sporadic occurrences but have been repeated so often in the past that we cannot but conclude it is part of state policy against the Tamils. A close statistical study of the air raids carried out by the Sri Lankan airforce in the North will show that the victims of the raids have almost always been innocent helpless civilians... When this is the case how could any one avoid concluding that this is organised State terrorism.?"**

**However, despite these protests, Sri Lanka's acts of 'state terrorism' have continued without respite.**

### Manal Aru Bombed on 29 December

At about 8.40 a.m on Monday, 28 December 1993, two Sri Lanka Airforce bombers dropped five bombs in Alampil, a village in the Manla Aru area. Five houses were damaged. The Multi Purpose Coop Society building was completely destroyed. Siyamani Komala (aged 4) and her brother Siyamani Theepan (aged 12) were killed. Another young girl Priya (aged 18) was also killed by the attack. Siyamani Jayaranjani (aged 8), a sister of the deceased Komala and Theepan, and who was taken to the Killinochchi Hospital, later succumbed to her injuries and died.

### Church & School bombed in Chavakachcheri on 30 December

At about 5 p.m. on Thursday 30 December 1993, Sri Lanka Air Force planes attacked the centre of Chavakachcheri town where the market, Drieberg College and the CSI Church are situated. **As the planes flew into Chavakachcheri, they fired rockets in quick succession giving no time for people to escape.** Heavy damage was caused to shop buildings. The Thirukantha Press which prints alamancs was burnt. Having fired over 15 rockets, the planes vanished over the horizon. Thereafter, the people around and the Tamil Eelam Police rescued the injured and despatched them to hospitals in carts and bicycles.

**The Church in the centre of the town adjoining Drieberg's College was attacked.** Mrs.Pamela Indranee Lawrence, wife of the Vicar of the Church, was killed in the attack. Her husband who had gone to Varany at the time of the rocket attack escaped. The Church building and the Vicarage were badly damaged. **Drieberg's College which is the oldest English School in Thenmaradachy was also attacked.** The Principal's office and a number of other school buildings were badly damaged.

**Six persons died on the spot and three on admission to the hospital.** Their names are R.Arumugam (60, male, goldsmith), P.Balakumar (12, male, student), R.Balan (60, male, cobbler), Valli (55, female, gramseller), Pamela Indranee Lawrence (48, female, vicar's wife), K.P.Perambalam (40, male, shop employee) Munusami (53, male labourer), Mohan (34, male, farmer) and S.Krishnapillai (70, male, farmer). Over 60 were injured. Later, on 1 January, one of the injured, Athputharajah Thileepan (aged 4) died at the Jaffna Hospital. His father, brother and sister who were also injured in the attack were still in hospital at that time. On Thursday, 6 January, S.Namasivayam, owner of the Ambika Dispensary at Chavakachcheri and President of the Thenmaradachy Traders Association succumbed to his injuries and died. All were civilians.

### Kumilamunai bombed on 31 December

At about 10.15 a.m. on Friday, 31 December 1993, a Sri Lanka Air Force Argentine made Puccaro bomber dropped four bombs on Kumilamunai in the Manal Aru area. A young woman, Sutsuthananthy was killed on the spot. Two houses were razed to the ground.

Meanwhile, on Wednesday, 29 December 1993 at the Jaffan Hospital, a woman victim of the Sri Lanka Airforce bombing on 5 December, succumbed to her injuries and died. She was Aseerwatham Ranee of Gurunagar, aged 43. died. Twenty five civilians died in that attack on Gurunagar and Passaiyoor on 5 December. More than 70 were injured.

### Jaffna bombed again on 5 January

Two Sri Lanka Argentine made Puccaro planes flew into Jaffna on Wednesday 5 January at about 10.30 a.m. and bombed the village of Thavady. Three women and an infant were killed. Their bodies were torn and limbs and flesh were strewn all over. The deceased were S.T.Saras–wathy (aged 39), her niece Santhini (aged 23), Mrs.P.Selvaratnam (aged 65) and her grand daughter, M.Logiga (aged 3). They were all displaced person Thaiyiddy. Three houses were completely destroyed. Several other houses were damaged. The Thavady Sub Post Office and the office of the Grama Sevaka were also badly damaged. A school was in session within a hundred yards from where the bombs exploded. Fortunately no splinters hit the school and the children escaped without injuries.

### Atchuvely School bombed on 7 January

At about 11 a.m. on Friday, 7 January, a Sri Lankan helicopter fired many rounds from 50 calibre guns on the Atchuvely Maha Vidyalayam. The school was in session at the time of the attack. As the helicopter launched its attack, there was pandemonium - students and teachers ran to find shelter. Many of the school buildings were damaged. A bullet pierced the leg of a GCE (0/L) girl student named M.Rameenarani. She was taken to the Jaffna Hospital.


### Thondamanaru strafed by helicopters on 7 January

On the same day, at about 10 a.m. there were helicopter strafing at Thondamanru in the Vadamarchy area. The Veerakathipllai school was attacked. The children and teachers escaped without injuries but the school building was damaged. Heli attacks also took place in Navandil, Udupiddy, Valvettiturai, Putur and Avarangal villages on 7 January.

President Wijetunga:
"When a war is continuing there is no law. What exists is the race to kill."

**These systematic violations of the Geneva Convention by Sri Lanka's armed forces have been coupled with the continued economic blockade of the north and pronouncements by the Sri Lanka President there is no ethnic conflict but simply a 'terrorist' problem. He has declared: "When a war is continuing there is no law. What exists is the race to kill."**

## *A shortsighted Policy?*



## *Or Blind Pilots?*

The Archbishop of Colombo, Rt.Rev. Dr.Nicolas Marcus Fernando wrote to the Rt.Rev. Dr. Thomas Savundranayagam, the Bishop of Jaffna to convey his deepest sympathies to the families of those killed and injured by the bombing of St.James Church at Gurunagar by the Sri Lanka Airforce on 13 November 1993. In a letter dated 30 November, Bishop Fernando said he knows the beauty and great height of St.James Church, Gurunagar and its three towers. He added: "The pilot who thought that the great St.James Church at Gurunagar in Jaffna was a Tiger camp and bombed it cannot be anything but blind"

**Rajan Sriskandarajah comments editorially in US based Tamil Voice:**

## WE TOLD YOU SO

***Right along we have maintained that the Indian ordained Thirteenth Amendment to the Sri Lanka constitution cannot resolve the ethnic conflict in the island. We said this because Sri Lanka, as constituted and designed by the Jayawardene Constitution cannot, even if they wanted to (which ofcourse they do not) transfer any power of governance to the Tamil people.***

***Section 2 of the Sri Lanka constitution states, "The Republic of Sri Lanka is a Unitary State", thus precluding any form of federalism. Section 3 states that "in the Republic of Sri Lanka sovereignty is in the People (of Sri Lanka)" and is "inalienable" (cannot be transferred by them to anybody). And section 83 makes any change to these asphyxiating clauses - IMPOSSIBLE! Any change or alteration, requires a "two thirds majority of the whole number of members (of the Central Sri Lanka Parliament) - including those not present" AND "approved by the (Sinhala) People at a Referendum" AND "endorsed thereon by the President."***

***Thus came the Thirteenth Amendment to satisfy all these strangulatory provisions - and to maintain the choke-hold of majority (Sinhala) domination.***

***Now the Provincial Council system, under this much touted but toothless Amendment, is being played out in Sinhala Sri Lanka, mercifully without the Tamils having to suffer its pain.***

***When the Southern and North-Western Provincial Councils elected Chief Ministers not to the liking of those in power at the Center, their elections went unacknowledged by the quisling Governors, whose mere existence, even legally, was at the whim and fancy of the almighty President. These democratically elected assemblies had to go the Supreme Court to have their elections validated. When they finally assumed office, their funding was withheld, their legislation annulled, and their executive directives nullified. In short, all efforts, by those elected to govern these Provinces, were thwarted at every possible turn. And now, as a final stroke, the Southern Council has been dissolved by this almighty President.***

***If they would do all this to their own people, imagine what they would have done to us. Mind you, these are the very same people, who would'nt bomb or shell Sinhala towns or villages even when they rebelled, but are wantonly doing it to us on a daily basis.***

# SINHALA CHAUVINISM EXPOSES ITS TRUE FACE

## "Our children should be able to claim that this country is the Sinhalese land (Sinhala Deshaya)... every country has a majority race... the majority community in (Sri Lanka) are Sinhalese - therefore the Sinhalese should govern the country"

## says Sri Lanka President Wijetunga

**Tamil civilians, both young and old, men and women, who bore the brunt of the attack by Sinhala thugs in 1958, 1977 and again in 1983, in Colombo and elsewhere will remember the raised sarongs of the gang leaders who led the cowardly attacks. Today, in an election year, Tamil bashing has once again reached a crescendo - it is, after all, the tried, tested and time honoured way for Sinhala political leaders to stay in power in Sinhala Sri Lanka.**

On the one hand, Sri Lanka bombers rain terror from the skies on hospitals, churches, and schools in the Tamil homeland, in revenge attacks for the routs suffered by the Sri Lanka armed forces at Pooneryn, Janakapura and elsewhere. Sinhala thugs who dare not set foot with any assurance of safety on Tamil land, have now taken to the skies to carry out their cowardly carnage.

**On the other hand, Sri Lanka President D.B. (Ethnic Problem? What Ethnic Problem?) Wijetunga is bent on feeding Sinhala chauvinism with what it wants to hear. His recent speeches indicate that he is relishing the prospect of riding Sinhala chauvinism to UNP victory in the polls - with his sarong metaphorically tucked up.**

In early January President Wijetunga expanded on his theme of Sinhala supremacy in an interview reported in the Indian Express on 7 January. "Sri Lanka President Wijetunga has dismissed the possibility of a special devolution of power to the troubled north-eastern region of the island.. "I cannot allow two or three classes of citizens. I cannot agree to making minorities super class citizens and the majority second class citizens..."

**Perhaps not unnaturally, Sinhala chauvinism, which claims the right to rule the Island, also regards devolution of power to the North-East as making the Sinhala majority second class citizens i.e. no longer first class rulers.**

What is more, according to President Wijetunga, 'if the majority race seeks the assistance of minority races for power, no fruitful activity can take place.' President Wijetunga expanded on this thesis at a meeting at Kurunegala with recent DUNF convert ex Minister and Sinhala supremacist Premachandra by his side. Making a fervent plea for the Sinhala people to unite behind the ruling United National Party he declared: "The majority race should be safeguarded for the livelihood of the minority races. **When the tree is safe, the vines can get entangled in it and grow. If the majority race is divided and it seeks the assistance of minority races for power, no fruitful activity could take place."** *(Sinhala owned Sri Lanka Sunday Times, 30 January 1994)*

So much then for sharing power in a multi ethnic plural society! President Wijetunga went even further when speaking at Anuradhapura, the old Sinhala capital. He told a UNP convention on 2 February: **"Our children should be able to claim that this country is the Sinhalese land (Sinhala Deshaya). There are no races according to Buddhism, but every country has a majority race. However much I try I can't become the Prime Minister of England. Neither can I be the leader of Japan, India or even Tamil Nadu. They have their majority races. In our country the majority (Sinhala) race is divided because of elections. The major (Sinhala) political parties trust minority races and pledge to offer them everything, whether it is good or bad... Thousands (of Tamils on the plantations) were given citizenship due to this bondage."** *(Sinhala owned Sri Lanka Island, 3 February 1994)*

In February 1985 the United Kingdom Parliamentary Human Rights Group Reported: "We do not accept... that there is any justification for denying civic and political rights to the million or so Tamils of Indian descent who work on the tea plantations."

But to Sinhala chauvinism, the citizenship rights granted belatedly, during the past few years, to Tamils on the plantations reflect the 'bondage' of dependency of the majority community on minority votes to win power.

On 5 February, at election rallies at Udunuwara and Gampola in the Sinhala Central Province he asserted aggressively what has come to be known as the KGB line (the Kandyan Goigama Buddhist line): "The Presidential election is due to be held. The powerful UNP has selected me as its candidate. I am watching in which direction the people are moving....**The majority community in this country are Sinhalese. Therefore the Sinhalese should govern the country. They governed the country in the past and will do so in the future. The minorities should assist and guide them."**

He threatened without too much subtlety: "If we say that Eelam should be given to the North and the East and ask the Tamil people in the South to go there what would happen? What would they eat? Only the sand of the earth. What are the sources of revenue there? North is not a fertile area. Everything has to be sent from the South. If food items were not sent there for one day all the residents there would starve. Are there rivers and canals in the North? Is there rubber, spices, electricity, medicines in the North? All this has to supplied from the South." **He concluded with a return to to his 'clinging vine' theme: "If the majority (Sinhala) community is not divided the minority communities would twine around the majority like the vines around a sturdy tree."** *(State controlled Sri Lanka Sunday Observer 6 February 1994)*

President Wijetunga's comments about electricity, food and medical supplies to the North expose the genocidal intent of the economic blockade imposed on the Tamil people by the Sri Lanka government during the past three years and more. **His espousal of the 'clinging vine' model for minorities exposes the underlying psyche of Sinhala Buddhist chauvinism which lays claim to the island as a Sinhala Deshaya (land) and which perceives the Tamil people as 'twining' round the ruling Sinhala majority.**

That the executive head of the so called democratic Sri Lankan state should openly and brazenly claim that the Sinhala people, because they are a majority, have the right to rule, gives the answer direct to those non governmental circles in the West and aid donors who believed that the conflict in the island may be resolved on the basis of structures for a 'multi ethnic plural society'. The harsh political reality is there for all to see - there is nothing multi-ethnic or plural about Sri Lanka's body politic.

But ofcourse, President Wijetunga's recent speeches do not say anything new. As long ago as 1953 arch Sinhala Buddhist chauvinist D.C.Vijayawardene wrote:" The history of Sri Lanka is the history of the Sinhalese race... The Sinhalese people were entrusted 2500 years ago, with a great and noble charge, the preservation... of Buddhism.. The nation seemed designed, as it were, from its rise, primarily to carry aloft for fifty centuries the torch that was lit by the great World-Mentor (the Buddha) twenty five centuries ago..."

In 1957, then Sinhala Opposition leader, J.R.Jayawardene declared: "...The time has come for the whole Sinhala race which has existed for 2500 years, jealously safeguarding their language and religion, to fight without giving any quarter to save their birthright... I will lead the campaign..."

**President D.B.Wijetunga's recent statements therefore serve only to underline the political reality that in the island of Sri Lanka there are two peoples, the Tamil people and the Sinhala people; that each of these peoples have a separate national political consciousness; that each trace their origins to different sources; and that it was continuing oppressive alien Sinhala rule that led to the rise of Tamil armed resistance.**

**And, here, the words of the leader of Tamil Eelam, Velupillai Pirabakaran on Maha Veerar Thinam in November 1993 will provide food for political thought for all those concerned with securing a lasting and just peace in the island of Sri Lanka: "I do not believe that there will be a radical change in the hardened attitude of Sinhala chauvinism... Because of the rigid and hardline attitude of Sinhala chauvinism, the creation of an independent state is the only path open to the Tamil people. We have no alternative other than to proceed along that path."**

## A VIEW FROM THE ENEMY'S CAMP

### "I HAD TO LOOK OVER MY SHOULDERS" SAYS SINHALA ARMY COMMANDER

**"As an Armoured Corps Officer who commanded the Armoured Corps I felt thoroughly ashamed that my men from the Armoured Corps permitted two of the best battle tanks to get into enemy hands...** Unfortunately whilst fighting the war I also had to look over my shoulders and engage in other extraneous issues outside my control which was a continuous source of distraction.." - *Lt.Gen.Cecil Waidyaratne, from farewell speech in Sri Lanka state controlled Sunday Observer, 2 January 1994*

### "EXTRAORDINARY SITUATIONS REQUIRE EXTRAORDINARY REMEDIES" - WHAT, AFTER ALL, IS A MASS GRAVE OR TWO!

"Mass graves and killing fields were generally associated with the horror stories of the Hitlers, the Idi Amins, the Pol Pots and other mad men. What a calamity that our thrice blessed land is being branded in world headlines as a killing field, with the discovery of mass graves at Suriyakande recently. It is a shocking indictment on our whole society.... but.. the J.V.P. rebellion had to be overcome. **Extraordinary situations require extraordinary remedies."** - *Sinhala owned Sri Lanka Sunday Times, 16 January 1994*

### "SINHALA SOLDIERS BEING TURNED OUT OF A SAUSAGE MACHINE WITHOUT PROPER TRAINING"

"A former army chief, Dennis Perera says security forces suffer from a chronic lack of political direction and soldiers are being turned out of a 'sausage machine' without proper training..." *London Guradian report on 19 January 1994*

### "A SEPARATE TAMIL HOMELAND WILL BE REALITY BY TURN OF THIS CENTURY"- FORMER SINHALA AIR FORCE CHIEF

"**"We seem to be bungling along"** Mr.Gunatileke (a former Sri Lanka airforce chief) said. **"Our peace intitiatives have failed. If we can't sort this out by ourselves a separate Tamil homeland will be a reality by the turn of this century."** ..Mr.Gunatileke says that the military has failed to maintain its defences inside Tiger held territory let alone go on offensive operations ...Prime Minister Wickremasinghe ... admits that the lack of training is a problem...Defence spending in the coming year is estimated at £285 million up from £259 million this year."- *London Guradian report on 19 January 1994*

லோருக்கும் முன்னே கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவைச் சேர்ந்த பெண் போராளிகள் தமது கடமையைச் செய்தவாறு போய்க் கொண்டிருந்தனர். இருளுக்குள் நகர்ந்து கொண்டிருந்ததால் முன்னே போனவர்கள் வேகமாகப் போய்விட பின்னே வந்தவர்கள் வழிதவறி விட்டார்கள். பின்னால் வந்து கொண்டிருந்தவர்களுக்கோ தமக்கு முன்னே உள்ள பாதை கண்ணி வெடிகள் செயலிழக்கச் செய்த பகுதியா, இல்லையா என்பது தெரியவில்லை. முன்னே போகவும் முடியாது. போகாமல் நிற்கவும் முடியாது. யாராவது ஒருவர் நேரம் தவறினாலும் கூட தாக்குதல் திட்டம் பிசுபிசுத்துப் போய்விடுமல்லவா? உடனேயே அருகிலிருந்த மரமொன்றிலிருந்து இரண்டு தடிகளை முறித்து, தமக்கு முன்னேயுள்ள நிலத்தைத் தட்டிப் பார்த்து கண்ணி வெடிகள் இருந்தால் செயலிழக்கச் செய்து விட்டுக் குறித்த இடத்தை குறித்த நேரத்தில் அடைந்து விட்டனர். கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்வது இவர்களது வேலையுமல்ல. இந்த வேலையில் அவர்கள் துறைபோனவர்களுமல்ல.

ங்கள்

அந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதைச் சரியாக முடிவெடுத்து வெற்றிக்கு வழி அமைத்தார்கள்.

இவர்களின் திறமையைப் பார்த்து நான் பெருமைப்பட்ட சம்பவங்கள் என்றால் இன்னும் நிறைய.... சொல்லிக் கொண்டே போகலாம்"

"புலோப்பளையில் நடந்தது திடீர் மோதல். பூநகரியில் நடந்தது திட்டமிட்ட தாக்குதல். இரண்டு தாக்குதல்களிலும் பெண் போராளிகளின் போர் நுட்பத்தை ஒப்பிட்டுச் சொல்லுங்கள்?"

"பெண் போராளிகள் போர் நுட்பம் விவரிக்க முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. திடீர் மோதலிலேயே திறமையாகச் செய்தார்கள். திட்டமிட்ட தாக்குதலில் மிகவும் திறமையாகச் செய்தார்கள்."

தரை யுத்தத்தை விட கடல் யுத்தத்திலும் இம்முறை பெண்கள் அணி பங்குகொண்டது. கடல்வழியாக இராணுவம் தப்பியோடாமல் தடுக்கும் முயற்சியில், கடற்புலிகளின் மகளிர் படையணியின் கனரக ஆயுதம் பொருத்தப்பட்ட விசைப்படகு ஒன்றும் பங்கு கொண்டது.

எதிரியின் எறிகணை வீச்சுக்குள் அகப்படாது விசைப்படகுகளைச் செலுத்துவதும், கழுத்தளவு நீரில் நின்று எதிரியைக் குறி பார்த்துச் சுடுவதும், கடற்புலிகள் மகளிர் படையணிக்கு ஒரு சர்வசாதாரணமான விடயமாகப் போய்விட்டது.

மொத்தமாகப் பார்க்கப் போனால், 'ஒப்பரேசன் தவளை'யில் பெண் புலிகளின் ஆற்றல், மீண்டும் ஒரு முறை பட்டை தீட்டப்பட்டிருக்கிறது. ■

# சென்று வா மகளே வென்று வா

பூநகரி இராணுவத்தளத் தகர்ப்புக்கான அந்தப் பயிற்சியில்தான் பெண் போராளிகளுக்கு எத்தனை மகிழ்ச்சி.... எத்தனை ஆர்வம்.... எத்தனை நம்பிக்கை.

"நாங்கள் உயிரோட இருக்காட்டிலும்.... இந்த பூநகரி மண் தமிழரிட்டை இருக்கும்" போராளிகள் அனைவரும் கூறிக்கொள்ளும், உறுதியாக நம்பும் வாசகம் இது.

இந்தச் சமருக்காக அவர்கள் பட்ட இன்னல்கள் ஏராளம்.... ஏராளம்....

பயிற்சி எடுத்த அந்த இடம் ஒரு சேற்று நிலம். நாள் முழுவதும் தொடர்ச்சியாக மழை.... எல்லா இடமும் இடுப்பு வரை தண்ணீர். தினமும் பகலிரவாக அந்தத் தண்ணீரிலும் ஓடித்திரிந்துதான் அவர்கள் பயிற்சி எடுத்தார்கள்.

மழை காரணமாக உடைகள் காயாவிடினும் மாற்று உடை இல்லை என்பதைக்கூடச் சிந்திக்காமல், மழையால் ஏற்பட்ட காய்ச்சலுக்கோ இருமலுக்கோ வருத்தங்களுக்கோ ஓய்வு எடுக்காமல், தூங்காமல் விழித்திருந்து பயிற்சி எடுத்தனர். தூக்கம் வேண்டும் என எண்ணாமல் பயிற்சி எடுத்த போராளிகளின் அந்த ஆர்வம் நிச்சயமாக இந்தத் தாக்குதலில் வெற்றியைப் பெற்றுத் தரும் என உறுதி கொள்ள வைத்தது.

பூநகரி நோக்கி கிளாலிக் கடலில் பயணித்தபோது அத்தனை குளிரிலும் நடுக்கத்திலும் பூநகரி முகாம் 'போக்கஸ் லைற்று'களைக் காட்டி "எடியே, பத்தாம் திகதி இரவு இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் கிடக்கும். அந்தப் போக்கஸ் லைற்றை நீ கழட்டு. இந்தப் பெரிய போக்கஸ் லைற்றை நான் கழற்றுகிறன்..." என்று கேலி பேசிய அவர்களின் உறுதி .... உல்லாசம்.......

நீண்ட தூர நடைப் பயணத்தில் குளிரிலும், மழையிலும் போருக்குத் தேவயான பொதிகளுடன் நடக்கையில், "இவ்வளவு தூரம் நடக்கிறம்.... இதுக்கு உதவுற இந்தக் கால் இந்தச் சண்டையிலை இல்லாமல்போனா......?" என்ற ஒரு பெண் போராளியின் கேள்விக்கு "இல்லையெண்டால் என்ன இப்ப? காலில்லாதவையள் எத்தனை பேர் இயக்கத்திலை சாதனை படைக்கேல்லையே? அது மாதிரி நாங்களும் சாதனை படைப்பம்...."என்றாள் இன்னொரு தோழி.

'ஒப்பரேசன் தவளை'யில் தங்களின் அங்கங்களை, தோழிகளை, தோழர்களை, ஏன் தங்கள் உயிரையே இழக்க நேரலாம் என்பது இவர்கள் எல்லோருக்குமே தெரியும். ஆனால் யாருமே அதற்காகக் கவலைப்படவில்லை. மனம் சோர்ந்துவிடவில்லை. மேலாக அதற்குத் தயாராகவே இருந்தார்கள்.... இந்த முகாமைக் கைப்பற்ற வேண்டும், மக்கள் சிரமமின்றிப் பயணம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாகவே இருந்தார்கள்.

நான் நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிறேன். வரப்போகும் இழப்பை ஏற்றுக் கொள்ளத் துணிந்த அந்தத் திடமும், துணிவும் பிரபாகரனின் பிள்ளைகளைத் தவிர யாருக்கு வரும்....?

பெண் வேங்கைகளும் களத்தில் பாய்ந்தனர். கடும் எதிர்ப்புக் கிடைத்தபோதிலும் யாரும் சளைக்கவில்லை. எத்தனையோ பெண் போராளிகள் காயங்களுடன் நின்று போராடினார்கள். சுமார் ஆயிரம் மீற்றர்வரை இராணுவத்தினரை துரத்திச் சென்று தாக்கினர்.

மிக வேகமாகவும் உக்கிரமாகவும் நாம் போரிட வேண்டியிருந்தது. போரிட்டோம்.

பல ஆயுதங்களும் பல இராணுவத்தினரின் சடலங்களும் நாங்கள் களமாடிய பிரதேசத்திலிருந்து எம்மால் எடுக்கப்பட்டன.

## ஒரு போராளியின் கள நினைவுகள்

சத்தம் போடக்கூடாத ஒரு பிரதேசத்தில் வசுவண்டியில் போகும்போது, சத்தம் போடக்கூடாது எனத் தெரிந்தும், பொறுப்பாளரின் கோபத்துக்கு ஆளாகியும், பிரியும் வேளை என்பதால் கலகலத்துப் பயணித்ததை, ஒருவரை ஒருவர் உற்றுநோக்கிய அந்த அன்பை....

ஏழு பேர் மட்டுமே தங்கக்கூடிய கொட்டிலில் நெருக்கடி காரணமாக (மழைநேரம்) எழுபது பேர் தங்க நேர்ந்தபோது, தங்கள் ஒரு காலை மட்டும் நிலத்தில் ஊன்றி மறுகால் வைக்கும் இடத்தில் இன்னொரு போராளியின் காலை ஊன்றவிட்டு, ஒற்றைக் காலைத் தூக்கியபடி எழுபது பேருமே இரவு முழுவதும் கொட்டிலினுள் நின்றதை, இந்தப் புரிந்துணர்வை......

கிடைத்த சொற்ப உணவை எல்லோருமே பகிர்ந்து உண்ட அந்த நேசத்தை ..... யாருமே எழுத்தில் வடிக்கமுடியாது.

பத்தாம் திகதி இரவு எங்கும் நிசப்தம். படையணிகள் போருக்கு அணிவகுத்து நிற்கின்றன. வெற்றிக்காக எமது பணியைச் சரிவரச் செய்வோம் எனச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்கின்றன.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!" எனக் கோசமிட்டவுடன் ஆரம்பித்த பலமான மழை சண்டை ஆரம்பிக்கும் வரை பெய்து எங்களை வாழ்த்தியது. சண்டை ஆரம்பித்தது.

கைப்பற்றப்பட்ட பிரதேசம் எங்கும் வேங்கைகளின் தலைகள் நிமிர்ந்து நின்றன.

பூநகரித் தளத்தை தகர்த்துவிட்டு, மீண்டும் கடல்வழியாகத் திரும்பும்போது, பூநரியில் எந்த போக்கஸ் லைற்றுக்களும் எரியவில்லை. ஆனையிறவில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. "இனி இந்த லைற்றுக்களைத் தானடி உடைக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டவர்கள், "கொஞ்சம் பொறுங்கோ. இனி உங்களிட்டைத்தான் வருவம் என்று அந்த மின்விளக்கு வெளிச்சத்துடன் கேலி பேசினார்கள்.

ஆனால், "முன்பு தம் மகன்களைத் தாய்மார் போர்க்களத்துக்கு அனுப்பினார்கள். இன்று என் மகள்களைக் களத்துக்கு நான் அனுப்புகிறேன். "சென்று வா மகளே. வென்று வா!" என்று வாழ்த்தி எம்மை வழி அனுப்பிய எங்கள் தந்தையை, தலைவனை, "வென்று வந்து விட்டோம்...." எனக்கூறியபடி ஓடி வந்து பார்ப்பதற்கு எண்பத்தெட்டுச் சகோதரிகள் எம்முடன் இல்லை. ■

**- சித்திரா**

**நன்றி: 'சுதந்திரப்பறவைகள்'**

# போராளிகளின் பேனாக்கள் பேசுகின்றன

பூநகரி இராணுவத் தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளிகள் சிலரது கடைசிக் கடிதங்களிலிருந்து சில பகுதிகள்.

*07-11-1993*
*தமிழீழம்*

*அன்பின் அம்மாவுக்கு களத்தில் இருந்து எழுதிக்கொள்வது,*

*இக்கடிதம் கிடைக்கும்போது நான் வீரச்சாவடைந்திருக்கலாம். அதை நினைத்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். தாயக மீட்புக்காக களத்திலே போராடி வீரச்சாவடைந்த வீரமகளைப் பெற்ற வீரத்தாயாக நிமிர்ந்து நிற்கவேண்டும். அதையே நான் பூரணமாக விரும்புகின்றேன்.*

*மேலும் என் புகழுடல் உங்களுக்கு கிடைக்காவிடில், அதை இட்டு எம் சக போராளிகளிடம் சண்டை பிடிக்கக்கூடாது. நான் உங்களுக்கு மட்டும் பிள்ளை அல்ல. இந்தத் தமிழீழத் தாய்மார் அனைவருக்கும் குழந்தை. என்னை நீங்கள், உங்களிடம் வரும் எங்கள் உடன் பிறப்புக்களில் பாருங்கள். அவர்களில் என்னைத் தேடுங்கள். அவர்கள் உங்கள் பிள்ளைகள்தான். அவர்களை அரவணையுங்கள்.*

*இவ்வண்ணம்*
*உமா*
*(மேஜர் வித்தியா)*

*தமிழீழம்*
*1993-07-19*

*என்றும் என் அன்பின் நண்பிக்கு,*

*எங்களுக்கு வேவு எடுக்கும் வாய்ப்புத் தரப்பட்டதையிட்டுப் பெருமைப்படுகிறேன். தமிழீழ வரலாற்றில் மகளிர் வேவு அணியின் சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். என் உடலிலிருந்து உயிர் பிரியும்வரை இதற்காகப் பாடுபடுவேன்.*

*நான் பூநகரி மண்ணில்தான் விதையாகின்றேனோ, தெரியாது. சுதந்திரத் தமிழீழ விடியலை நான் என் கண்களால் கண்டு மகிழவேண்டும். என் அன்னையின் வளர்ச்சியை அவளின் எழுச்சிக் கோலத்தை என் கண்களால் பார்க்க வேண்டும். இது நிறைவேறாது போகலாம். நண்பி, நான் இறந்தால் என் கண்களை பார்வை இழந்த ஒரு போராளிக்குப் பொருத்தச் சொல்லுங்கள். அதன் மூலமாவது என் தமிழீழத் தாயின் சுதந்திர விழாவைக் காணுவேன்.*

*இப்படிக்கு*
*துளசிரா*
*(கப்டன் துளசிரா)*

# சுதந்திரத்தைத்தேடி..



அடர்ந்த காடு அருகே வயல் வெளி. இடையே இரண்டாம் உலக மகாயுத்தத்தை நினைவு கூறும் குழிகள் (குளங்கள்), சுதந்திரமாக உலாவரும் மந்தை, மாட்டுக் கூட்டங்கள். இயற்கையை இரசித்து இனியகுரல் எழுப்பும் இனிய பட்சிக் கூட்டங்கள், மீனின் வரவை எதிர் பார்த்து தவம்செய்யும் நாரையினம் இவ்வாறு இயற்கை அழகை தன்னகத்தேகொண்ட அந்த சிறிய கிராமத்திலே ஓர் ஆழகான குடும்பம். அங்கே தோன்றிய சந்தோசம் ஏனோ நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை. மழைமேகம் போல் மறைந்துவிட்டது. தம்பையா, யோகம்மா தம்பதியருக்கு தவப்புதல்வர்கள் ஒன்பது பேர். பெண்களுள் மூத்தவளாகப் பிறந்தாள் செல்வராணி எனும் மழலை. தனது மழலை மொழியாலும், குழந்தை விளையாட்டாலும் குடும்பத்தையே மகிழவைத்தாள். செல்வராணியைச் செல்லமாக செல்வி என்றே அழைத்தனர் அவளின் பெற்றோர். சேற்றின் செந்தாமரை போல் விளங்கினாள் அவள். ஆம் அவள்தான் றூபி. 2 ஆம் லெப்டினன்ட் றூபியாக தமிழீழ மண்ணுக்கு உரமானவள்.

முல்லைத்தீவினில் முத்தையன் கட்டு எனும் கிராமத்திலே பிறந்து தனது ஆரம்பக் கல்வியை அங்கேயே கற்று தனது இளமை உணர்வுகளை எல்லாம் சுமந்து கன்னியாக உலாவரும் வேளையிலே பெரும்புயல் ஒன்று அவள் வாழ்க்கையிலே வீசியது. அந்நியர் ஆட்சியிலே அதுவும் பிறநாட்டவன் வந்து எமது மண்ணில் அட்டூழியம் புரியும் வேளையிலே, அவளின் தம்பி எமது இயக்கத்தின் பகுதி நேர உறுப்பினர் ஆனான். அதனை அறிந்து எமது நாட்டின் தேசத் துரோகிகள் அவன் உயிருக்கு உலை வைக்கின்றனர். குடும்பத்தின் விளக்காக குடும்பத்தையே காக்கவேண்டியவன் துரோகிகளின் துரோகத்தனத்திற்கு தன் உயிரைக் கொடுக்கிறான்.

அண்ணனின் இந்நிலையைக் கண்ட தங்கை கொதித்தெழுகிறாள் புயலாக. மாறுகிறாள் புலியாக. புலியானவள் தான் றூபியின் தங்கை, அதாவது நிவேத்திரா. தங்கையானவள் தமயனைக் கொன்றவனை அழிக்கப் புறப்பட்ட வேளையிலே றூபியின் தங்கை அதாவது நிவேத்திராவின் அக்கா ராணி புறப்படுகின்றாள். புலியுடன் இணைய. ஆனால் மகளிர் படையினரோ தங்கை இருக்கும் போது நீர் ஏன் வருகிறீர் என மறுப்புத் தெரிவிக்கின்றனர். திரும்பவும் வீடு சென்று தங்கைக்கு ஏதாவது நடந்தால் வாரும் என்றும் கூறுகின்றனர். மனமின்றி வீட்டிற்குச் சென்றவள், தம்பியை இழந்து தங்கையை இயக்கத்திற்கு அனுப்பிவிட்டு அவளால் நிம்மதியாக இருக்க முடியாது விரக்தி அடைந்த மனதுடன் தனது உயிரை தானே மாய்த்துக் கொள்கிறாள். பெற்றோரின் நிலையோ கவலைக்கிடம். காரணம் மகனை பறிகொடுத்தனர். மகளும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டாள். மற்ற மகளும் இவ்வாறு செய்தாள். பெற்றவர்கள் நிலை என்னாவது? எனினும் மனவுறுதியுடன் முல்லைத்தீவில் இருந்து வரணி நோக்கி வருகின்றனர். பிள்ளைகளைப் பிரிந்தது ஓர்புறமும், பொருளாதாரக் கஸ்ரம் மறுபுறமும் வாட்ட வேதனையில் வாழ்கின்றனர் அப்பெற்றோர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கும் வேளையிலே தான் அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தன்னை முழுநேர உறுப்பினராக்க விரும்பி முகாம் நோக்கி வருகின்றாள். அவளை அணுகி விசாரித்த மகளிர் படைப்பிரிவினர் திரும்பி வீட்டிற்குப் போகும்படி அனுப்புகின்றனர். தங்கை இருக்கும் போது நீங்கள் ஏன் வரவேண்டும். தங்கைக்கு ஏதாவது நடந்தால் வாருங்கள் எனக் கூறுகின்றனர். ஆனால் அவள் வீட்டிற்குச் செல்ல மறுக்கின்றாள். அந்த மகளிர் படைப் பிரிவினரிடம் "அக்கா நான் என்ன திரும்பிப் போகவோ வந்தேன். ஓர் குடும்பத்தில் இருவர் இருந்தால் என்ன? தமிழீழத்தில் எத்தனை பேர் ஒரே குடும்பத்தில் உள்ள சகோதரங்கள் இருக்கிறார்கள். நான் மட்டும் ஏன் இருக்கக் கூடாது?" என்று கேட்கின்றாள். "அப்படி நான் திரும்பிப் போவதாயின் என் உயிரற்ற உடல் தான் செல்லும்" என்றும் கூறுகிறாள். மகளிர் படையினர் அவளின் தங்கை செய்ததை நினைத்து உடனே இயக்கத்தில் இணைக்கின்றனர். அவளின் உறுதியான வார்த்தையே அவளை இயக்கத்தில் இணைக்கிறது.

இதனை அறிந்த அவளின் தம்பிக்கு அக்காமார் இவ்வாறு செல்லும் போது நான் ஓர் இளைஞன் ஏன் வீட்டில் இருக்க வேண்டும் என்ற ஓர் புதிய கேள்வி உருவாகிறது. உடனே அவனும் தன்னை இணைத்துக் கொள்கிறான் இயக்கமதில். அவன் தான் கட்டைக்காட்டினிலே கயவருடன் போரிட்டு விட்டு தமிழ் அன்னை மடி மீது துயில்கொள்ளும் வீரவேங்கை சதீஸ்.

இவ்வாறு இணைந்த செல்வராணி தன்னை றூபி என மாற்றிக் கொள்கிறாள். அவள் அமைதியுடன் மிகுந்த கவனத்துடன் சகலதையும் அறிய வேண்டும் என்ற ஆர்வம் படைத்தவள். தன்னை மற்றவர் பிழையாக எண்ணக்கூடாது எனுக் கொள்கை உடையவள். பயிற்சி நேரம் இவளுக்கு கால் உளுக்கிவிட்டது. ஓட முடியாது. எனினும் ஒருவாறு இழுத்தி முத்து ஓடிக்கொண்டிருக்கும் போது பயிற்சியாசிரியர் பார்த்து விட்டார். உடனே ஆசிரியர் திலகா (கப்டன் திலகா) மறிக்கிறார்.. அதற்கு றூபி நான் நின்றால் மற்றப் பிள்ளைகள் என்ன நினைப்பார்கள் எனத் தொடர்ந்து ஓட முயற்சிக்கிறாள். சொன்னால் நிற்பதுதானே என மாஸ்ரர் கூற உடனே பணிந்து நிற்கிறாள். மண்ணை நோக்கியபடி குனிந்து செல்லும் அப் பெண் போராளி யாரென்றால் நிச்சயமாக றூபியாகத்தான் இருக்க வேண்டும் எனக்கூறி விடுவார்கள். எதனையும் தட்டிக் கேட்கும் சுபாவம் படைத்தவள். அதாவது சரியானது இது தான் என்றாள் யாரென்று பார்க்காது நீதிக்கு தலை வணங்கும் நற்பண்புண்டு.

அவள் பல களம் கண்டவள். பலாலி, கோட்டை, சிலாவத்துறை, காரைநகர், வவுனியா, கட்டைக்காடு, மணலாறு என்று எல்லா இடமும் அவளின் பங்களிப்பு உண்டு. எந்த இடத்திலும் சிறு பங்களிப்பாவது இருக்க வேண்டும் என்று துடியாய் துடித்து தன்னையும் இணைத்துக் கொள்வாள். அவள் செல்லும் களங்களிலெல்லாம் கூறுவாள், இவன்களாலே தானே என்ர தம்பியும், தங்கையும் இறந்தவர்கள் என்று ஆவேசமாகவே நின்று அடிபடுவாள். ஓர் முறை குழுத் தலைவியாக ஓர் முகாமில் இருக்கும் போது நான் "அக்கா சாப்பிட வாருங்கள்" என்றேன். "நீங்கள் போங்கள். நான் பிள்ளைகள் வந்தவுடன் வருகின்றேன்" என்று கூறினாள். அப்போது அவளின் குறூப் பிள்ளைகள் குளிக்கச் சென்றிருந்தனர். இதிலிருந்து அவள் தனது குறூப்பில் எவ்வளவு கவனமானவள் என உணர்ந்து கொண்டேன். இன்னுமோர் முறை பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருக்கும் போது அவரின் பிள்ளைகள் "வெட்ட வேண்டாம் அக்கா. நாங்கள் வெட்டுகிறோம்" என்றார்கள். உடனேயேஅவள் "ஏன் நான் வெட்டக் கூடாதா" எனக் கேட்டு விட்டு தொடர்ந்து வெட்டினாள் - தான் வெட்டினாள் தானாம் பிள்ளைகள் சோர்வடையாமல் வெட்டுவார்களாம். தற்பெருமை எதுவுமின்றி அவள் காணப்பட்டாள்.

இன்னுமொன்று நினைவிற்கு வருகின்றது. என்னவென்றால் நானும் என்னுடன் இணைந்த சில போராளிகளும் சேர்ந்து, "அக்கா நீங்கள் பயிற்சி ஆசிரியர் நிவேத்திரா அக்காவின் அக்காவா" என்று கேட்டோம். அப்போது இவ நிவேத்திரா அக்காவின், அக்கா என்பது எமக்குத் தெரியாது சில சந்தேகத்தின் பேரிலேயே கேட்டோம். அதற்கு "நிவேத்திராவா? யார் அவ? மன்னிக்க வேணும். நிவேத்திரா அக்காவா, அப்படி ஓர் அக்கா இருக்கிறா என்று தெரியும். ஆனால் அவ என்னுடைய தங்கை அல்ல" என மறுத்துவிட்டார். நாம் பல முறை வற்புறுத்தியும் பதிலளிக்கவில்லை. பின்பு நாம் வேறுவழியாக அறிந்து அவவிடம் முழுவிபரமும் கூறி "நீங்கள் உண்மையில் நிவேத்திரா அக்காவின் அக்காதான். ஏன் எங்களுக்குச் சுத்துகிறீர்கள்"? எனக் கேட்டதற்கு புன்சிரிப்புடன் அந்த இடத்தைவிட்டு அகன்றுவிட்டார்.

இவ்வாறு நாட்கள் கழிந்து கொண்டிருக்கும் வேளையில் தான் ஆனையிறவு மீதான தாக்குதலுக்கு பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பயிற்சி முடிந்து ஆனையிறவில் நிற்கும் அவளுக்கு கட்டைக்காட்டிற்கு வரும்படி அழைப்பு வருகிறது. கட்டைக்காட்டினிலே காவல் கடமையில் நிற்கும் போது அவளது தம்பி (அதாவது வீரவேங்கை சதீஸ்) அவளைக் காணுகிறான். பொறுப்பாளரின் அனுமதி பெற்று இருவரும் கதைக்கின்றனர். தேசத்தின் எல்லையில் பாசத்தின் பிணைப்புகள் அங்கே தெரிகிறது. ஒருவருக்கொருவர் அறிவுரை, அதிலே "தம்பி நீ நன்றாக அடிபட வேண்டும். பின்னுக்கு வரக் கூடாது. அதற்காக கவலையீனமாக காயப்படக்கூடாது" என்று அந்த அன்பு அக்கா கூறுகிறாள். ஏனெனில் அவள் ஓர் இயக்க உறுப்பினரையும் வீணாக இழக்கத் தயாரில்லை. "அக்கா நீங்களும் கவனம்" எனக்கூறி விடைபெறுகின்றனர். அதுதான் அவர்களின் கடைசிச் சந்திப்பும், அறிவுரையும் என்று இருவருமே எண்ணவில்லை. ஆனால் விதியானது கடுகளவும் பிசகாது தன் தொழிலைச் செய்கிறது.

சண்டை தொடங்கிவிட்டது. கட்டைக்காட்டில் தொடர்ந்து மோதல். பல போராளிகள் மண்ணின் மைந்தர்களாக மாறித் தமிழ் அன்னையின் மடிமீது ஆனந்தமாக அமைதியாக தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். சண்டை ஓய்வுக்கு வரும் வேளையில் குழு பிரிக்கப்பட்டு திரும்பவும் போர் முனைக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் போது, "றூபி நீ போகவேண்டாம்" எனக்குழுத் தலைவி கூறுகின்றார். ஏன் என்பது போல் இருந்தது அவளின் பார்வை. பிரித்த குறூப்பை அனுப்பிவிட்டு அவளிடம் வந்த பொறுப்பாளர், "உமக்கு அண்ணை தம்பி யாராவது இருக்கிறார்களா?" எனக் கேட்கிறார்.



2 ஆம் லெப். ரூபி

கேட்டதும் "ஏன்? என் தம்பிக்கு என்ன நடந்தது" என்றாள். அவளுக்கு ஒருவாறு சமாதானம் சொல்லி வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வரும்போது அந்தச் செய்தி அறிவிக்கப்படுகிறது. "தம்பியானவன் மண்ணுக்கு உரமாகி விட்டான்." உடனே அக்கா உறுதி பூணுகிறாள். தம்பியைக் கொன்றவன் தலை கொய்வது திண்ணமென்று.

வீட்டிற்கு வந்து வீட்டில் நடந்த கிரிகைகளை பார்த்து விட்டு இதெல்லாம் என்ன செய்கிறீர்கள் என்றும், அவன் சாகவில்லை. தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இவ்வாறான கடமை எல்லாம் தேவையில்லை அவனைக் கொன்றவனை கொல்வதே மேல் எனக் கூறுகிறாள். தம்பியைக் கொன்றவனை அவனின் நாற்பத்தைந்துக்கு இடையில் கொன்றுவிட்டு நானும் தம்பியுடன் இணைவேன் என்றாள். அதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருக்கும். வேளையிலே தான்,

மின்னல் தாக்குதலென மணலாறு மாவட்டத்தில் ஆரம்பமாகியது. விடுமுறையில் நின்றாள் றூபி. அப்போது பெற்றோர் அவ்ளை மறிக்கின்றனர். "என்னை மறிக்க வேண்டாம். தம்பியின் நாற்பத்தைந்திற்கு என் பொடிதான் வரும்" என்கிறாள். அண்ணனுடன் முகாமுக்குச் சென்ற றூபி ஏதோ ஒரு விதமாக மணலாற்றுக்கு சென்றுவிட்டாள். அங்கே சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆம் அவள் கூறியது போலவே தம்பியின் நாற்பத்தைந்திற்கு அவளின் உயிரற்ற உடலைக் கொண்டு தங்கை சென்றாள். ஆம் அவள் மரணத்திலும் வென்றுவிட்டாள். சொன்னதையே செய்தாள். செய்வதையே சொன்னாள். அவளின் சொல்லுக்கும் செயலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

2ம் லெப்டினன்ட் றூபி, பலசாதனைகள் படைத்துவிட்டு பாசத்தையும் காட்டிவிட்டு தம்பியுடன் இணைந்து கொள்ள, ஏன் மற்றத் தம்பி தங்கைகளுடனும் இணைந்து கொள்ள தாய் நாட்டை நசுக்க வந்த கொடிய படையை தவிடுபொடியாக்கிவிட்டு வான் நோக்கிச் சென்றுவிட்டாள். ஆம் அவள் மண்ணிற்காக மடிந்துவிட்டாள். ஆனால், அவள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம். மலரும் தமிழீழத்தில் அவள் புது மலராக மலர்வாள். ■

■ **யோகா**

## களத்திலிருந்து மலரும் நினைவுகள்

பூநகரிமுகாம் தகர்ப்புக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. போராளிகளின் முகங்களில் என்னவென்று இனங்கான முடியாத பல உணர்வுகள். சில போராளிகள் தமது அம்மாவுக்கு, அப்பாவுக்கு, தோழர்களுக்கு என கடிதங்கள் எழுதி, பொலித்தினால் சுற்றி மடித்து, காற்சட்டைப் பைகளுக்குள் பத்திரப்படுத்திக் கொள்கின்றனர். ஒரு போராளி அருகில் நின்ற தோழியிடம்,

"எடியே, நான் செத்தனெண்டால் இந்தக் கடிதத்தை வீட்டுக்காரருக்கு குடுத்துவிடு. என்ன?" என்று சொல்ல, பதிலுக்கு அவள்,

"பாப்பம். நான் உயிரோடை இருந்தால் குடுப்பன். சிலவேளை நான் சாக நீதான் என்ர கடிதத்தை வீட்டுக்காரரிட்டைக் குடுக்க வேண்டி வருதோ, என்னவோ?"

என்று சொல்ல, சூழ இருந்த எல்லோருக்குமே சிரிப்பு வந்துவிடுகிறது.

"அடியே, நான் செத்தனெண்டா, முதல் வேலையா திலீபனண்ணாவைத்தான் சந்திக்க வேணும்."

"அவர் எவ்வளவு பெரிய ஆள்! நீ நெனைச்ச உடனை சந்திக்கலாமோ?"

"ஓம், என்ன! சோதியக்காவும் இருப்பா. கிட்டண்ணையும் அங்கதான் இருப்பார். ஆனா எல்லாரையும் என்னெண்டு பாக்கிறது? எத்தனை பேர் பாக்கிறதுக்கு நிப்பாங்கள். கேட்ட உடனே கதைக்க விடுவாங்களோ?"

"அட, வீட்டுக்காரரோட இருக்கலாமெண்டு பாத்தா அதுவும் ஏலாது. மாவீரர்கள் எண்டு சொல்லி, எங்களைத் தனியா ஓரிடத்தில்தான் விடுவாங்கள்."

"எடி அப்படியெண்டா, இஞ்சை மாதிரி அங்கையும் அடிக்கடி லைன் அப் நடக்கும், என்னடி?"

"பின்ன என்ன? அடிக்கடி பணிஸ்மெனும் செய்யவேண்டி வரும். பெரிய பெரிய ஆக்கள் கனபேர் இருக்கிறபடியா குழப்படியும் செய்யேலாது. என்ன கரைச்சலடியப்பா இது?"

"அதைவிடப் பேசாம இஞ்சையே இருந்து விடலாம்"

இந்நேரம் "லைன் அப்" என்று ஒரு குரல் சத்தமாகக் கேட்கிறது. தாங்கமுடியாத சிரிப்புடன் போருக்கு அணிவகுத்தார்கள் அவர்கள்.

– சந்திரிகா

நன்றி: சுதந்திரப்பறவைகள்

# விடியும்

சிறு கதை

சுதாமதி

நாய்களின் பெருஞ்சத்தமான குரைப்புக்கள் தொடர அவர்கள் வழமையாக வந்து போவார்கள். அந்நேரம் மட்டக்களப்பின் ஒவ்வொரு மூலையும் பயத்தால் விழிபிதுங்கிக் கிடக்கும். தங்கச்சி ஓடிவந்து, பயத்துடன் அம்மாவோடு ஒட்டிக்கொள்வாள். அவர்களை மருட்சியோடு பார்ப்பாள். அம்மா மட்டும் அதே வெறித்த பார்வையோடும் சோகம் அப்பிய முகத்தோடும் வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணிவில் நிற்பாள். அவர்களைப் பார்க்க அருவருப்பாக இருக்கும். அவர்களது கரகரப்பான குரலும் மொழிபுரியாத பாசையும் அம்மாவை மருளச்செய்யும்.

கனத்த சப்பாத்துக் காலடிகளின் பதிவோடு இன்னும் அவர்கள் வழமைபோல வந்தார்கள். முற்றத்திற் படுத்திருந்த மெலிந்துபோன -சீவனற்ற கிழட்டு நாயை காலால் உதைத்தார்கள். அது வலி தாளாது அலறலோடு சுருண்டு விழ பெரிதாகச் சிரித்தார்கள்.

அம்மாவுக்கு நெஞ்சு படபடத்தது. தங்கச்சி, அம்மாவின் சேலைத் தலைப்பை விடாது பற்றிக் கொண்டாள். அவர்களது உரத்த அதட்டலான குரல், அம்மாவுக்குப் பயத்தை ஊட்டியது. அவர்கள் அம்மாவிடம் ஏதோ கேட்டனர். அம்மா மலங்க மலங்க விழித்தாள். அவர்களோடு வந்த 'எங்களில் ஒன்று' அதை மொழி பெயர்த்தது.

”நீ போனகிழமை மகனைப் பார்க்க யாழ்ப்பாணம் போனியாம்; உண்மை தானே”.

”இல்லை ஐயோ, நான் கொழும்புக்குத்தான் போனனான்” -அம்மாவுக்கு நாக்குழறியது. வார்த்தைகள் தடுமாறின.

”அப்ப என்ன பலகாரம் செய்துகொண்டு போன மாதிரிக் கிடந்தது. எங்களுக்கென்ன காது குத்துறியோ”?

மரியாதையிழந்த அவனது வார்த்தைகளைக் கேட்க அம்மாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இயலாமையோடு மனதுக்குள் திட்டித்தீர்த்தாள்.

”இஞ்சை எங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை இருந்துகொண்டு, எங்களுக்கு வாலாட்ட நினைக்காதையுங்கோ; தெரியுமே. யாழ்ப்பாணம்... பெடியளைப் பார்க்கப் போறது; அப்பிடி இப்பிடியெண்டு கேள்விப்பட்டமோ, கொளுத்திப் போடுவம்; கவனம்” உறுமிக்கொண்டு போனார்கள். அம்மாவின் கால்கள் படபடத்தன. அவளது சொரசொரத்த உதடுகள் ஒருமுறை ஆத்திரத்தோடு மடிந்தன. ”எப்பதான் நாங்கள் நிம்மதியா இருக்கப் போறமோ”? அம்மாவின் வாய் ஏக்கத்தோடு முணுமுணுத்தது. தங்கச்சி அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

”நாங்கள் எங்கையாவது போய்விடுவமே அம்மா”! -அவளது பிஞ்சு விழிகளில் ஈரம் பனித்தது. அம்மாவுக்கு தாங்க முடியாமல் இருந்தது. அம்மா அவளை அணைத்து ஆறுதல்படுத்தினாள்.

”எங்கடை வீடு, காணி இதைவிட்டிட்டு எங்கை மகள் போறது”?

”முந்தி கலவரத்துக்கு காட்டுக்குள்ளை போய் இருந்தமே; அப்படிப் போய் இருப்பமே”? அவளது வேதனையான வார்த்தைகளால் அம்மா தவித்துப் போனாள். அவளைக் கட்டிக்கொண்டு ஆறுதல்படுத்தினாள்.

”கொஞ்சக் காலத்திலை இஞ்சையிருக்கிற ஆமியையெல்லாம் பெடியள் துரத்திப் போடுவாங்கள். அப்ப நாம நிம்மதியா இருக்கலாம்” -அம்மாவின் வார்த்தைகள் நம்பிக்கையோடு வெளிப்பட்டன.

”அம்மா... அண்ணையைப் பார்க்கப் போவமே” தங்கச்சியின் கலங்கிய விழிகள் அம்மாவிடம் கெஞ்சின.

”என்னண்டு போறது? இப்பதான் அவங்கள் இதுக்காக வந்திட்டுப் போறாங்கள். இதை அறிஞ்சாங்கள் எண்டால்...” அம்மாவிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளிப்பட்டுத் தேய்ந்தது.

வாகீசனை நினைக்கும் போது அம்மாவை ஒரு கணம் ஏக்கம் தழுவிக் கொள்ளும். மறுகணம் நீண்டதொரு நிம்மதிப் பெருமூச்சு எழும். ”அவன் இஞ்சையிருந்தால் இந்நேரம் வாவியிலை மிதந்திருப்பானோ, தகப்பனை மாதிரி...” அம்மா கற்பனை செய்து பார்த்து, மனதைத் திருப்திப் படுத்திக் கொள்வாள். 'நாட்டுக்காக...' என்ற திருப்தி மனதில் நிறையும். அவனை நினைக்கும் போது, அம்மாவுக்குப் பெருமையாக இருக்கும்.

'என்ன பிள்ளை அவன்'. அவனை ஒரு போதும் அதட்டி எச்சரித்ததாக அம்மாவுக்கு ஞாபகம் இல்லை. அவன் இருக்கும் போது, தனக்கொரு வளர்ந்த பொம்பிளைப் பிள்ளை இல்லையே என்ற கவலைகூட அம்மாவுக்கு ஏற்பட்டதில்லை.

வயலுக்குப் போய்... பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகப் படித்து... வீட்டு வேலைகளில் உதவிசெய்து...

அவன் போய்விட்டது - அம்மாவுக்கு தனது வேலைகளில் ஒரு கையை இழந்ததுபோல... என்றாலும் அவனை நினைக்கும் போது அம்மாவின் மனது நிறைகிறது.

அது ஒரு மம்மலான பகற்பொழுது. அன்று அம்மாவுக்குக் நிறைய வேலைகள் இருந்தன. அன்றைக்கு வந்த தபாலில் அவனுக்கு மேல்படிப்புக்கான வெளிநாட்டுப் புலமைப்பரிசில் அனுமதி கிடைத்தபோது... அம்மா இயல்பாக, எல்லாத் தாய்மாரும் அடைகின்ற சந்தோசம் அடைந்தபோது -அவன் மட்டும் எப்படி நின்றான்.

”அம்மா நான் ஒரு நாளும் போக மாட்டன். உங்களையும் தங்கச்சியையும் விட்டிட்டு, அதுக்கும் மேலாக இந்த மண்ணையும் விட்டிட்டு நான் போக மாட்டன்” -சின்னமாமி எடுத்துச்சொன்ன போதும் அவன் கேட்கவில்லை, அம்மா, நீண்டு வளர்ந்துவிட்ட தன்மகனைப் பெருமையோடு பார்த்தாள். அப்பா மட்டும் அம்மாவைப் பார்த்து ”நீ வளர்த்த வளர்ப்பு” என்று திட்டிய போதும் அவன் மசியவேயில்லை.

அதற்குப் பிறகு திடீரென ஏற்பட்ட சுற்றிவளைப்புக்களில் வாகீசனை ஒருவாறு ஓடித்தப்பச் செய்து, காட்டுக்கு அனுப்பிவிட்டு அப்பா நின்ற போது, வேலி பிரித்து அவர்கள் வந்தார்கள். அம்மாவும் தங்கச்சியும் வீரிட்டுக்கத்த அப்பாவை இழுத்துச் சென்றார்கள். அம்மா குறுக்கே விழுந்து கதறியழுத போது அம்மாவை நெட்டித் தள்ளிவிட்டு...

அடுத்த நாள் நெற்றியில் சூட்டுக் காயத்தோடு உப்பிப் பருத்துப்போன அப்பாவின் உடலைக்கொண்டு வந்தார்கள். அம்மாவுக்கு வெள்ளைப் புடவையும் வெறுமையான நெற்றியும் சொந்தமாயின. வாழ்வின் தேக்கத்தால் குழிவிழுந்து போன கண்களுடன் அவள் தினமும் கோயிலுக்குச் சென்றாள். அம்மா தன்னிடம் எஞ்சியிருக்கும் தன் மகளினதும் மகனினதும் உயிர்களுக்காக விரதங்கள் இருக்கத் தொடங்கினாள்.

அதன் பின்னர் வாகீசன் மாறிப் போனான். நீண்ட நேரங்களைத் தனிமையிற் கழித்தான். இரவில் நெடுநேரங் கடந்தபின்னர் வீட்டுக்கு வந்தான்.

அதற்கடுத்த காலங்களில் சுற்றிவளைப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்தன. மட்டக்களப்பு வாவியில் உப்பிய மனித உடல்கள் மிதந்து வந்தன. வீடுகள் தோறும் அழுகுரல்கள் கேட்டன.

அமாவாசைக்கு முந்திய ஒரு இரவில் அம்மாவின் மகன் காணாமற் போனான். அவனோடு அந்த ஊரின் நாலைந்து பேரும் காணாமற் போனார்கள்.

”அவங்கள் இயக்கத்துக்குப் போட்டாங்கள்” காதோடு காதாக அந்த ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள்.

அம்மா காலத்தின் தேவையை அறிந்துகொள்கின்ற சூழ்நிலையில் அவர்கள் காணாமற் போனார்கள். அம்மா அவன் இல்லாத வெறுமையை உணரத் தொடங்கினாள். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அழுதாள். கோயிலுக்குப் போவதை நிறுத்திக்கொண்டாள். சுவாமி விரதங்கள் எதுவிலும் நம்பிக்கையற்றவள் போல மாறிக்கொண்டாள். இரவு வேளைகளில் அரவமில்லாது வரும் மண்ணின் குழந்தைகளில் தன் மகனைக் கண்டாள். அவர்களை உபசரிப்பதும்; சத்தமில்லாது அனுப்பிவைப்பதும்; அவர்களுக்காக பிரார்த்திப்பதுமே அவளது கடமைகளாகிவிட்டன.

இப்போது அம்மா மாறித்தான் போனாள். அதிகமாகப் பயப்படுவதைத் தவிர்த்தாள். இயன்றவரை மனதைத் திடப்படுத்திக்கொண்டாள். அப்பாவின் படத்திற்கு முன்னால் நின்று அழுவதை நிறுத்திக்கொண்டாள்.

”அம்மா...”

மகளின் குரல்கேட்டு அம்மா ஏறிட்டுப் பார்த்தாள்.

”என்னை, அண்ணையிட்டைக் கூட்டிக்கொண்டு போங்கோ” -அவளது பிடிவாதம் வழமையைவிட இன்று கூடுதலாக இருந்தது.

”என்னெண்டு போறது. அவங்கள் அறிஞ்சாங்கள் எண்டால் என்ன நடக்குமோ தெரியாது. இஞ்சை இருக்கவேவிட மாட்டாங்கள் மகள்”.

”இல்லை நாங்கள் எப்பிடியாவது போகணும். போகாட்டி நான் சாப்பிடமாட்டன்” -அந்தப் பிஞ்சு முகத்தில் பிடிவாதம் நிறைந்திருந்தது. அவள் எப்பவுமே அப்படித்தான். அண்ணனினதும் அப்பாவினதும் மிகுந்த பாசம் அவளை பிடிவாதக்காரியாக மாற்றிவிட்டிருந்தது.

அம்மாவுக்குக் கவலையாக இருந்தது. அண்ணாவின் முகத்தை வருடக்கணக்காக காணாத ஏக்கம் முகத்தில் தெரிந்தது. 'போகத்தான் வேணும். என்ன பாடுபட்டாவது... இந்த நரக வாழ்க்கையை எத்தனை நாளைக்கு தாங்கிக்கொள்வது'? -அம்மா தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். வாய்விட்டுச் சொல்ல முடியாத துயரங்களாக தன்னுள்ளே தேக்கிக்கொண்டாள்.

”வெளிக்கிட்டுப் போகுமட்டும் அவங்கள் வரக்கூடாது” -அம்மா கடவுளிடம் வேண்டினாள். அவளது சின்னமகளுக்கு ஒரே புளுகமாக இருந்தது. அவள் தமையனுக்கு என்று ஒவ்வொன்றையும் எடுத்து வைத்தாள். என்றுமில்லாத ஆர்ப்பாட்டமான சந்தோசத்தோடு அவள் இருந்தாள். அம்மாவின் மனம் மட்டும் நிலைகொள்ளாமற் தவித்தது. நாய்களின் சிறுகுரைப்புக்கும் அஞ்சினாள். வேலிகளில் சிறு சரசரப்புக் கேட்ட போதெல்லாம் வெளியில் வந்து எட்டிப்பார்த்தாள். கடைசியில் வருவது வரட்டும் என்ற துணிவோடு புறப்பட ஆயத்தமான போதுதான் அது நிகழ்ந்தது.

மோப்பம் பிடித்துவரும் நாய்களாக அவர்கள் வந்தார்கள். அம்மாவின் சின்னமகள் கதறக் கதற அம்மாவை இழுத்துவந்து அடித்தார்கள். அம்மாவின் நலிந்த உடல் மயங்கிச் சரிந்தபோது, சின்னமகளை அதட்டி வெருட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்றிரவு அம்மாவைப் பார்ப்பதற்காக அந்த மண்ணின் குழந்தைகள் வந்தார்கள். அம்மா வழமைபோல அவர்களை உபசரித்தாள். தன் சின்ன மகளை ஆதங்கத்தோடு தடவிக்கொடுத்தாள். அந்த மண்ணின் குழந்தைகளோடு அவளை அனுப்பிவைத்தாள். அவளது கண்கள் என்றுமில்லாத ஒளியோடு பிரகாசித்தன -அவர்கள் சென்ற வழியையே அவை பார்த்துக்கொண்டிருந்தன. ■



# ஒரு சிங்களப் பத்திரிகையின் பார்வையில் கொழும்பில் தமிழர் கைதுகள்

சென்ற பத்து வருடகாலத்தில் இலங்கையில் தமிழ் இனத்தினர் அனுபவிக்கின்ற இன்னல்கள் எத்தனை? இந்நாட்டு அரசாங்கத்தை உலுக்கிய சில பிரச்சினைகளுக்காக அப்பாவித் தமிழ் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். இவ்வாறு இவர்கள் அனுபவித்து வரும் இன்னல்களின் உச்சக் கட்ட ஆண்டாக 1993 அமைந்தது எனக்கொள்ளலாம்.

இந்த ஆண்டில் இந்த அரசாங்கம் அப்பாவித்தமிழ் மக்கள் வாழும் இடங்கள் மீது குண்டு வீசி இனவாதப் பிரசாரம் செய்து அரசியல் லாபம் பெற்றுக்கொண்டனர். தமிழ் இளைஞர்கள் பலரைக் கடத்தியும், பலரைக் கைது செய்தும் உள்ளதுடன் பலர் காணாமல் போயுள்ளதாகவும் மனிதநேய ஸ்தாபனங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இதனை இவ் அரசாங்கம் இனவாத நோக்கோடு செய்து முடித்துள்ளது. **தமிழ் இளைஞர்கள் நாடு முழுவதும் விசேடமாக கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் தங்கியிருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட பலர் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.**

இவ்வாறு வயது, பால்வேறுபாடுகள் இன்றி பல தமிழர்கள் கைது செய்யப்படும் நிலைக்கு உள்ளாகினர். 'தமிழன்' என்ற முத்திரை குத்தப்பட்டு இன்னல்களை அனுபவித்தார்கள். இதனால் தமிழர்கள் பொதுவாக உளரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் எங்கு? எப்போது கைதுசெய்யப்படுவோம்? என்ன நிகழும்? என தெரியாத இக்கட்டான ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது. எங்கும் அவர்களுக்குப்பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாதநிலை.

தமிழர்களின் கைதானது மிகவும் வேடிக்கையான முறையில் நடைபெறுகிறது. இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் மீது, பின்னர் ஒரு தெளிவற்ற குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது. இதன் மூலம் சிலரை அடையாளம் காணமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான கைதுகளையிட்டு சிங்கள இனவாதக் கட்சிகள் கவலைப்படுவதாக இல்லை. இக் கைதுகள் மூலம் சிங்கள மக்களின் பௌத்த சிங்கள தலைமைத்துவத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 'பயங்கரவாதிகள்' என்ற போர்வையில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

**1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் ஈழப்போரினால் 1990 -91 நிதியாண்டில் 1000 கோடி ரூபா வாகவிருந்த பாதுகாப்புச்செலவினம் 1991-92இல் 1500 கோடி ரூபா வாகவும் 1992-93 இல் 1800 கோடி ரூபா வாகவும் உயர்ந்தது.**

இதே வேளை இவ் யுத்தத்தினால் 5000க்கு மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 850-0க்கு மேற்பட்டோர் அங்கவீனமடைந்து யுத்தத்திற்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளனர். உளரீதியாக பாதிப்படைந்த 8000க்கும் மேற்பட்ட படையினர் தப்பி ஓடியுள்ளனர். இன்னும் பலர் யுத்தத்திற்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் 20000 க்கு மேற்பட்ட படையினர் -அதாவது சிறீலங்காப் படையினரில் ஐந்திலொரு பங்கினர் யுத்தக்களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என நாம் கருத முடியும்.

**இவ்வாறான இழப்புக்களிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவும் அதனை மறைக்கவும், பல முறை பாரிய யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டும் அவை ஒவ்வொன்றும் தோல்வியடைய அப்பாவித்தமிழ் பொது மக்கள் மீது சிறீலங்கா அரசு பழி தீர்த்துக்கொண்டது.**

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளாலி கடல் நீரேரியில் படகுப்போக்குவரத்தில் ஈடுபட்ட தமிழர்களை வெட்டியும், குத்தியும், சுட்டும் இராணுவ -கடற்படை அணியினர் கொன்றனர். மைலந்தனைப் படுகொலைகளை அடுத்து உச்சக்கட்டமாக இப்படுகொலைகள் சர்வதேசரீதியில் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியது. உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்றவை இவற்றைக் காரணம் காட்டி உதவிகளைக் குறைக்க முயன்றன. இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமானால் குறிப்பிட்ட சில மாதங்களில் அரசாங்கத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் என அச்சுறுத்தின.

இந்நிலையிலும், தென்னிலங்கை அரசியலை மையமாகக் கொண்ட -பிரதேசசபை, மாகாணசபை தேர்தல்களில் ஈடுபட வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இக்காலத்தில் தமிழருக்கு எதிரான செயல்களை அரசாங்கம் சிறிதளவு தணித்துக்கொண்டது. உள்ளூராட்சித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்பவற்றை அடுத்து ஐ.தே.க. தென்னிலங்**கையில் சிங்களவர் மத்தியிலிருந்து பிரச்சினைகளை எதிர்நோக்கியது.**

முதன்மையாக பிரேமதாசா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பான பிரச்சினை, எதிர் பாராத விதத்தில் பெரும்புயலை ஏற்படுத்தியது. மேலும் 60,000 இளைஞர்கள் காணாமல் போனமை, கைது செய்யப்பட்டவர்களில் 22,250 பேர் விடுதலை செய்யப்படாமை போன்றவை சிங்கள மக்களை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் மீது கோபம் கொள்ள வைத்தது.

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க. நடந்து கொண்ட விதமும், குறிப்பாக ஜ.ஐ.தே.மு. தலைவர் அத்துலத்முதலி கொல்லப்பட்டமை என்பன இதனைச் செய்தது பிரேமதாசாதான் என்ற சந்தேகத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதனை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதை சிங்கள மக்களுக்கு புரியவைக்க பிரேமதாசா அரசாங்கம் படாதபாடு படவேண்டியிருந்தது. அத்துலத்முதலி கொலையை புலிகளே செய்தனர் என நிரூபிக்கவும், சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட அவநம்பிக்கையைப் போக்கவும் பெருமளவில் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட எட்டாம் நாள் சிறீலங்கா அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகிய மே ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டார். தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் மீண்டும் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தொடர்ந்து டி.பி. விஜேதுங்கா ஜனாதிபதிப் பதவியேற்றதும் பிரேமதாசா கொலையை அடுத்து பெருமளவு தமிழ் மக்கள் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவியது. ஆனால், மாகாணசபைத் தேர்தல் விரைவிலேயே எதிர்பார்க்கப்பட்டதால் தன்னை ஒரு அப்பாவி ஜனாதிபதியாகக் காட்டிக் கொள்வதற்காக பெருமளவு கைதுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

மே மாதம் 17ம் திகதி மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து தமிழர்களைக் கைது செய்வதற்காகவே புதிய சில அணிகள் உருவாக்கப்பட்டன. இதனையடுத்து தமிழர்கள் கைதாவதும், சித்திரவதைக்கு உள்ளாவதும் உச்சக்கட்டத்தை அடைந்தது. மே மாதம் 28ம் திகதி கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் 500 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், உலக வங்கியிடம் உதவி பெறச் சென்ற பிரதமர் ரணில் தலைமையிலான குழுவிற்கு பிரயோகிக்கப்பட்ட அழுத்தமும் ஜனாதிபதி -தொண்டமான் பேச்சு வார்த்தையும் தமிழ் இளைஞர்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. **யூன் 10 ம் திகதி கைது செய்தலின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒரு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.**

இதனையடுத்து தமிழர்களை பெருமளவில் கைது செய்ய முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து அடியாட்களைக் கொண்டும், 'பயங்கரவாதிகள்' என்ற பெயரிலும் கைதுகள் இடம்பெற்றன.

இவ்வேளையில் யூலை 25ம் திகதி மண்கிண்டி இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களும் விடுதலைப் புலிகளிடம் அம்முகாமிலிருந்து பறிகொடுத்த ஆயுதங்களும் தென்பகுதி சிங்கள மக்களிடையே ஐ.தே.க. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பை உருவாக்கியது. பம்பலப்பிட்டி ஆடிவேல் விழாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைக்கூட அரசாங்கம் புலிகளின் தலையில் சுமத்த முயன்றது.

இக்காலப்பகுதியில் முகத்துவாரப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் ரயர் போட்டு எரிக்கப்பட்டார். மேலும் அப்பகுதியில் தற்கொலைப் படை அங்கி கண்டெடுக்கப்பட்டதையடுத்து கொழும்பில் பெருமளவு தேடுதல்கள் நடாத்தப்பட்டன. போக்குவரத்து வாகனங்கள் வீதி வீதியாக நிறுத்தப்பட்டு, தமிழர்கள் இறக்கப்பட்டு பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது சிங்கள மக்கள் சோதனையிடப்படவில்லை. பின்னர் செப்டெம்பர் 28ம் திகதி தொடங்கிய 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை மூலம் கிளாலியைக் கைப்பற்ற முயன்று பல இழப்புக்களைச் சந்தித்தது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் முடிவு அரசாங்கத்திற்கு பெரும் அவமானத்தையும் மக்களிடையே எதிர்ப்பையும் கொடுத்தது. இதனைத் தணிக்க விடுதலைப் புலிகள் கொழும்பில் நடமாடுவதாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு 'பயங்கரவாதிகள்' என்ற பெயரில் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டனர்.

நவம்பர் 11 இல் விடுதலைப் புலிகள் பூநகரியில் நடாத்திய தாக்குதலில் ஒரு கெரில்லா அணி 24 மணித்தியால நேரத்தில் இரு முகாம்களைத் தாக்கியழித்து 800 க்கும் மேற்பட்ட படைகளைக் கொன்றமை, பல கோடி ரூபா ஆயுதங்களை எடுத்துச் சென்றமை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையைச் சிதறடித்தது. சிங்கள மக்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டு அரசின் மீது ஆத்திரம் கொண்டனர். இந்நிலையில் மீண்டும் தமிழர் தடுப்பு முகாம் கொண்டு செல்லப்படும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் புலிகளுக்கு எதிராக போராடியே ஆக வேண்டும் என சில அமைப்புக்கள் வற்புறுத்தி வரும் வேளையில், சில நடுநிலை அமைப்புக்கள் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெல்லுவது கடினமானது எனவும் யுத்தம் தொடர்ந்தால் அரசு பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் ஆலோசனை கூறியுள்ளன.

**நன்றி: 'இற'**
**மொழியாக்கம் : நிமல்ராஜ்**

# புலிகளின் நிர்வாகத்திலேயே மன்னாரின் பெரும்பாகம் உள்ளது

சிறீலங்கா இராணுவத்தின் தேடி அழித்தல் நடவடிக்கையின் பின், மன்னார் பிரதேசம் பாதுகாப்பான பிரதேசம் என்று கடந்த நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது. ஆனால், மன்னார்த் தீவு, வங்காலை மற்றும் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர ஏனைய பகுதிகள் புலிகளின் நிர்வாகத்தில் உள்ளன. இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளை விட மன்னாரில் பெரும் பகுதி புலிகளின் ஆட்சியில் உள்ளது -இவ்வாறு சாமிந்திரா பெர்டினன்டோ கொழும்புப் பத்திரிகை ஒன்றில் தெரிவித்துள்ளார். இதனை மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகள் தன்னிடம் தனிப்பட்ட முறையில் கூறியதாக அவர் தெரிவிக்கின்றார்.

மன்னார் அரச அதிபர் கே.க லோசனின் அலுவலகத்தில் மன்னாரில் சிவில் நிர்வாகத்தை மீளவும் அமுல்படுத்தல் தொடர்பான அமைச்சரவை உபகுழு மகாநாட்டில் செய்தி சேகரிக்க வந்த சாமிந்திரா பெர்டினன்டோ விடமே இவ்வாறு கூறப்பட்டது.

அமைச்சர்கள் சிறீசேனகுரே, பி. தயாரத்னா, பெஸ்ரஸ் பெரேரா உள்ளிட்ட பன்னிரெண்டு அமைச்சர்களும் மற்றும் வடக்கு-கிழக்கு ஆளுனர் லயனல் பெர்னாண்டோ, மத்திய மாகாண சபை அதிகாரிகளும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

1990 யூன் மாதத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் மன்னாரில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. 30,000 குடும்பங்களில் 27,575 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்துள்ளன என்று அமைச்சரவை உப குழுவின் தலைவர் பி. தயாரத்னா தெரிவித்தார்.

மன்னார் மீன்பிடித்தொழில் கூட்டுறவுச் சங்க தலைவர் அருட்திரு. ஜே. பி. தேவராஜா பேசுகையில், மன்னார் மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட பிறகு மீனவர்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றார்கள் என்றார். மன்னார் மீனவர்கள் தொழிலின்றி வீட்டில் தங்கியிருக்க, இந்திய இழுவைப் படகுகள் மன்னார்க் கடலில் தங்கு தடை எதுவுமின்றி தொழில் செய்வதாக சில அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

மன்னாரில் 4500 மீன்பிடிக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. இதில் 2500 குடும்பங்கள் பாதுகாப்புப் படையினர் பிடியிலுள்ள பகுதிகளில் வாழ்கின்றன. மிகுதிக் குடும்பங்கள் புலிகளின் நாட்டில் புகலிடம் தேடியுள்ளனர் என பெர்டினன்டோ எழுதியுள்ளார்.

1990 யூனில் தமது வதிவிடங்களை விட்டு வெளியேறிய 92,000 பேரில் சுமார் 15,000 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக மிகுதிப் பேர் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர் என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டது.

பேசாலை, வங்காலை, பள்ளிமுனை மற்றும் தலைமன்னார் பியர் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் மக்களை மீளக்குடியமர்த்த முடியாதிருப்பதாக மீளக்குடியமர்த்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வீடுகளில் பாதுகாப்புப் படை குடிகொண்டிருப்பதே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

பொலிசார் தங்கியிருக்கும் வீடுகளுக்கு வாடகை கொடுப்பது பற்றி மன்னார் பொலிஸ் திணைக்களம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று அந்த மகாநாட்டில் கோரப்பட்டது.

முக்கிய பணியில் படையினர்

**தொடர்ச்சி 14ம் பக்கம் ....**




# இந்திய - இஸ்ரேல் நட்புறவு

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சமொன் பெரஸ் தை மாதம் மத்தியில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயமானது இந்திய -இஸ்ரேல் உறவின் ஒரு மைல் கல்லாகும். சமொன் பெரஸ் தற்பொழுது வெளிவிவகார அமைச்சராக இருப்பினும் இஸ்ரேலிய அரசியலில் சக்தி வாய்ந்த ஒரு மனிதர். தொழிற் கட்சியின் தலைவரான இவர் முன்னாள் பிரதமரும் கூட. இப்படிப்பட்ட இவரின் விஜயத்தை, ஒரு பிரதமரின் விஜயம் என்றே கூறலாம்.

கெடுபிடிப்போர் முடிந்து உலகம் புதுஉறவுகளைத் தேடியபோது இந்தியாவும் தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டது. இந்தியா தனது பழைய நண்பர்களிடம் இருந்து விடுபட்டு புதிய நண்பர்களைத் தேடிக்கொண்டது. இந்த வரிசையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் தனது நாற்பது வருடக் கொள்கையை மாற்றி இஸ்ரேலை இராஜதந்திர ரீதியில் அங்கீகரித்து உறவை ஏற்படுத்திக் கொண்டது.

ஆனால் இஸ்ரேல் - இந்திய உறவானது தனியாக இரு ஆசிய நாடுகளின் உறவு என்பதை விட புதிய அரசியல் ஒழுங்கில் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு அமெரிக்கா போட்ட ஒரு முடிச்சு -இணைப்பு -என்று கூறுவதே பொருத்தப்பாடானதாகும்.

இந்திய - இஸ்ரேலிய உறவானது இரு நாட்டு அரசாங்கங்களினாலும் வெகுசன தொடர்பு சாதனங்களினாலும் வெகுவாக வரவேற்கப்பட்டதொன்றாகும். இஸ்ரேலுடனான; இந்தியாவின் இராஜீக உறவு பற்றி எழுதிய இந்தியா ருடே, 'வெகுநாளாக காலம் கடத்தி தற்போது வரலாற்றுச் சிறப்பான முறையில்' அமைந்ததென்றும் , 'இது ஓர் இன்பகரமான அதிர்ச்சி' எனவும் வர்ணித்திருந்தது. இவ்வுறவு முறை பற்றி எழுதிய இஸ்ரேலிய பத்திரிகையான 'ஜெருசலேம் போஸ்ட்', "உலகத்தோடு சேர்ந்து கொள்கிறது இந்தியா" என ஆசிரியர் தலையங்கம் தீட்டியது.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் பெரசின் இந்திய விஜயமானது மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இவ்விஜயத்தின்போது பொருளாதார ஒத்துழைப்பு, பரஸ்பர முதலீடு, வெளிநாட்டு உறவில் கலந்தாலோசனை ஆகியவற்றுக்கான தஸ்தாவேத்துக்களிலும் சிவில் விமானப் போக்குவரத்து, உல்லாசப்பயணம், தொழில் நுட்ப ஒத்துழைப்பு கலாச்சார பரிமாற்றம் ஆகிய ஒப்பந்தங்களில் பெரஸ் கைச்சாத்திட்டார்.

\- 2 -

பெரசின் இவ்விஜயத்தின்போது பாதுகாப்பு உடன்பாடுகளோ அன்றி இராணுவத் தளபாட விற்பனை உடன்பாடுகளோ ஏற்படவில்லை. இதேவேளை பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய உடன்பாடுகள் ஏற்படுத்துவதற்கு இந்தியாவும் இஸ்ரேலும் பரஸ்பம் நம்பிக்கை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் வெளிப்படையான இராணுவ ஒத்துழைப்பு போர் தளபாட விற்பனை என்பது இங்கு முக்கியமானதல்ல. இந்திய - இஸ்ரேலிய உறவு மோசமாக இருந்த எண்பதுகளிலேயே இந்தியா இஸ்ரேலை அணுஆயுத தொழில் நுட்பத்துக்கு நாடியதும், இஸ்ரேல் அதனை வழங்கத் தயாராக இருந்தது என்பதும் ராஜீவ் காந்தியின் பாதுகாப்பிற்கு இஸ்ரேலின் உளவுத்துறை ஆலோசனை பெறப்பட்டதாகவும் தகவல்கள் முன்னரே வெளியாகியிருந்தன. ஆகையினால் இங்கு முக்கியமானது இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராகவும் இந்தியாவுடன் ஒத்துழைக்க இஸ்ரேல் தயாராக இருப்பது என்பதேயாகும்.

இதனை இந்திய - இஸ்ரேல் இராஜதந்திர உறவுகள் கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட போதே இஸ்ரேல் வெளிக்காட்டியிருந்தது. இஸ்ரேல் அமைச்சர்களில் வலது சாரிக்கூட்டின் முக்கிய உறுப்பினரான பெஞ்சமின் நேதான் யாகூ, "இந்தப் பிரச்சினையை (இஸ்லாமிய அடிப்படை வாதத்துடன் கூடிய 'பயங்கரவாதம்') முதலில் உணர்ந்தவர்கள் நாங்கள். கட்டுப்பாடற்ற மத அடிப்படை வாதம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது. துரதிஸ்டமாக இதைப்பற்றி நாங்கள் நன்கறிவோம். பயங்கரவாதத்தை களத்தில், அரசியல், சட்ட ரீதியில் சர்வதேச அளவில் சந்திப்பது எப்படி என்ற விடயத்தில் நாம் தேர்ச்சி கண்டிருக்கின்றோம். அதை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவோம்" எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் பாதுகாப்பு உடன்பாடுகள் வெளிப்படையாக எழுதாவிடினும், பல எழுதப்படாத உடன்பாடுகள் இஸ்ரேல் -இந்திய உறவில் முக்கியமான பகுதிகளாகும். இது அரசுகளினதும், உளவு ஏஜண்டுகளினதும் இரகசிய உறவாகும். இவ்வுறவுகளை இஸ்ரேலின் வார்த்தையிலும், இந்தியாவின் பரிபாசையிலும் கூறுவதானால், "ஜனநாயக அரசுகளைப் பாதுகாப்பதற்கான இஸ்லாமிய மத அடிப்படைவாதம் உருவாக்கும் பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டமாகும்".

\- 3 -

இஸ்ரேலின் பார்வையில், உலகில் ஐரோப்பாவில் இருந்து ஜப்பான்வரை பரவிக்கிடக்கும் கொடுங்கோன்மைச் சமுத்திரத்தில் இரண்டே இரண்டு ஜனநாயக நாடுகள் தனித்து நிற்கின்றன. ஒரு புறம் சிறிய இஸ்ரேல். மறுபுறம் பெரும் சனத்தொகை கொண்ட பெரிய இந்தியா. இவ்விரு நாடுகளுக்கும் பிரதானமான அச்சுறுத்தல் இஸ்லாமிய அடிப்படை வாதமும், அவற்றால் உருவாக்கப்படும் 'பயங்கரவாதமும்' ஆகும்.

இந்தியாவின் பார்வையிலும், அரபு நாடுகளினால் கடந்த காலத்தில் பெரும் நன்மை ஏதும் ஏற்பட்டு விடவில்லை என்பதே ஆகும். மாறாக தொல்லைகளே மிஞ்சின. இந்தியா ருடேயின் கூற்றுப்படி "உலகில் தலையெடுத்த இடியமீன்களையும், சதாம் உசேன்களையும் கடாபிகளையும் சொந்தம் கொண்டாடிய இந்தியா இஸ்ரேலை மட்டும் தீண்டத்தகாத தேசமாக 40 வருடங்கள் ஒதுக்கி வைத்திருந்தது. நன்மை ஏதாவது விளைந்ததென்றால், அது பேருக்குத்தான். அரபு நாடுகள் பாகிஸ்தான் பக்கமே சார்ந்தன. பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிக்க கடாபி நிதியுதவிகூட ஏற்பாடு செய்தார். இந்தியாவுக்கு வர்த்தக ரீதியில் விசேட சாதகம் எதுவும் செய்து கொடுக்காத அரபு நாடுகள் மறைமுகமாக பிரிவினை வாதத்தை ஆதரித்து வந்தன என்பதாகும். இந்நிலையில் இஸ்ரேலுடன் உறவை வளர்த்துக் கொள்ளுதல் இந்தியாவுக்கு இலாபகரமானதொன்றாகவே பட்டது.

\- 4 -

இவற்றோடு இந்திய - இஸ்ரேல் உறவானது அணுஆயுதம் தொடர்பாகவும் எழுதப்படாத ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் இணங்கிப் போகும் வழியும் ஏற்பட வாய்ப்புண்டு. இன்றைய நிலையில் இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் பல உள்ளதாக உலகம் கருதுகின்றது. இந்தியாவிடம் அணுவாயுதம் உண்டா? இல்லையா? என்பது குறித்து சந்தேகங்கள் இருப்பினும், இந்தியா அணுவாயுதத்தை குறுகிய நேரத்தில் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதாக உலகம் கருதுகிறது.

மேலும் இஸ்ரேல், 'இஸ்லாமிய அணுகுண்டு' குறித்து எப்போதுமே தீவிர அக்கறை கொண்டுள்ளது. அது ஒருமுறை ஈராக் அணுகுண்டை தயாரித்துவிடும் என்ற அச்சத்தில் ஈராக்கிய அணு உலைகளையே குண்டுவீசி அழித்தது. அதே போன்று தற்பொழுது பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இஸ்ரேலின் கவனம் பாகிஸ்தானின் பக்கம் திரும்பியுள்ளது.

## இரு பூதங்களின் கூட்டு

இந்நிலையில் இந்திய - இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கும் பாகிஸ்தானின் அணுகுண்டுகள் மீது குறி உள்ளது. இதற்கு இந்திய -இஸ்ரேலிய புலனாய்வுத் துறைகள் ஒன்றிணைந்து தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். இதன் மூலம் தம்மீது அணுஆயுத அச்சுறுத்தலை இல்லாது ஒழித்துவிட இவ்விரு நாடுகளும் முற்படக்கூடும்.

ஆனால் இவ்விரு நாடுகளும் ஆணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தயாராக இல்லை. இவ்விரு நாடுகளுமே இஸ்லாமிய அணுக்குண்டால், தமக்கு ஏற்படப்போகும் அச்சுறுத்தலைச் சுட்டிக்காட்டுபவையாகும். இதன் காரணமாக அணுவாயுதப் பரவல் ஒப்பந்தத்தில் தாம் கைச்சாத்திடப் போவதில்லை எனவும் வாதித்தும் வருகின்றன. இந்நிலையில் அணுஆயுதம் தொடர்பாக இந்தியாவும் இஸ்ரேலும் ஒரு பொதுஉடன்பாட்டின் அடிப்படையில் தொழிற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகும்.

ஆனால், இவை எழுதப்படாத ஒப்பந்தங்களாக திரைமறைவு உடன்பாடுகளாக இருப்பினும் இவை வெளிப்படையான ஒப்பந்தங்களை விட விரைவாகவே செயற்படுகின்றன. இதனை பம்பாயில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு தொடர்பான புலனாய்வுக்கு இஸ்ரேலிய மொசாட் விரைந்து உதவிக்கு அழைக்கப்பட்டதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

\- 5 -

அதாவது இந்திய - இஸ்ரேலிய உறவில் முக்கியமானது பகுதி வெளிப்படையான ஒப்பந்தங்கள் என்பதைவிட, இஸ்ரேலிய புலனாய்வுத்துறையான மொசாட்டிற்கும் இந்தியாவின் றோ போன்ற புலனாய்வுத் துறைகளுக்கும் இடையிலான உறவு ஆகும். பயங்கரவாதத்திற்கும் இஸ்லாமிய வாதத்திற்கும் எதிரான ஒருங்கிணைந்த செயற்பாடு என்ற ரீதியில் வெளிக்காட்டப்படும் இவ்வுறவானது அடிப்படையில் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் ஆசியுடன் கூடிய ஓர் உடன்பாடு என்றே கூறலாம்.

இஸ்ரேலும், இந்தியாவும் தம்மைத் தாமே ஜனநாயக நாடுகள் என்று கூறிக்கொண்டாலும், இவை இரண்டும் இன்று தேசிய இனங்களின் எழுச்சிக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள நாடுகளாகும். இஸ்ரேல் ஒரு சிறிய நாடு. இருப்பினும் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ளது. பலஸ்தீனத்துக்கு எதிரான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துள்ளது. இந்தியாவோ பரந்த பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட நாடு. இதனால் பல தேசிய இனங்களின் தேசிய எழுச்சிக்கு எதிராக அடக்குமுறையைக் கையாள்கின்றது. இதில் காஸ்மீரில் இடம்பெறும் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை, இஸ்லாமிய அடிப்படை வாதம் உருவாக்கிய பயங்கரவாதம் என்கிறது.

இந்த வகையில் இந்த நாடுகளுமே இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற ரீதியில் தேசிய இனப் போராட்டங்களை நசுக்குகின்றன.

ஒருவகையில் இஸ்ரேல் - இந்திய உறவானது சர்வதேச ரீதியாக இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிராக அமெரிக்கா உருவாக்கி வரும் அரண் என்றே கொள்ளலாம். ஏனெனில் கெடுபிடிப்போரின் பின் உலகில் தனது மேலாதிக்கத்திற்கு இஸ்லாமிய அடிப்படை வாதமே அச்சுறுத்தலாக அமையலாம் என அமெரிக்கா கருதுகின்றது. இந்நிலையில் இஸ்லாமிய உலகம் அணுகுண்டையும் பெற்றுவிட்ட நிலையில், இதற்கு எதிராக உரு பலமான அணியை அமைப்பதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்துகின்றது.

கெடுபிடி யுத்தகாலம்வரை, இஸ்லாமிய உலகம் வல்லரசுகளின் பக்கம் இரண்டாகப் பிளவுற்றிருந்தமையால், அவற்றைக் கையாள இஸ்ரேல் மட்டுமே போதும் எனக்கருதிய அமெரிக்கா கெடுபிடி யுத்த முடிவில் - இஸ்லாமிய நாடுகளுக்கு இடையில் வல்லரசு சார்பு அணிகள் அற்ற நிலையில் இஸ்ரேல் மட்டும் போதுமானதாகக் கருதவில்லை. இந்நிலையிலேயே இஸ்ரேல் -இந்திய உறவானது அமெரிக்காவைப் பொறுத்து பெரிதும் விரும்பப்பட்டதொன்றாகவுள்ளது.

இதேவேளை இஸ்லாமிய அடிப்படைவாத வன்முறைக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் உருவாகும் இந்திய -இஸ்ரேல் உறவானது தேசிய இனங்களின் எழுச்சியை நசுக்க முற்படும் இருபெரும் பூதங்களின் கூட்டாகும். அவர்கள் கூறுவதுபோல் ஜனநாயகத்தைப் பாதுகப்பதோ அன்றி 'பயங்கரவாதத்திற்கு' எதிரான போராட்டமோ அல்ல; தேசிய இனங்களின் போராட்டத்தை நசுக்குவதும், இஸ்லாமிய நாடுகளில் மேற்கொள்ளும் அழிவுவேலைகளின் மூலம், இஸ்லாமிய உலகம் அணிசேருவதையோ, அன்றி பலம் பெறுவதையோ தடுத்து நிறுத்துவதும் திட்டமாகும். இதேவேளை, இவ்விரு பூதங்களின் சேர்க்கை இஸ்லாமிய உலகிற்கு வெளியில், குறிப்பாக இலங்கையிலும் அவற்றின் தாக்கங்களை வெளிப்படலாம். ■

நன்றி : ஈழநாதம்

---

### இலங்கைக்கு மீண்டு.....

ஒப்பந்தம் மூலம் இந்திய இராணுவத்தை அழைத்த சிறீலங்கா அரசாங்கமே, இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக்கூறிக் கண்டனம் செய்ததோடு வெளியேறுமாறும் பகிரங்கக் கோரிக்கை விடுத்தது. இது இந்தியாவிற்கு சர்வதேச ரீதியில் பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இவ்விவகாரப்படி சிறீலங்காவின் இராஜதந்திரப் பொறிக்குள் இந்தியா வீழ்ந்தது என்றே கொள்ள முடியும்.

இந்நிலையில், இராணுவத்தை அனுப்புதல் என்பது இந்தியாவைப் பொறுத்து மீண்டும் ஒரு தற்கொலைக்கு ஒப்பான முயற்சி என்றே இந்தியத் தரப்பு கருதியிருக்கக் கூடும். இதன் காரணமாகவே இந்தியா சிறீலங்காவின் இம்முயற்சி தொடர்பாக தனது ஆதரவைத் தெரிவிப்பதில் தயக்கம் காட்டியுள்ளது.

இதைத் தொடர்ந்தே சிறீலங்கா அரசாங்கம் தனது முயற்சியை தற்பொழுது கைவிட்டுள்ளது அல்லது பிற்போட்டுள்ளது எனலாம். அவ்வாறு இல்லாமல் முயற்சி மேற்கொள்ளவில்லை என்பது, அரசின் முயற்சி தோல்வியடைந்து விட்டது என்பதை மறைக்க முற்படுவது மட்டுமல்ல, தேர்தலில் எதிர்க்கட்சியினர் இவ்விவகாரத்தையே எதிராகப் பயன்படுத்திவிடக் கூடும் என்ற அச்சத்தினாலேயே ஆகும். ■

# பூநகரியில் புதுவீரம் படைத்த புயல்

இந்தப் போராட்டத்தில் இணையும்போதே இந்த மண்ணில் வாழும் எம் இனத்தின் உண்மையான வாழ்வுக்காக தமது உயிர்களை தியாகம் செய்வதை பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்பவர்கள் தான் விடுதலைப் போராளிகள். போராளிகளாகிய எமக்கு ஒன்றுமட்டும் தெரியும், இந்த மண்ணில் மக்களுக்காக மரணிக்கப் போகின்றவர்கள் என்று. ஒரு சண்டைக்கு களம் நோக்கி நாம் செல்லும்போது இதில் வருபவர்கள் யாரோ வீரச்சாவைத் தழுவப் போகின்றோம், ஆனால் யார் என்பதுதான் தெரியாது. ஒவ்வொரு போராளியும் மனத்துள் நினைப்பான் அது நானாகத்தான் இருக்க வேண்டும் என்று.

எமது விடுதலைப் போராட்டம் எமது போராளிகளின் உயிர்த் தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. எம்மோடு ஒன்றாக இணைந்து வாழ்ந்த எம் சக தோழர்களை சண்டை முடிந்து வரும் போது, அவர்களது உயிர் அற்ற உடலை தோளிலும் அவர்களது இலட்சியக் கனவை மனதிலும் சுமந்து கொண்டு வருவோம். இது எம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் வழமையான நிகழ்வுகள்தான். ஒரு சில போராளிகளின் வீரச்சாவு மிகவும் மனதைக் கசக்கிப் பிழிவதுண்டு. அந்த வகையில் என் மனதை வாட்டிய இலட்சியத்தில் மேலும் உறுதியேற்றிய வீரச்சாவுகளில் கப்டன் தினேசின் வீரச்சாவுச் செய்தியும் ஒன்றாகும். அந்தளவிற்கு இவனில் வீரமும், தியாக உணர்வும் விடுதலைப் பற்றும் ஆழமாக வேருன்றிக் காணப்பட்டன.

தனது பயிற்சியை முடித்து வலிகாமக் கோட்டத்திலே பலாலி இராணுவ முகாமில் இருந்து வெளியேறும் இராணுவத்தினருடனான சண்டைகளில் பங்குகொண்டவன். எம் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடாத்த காவல் அரண்களில் கண்விழித்துக் காவல் காத்தவன். காவல் அரண்களில் நிற்கும்போதுகூட வேறு இடங்களிலும் இராணுவம் வெளியேறும்போது தனது குழுவுடன் சென்று அங்கு வெளியேற முனையும் இராணுவத்தினரோடு சமராடியவன். இவனது சண்டைக் களங்கள் பல. ஆனையிறவு வரலாற்று யுத்தம் (ஆ.-க. வெ), பலவேகய -02 என இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை, மணலாற்றில் நடந்த பல தாக்குதல் நிகழ்வுகளிலும் பங்கு கொண்டவன். இச்சண்டைகளில் எல்லாம் இவனிடம் இருந்த வீரமும், யுத்த தந்திரங்களும் இவனை ஒரு நம்பிக்கைக்குரிய போராளியாக மாற்றியது. இதனால் இவனிடம் பல போராளிகளை வழிநடத்தி சண்டைகளை வழிநடத்தும் ஆற்றலும் இருந்தது. இதனால் இவன் பெரிய ஒரு குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான்.

பூநகரி இராணுவ கடற்படை கூட்டுத்தளம் மீது தாக்குதல் நடத்த எம் தலைவர் தீர்மானித்தார். அதற்கான ஆயத்த வேலைகளுக்கான பணிப்புரைகள் எமக்கு வழங்கப்பட்டன. நாம் போராளிகளை ஒன்று திரட்டி சண்டைக்கான பயிற்சிகளில் ஈடுபட்டோம். இவன் ஒரு மினி முகாமைக் கைப்பற்றும் குழுவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டான். ஒரு நாள் இவன் கடலில் நீந்தும் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது திருக்கைமீன் முள்ளு ஒன்று இவனின் காலில் குத்திவிட்டது. இதனால் இவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தான். வைத்தியசாலையில் இருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் இவனைப் பார்வையிட நிற்கும் போராளிகளிடம், "என்னை பயிற்சி எடுக்கும் இடத்திற்கு கொண்டு போய்விடுங்கோ. என்ர பெடியள் என்ன பாடோ தெரியாது. (தனது குழு) எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை" என்று அடம்பிடிப்பான். இவனது தொல்லை தாங்கமாட்டாமல் வைத்தியரிடம் கேட்டால், வைத்தியர் "இவர் இன்னும் ஒருகிழமை வரையில் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். விசம் இன்னும் இருக்கு. சில பேர் இறந்துகூட இருக்கினம். விடவேண்டாம்" என்று கூறுவார்கள். இப்படியே இரண்டொரு நாட்கள் கழிந்தன.

ஒருநாள் காலையில் ஒரு பொதுமகனின் சைக்கிளில் வைத்தியசாலையில் எவருக்கும் சொல்லாமல் வந்துவிட்டான். பின் இவனை திருப்பி அனுப்பி வைத்தியசாலையில் பதிந்துவிட்டு வரும்படி அனுப்பி பதிந்துவிட்டு வந்து தனது இயலாத காலுடனும் தனது குழுவுடன் சேர்ந்து சண்டைக்கான பயிற்சியை எடுத்தான். எப்போது பார்த்தாலும் பயிற்சி இல்லாத நேரங்களில் தனது போராளிகளை ஒன்றாக வைத்து தனது



கப்டன் ஈழமாறன் (தினேஸ்)
(சுப்பிரமணியம் இந்திரகுமார்)
வரணி றோட், கொடிகாமம்
(மாதகல்)

முகாம் பற்றியும் பல சண்டை அனுபவங்கள் பற்றியும் பயிற்சியின் முக்கியம் பற்றியும் கதைத்துக் கொண்டிருப்பான். எம்மைக் கண்டால் கதை நின்றுவிடும். அதனால் இவனது குட்டிக் கதாப்பிரசங்கத்தை நாம் ஒளிந்து இருந்து கேட்போம். அந்த நேரங்களில் எல்லாம் இவனது கடமையில் -தனது இலக்கில் -கொள்கையில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றான் என்பதை உணர்ந்துகொண்டேன்.

இவ்வாறான ஒரு காலகட்டத்தில் தான் 'யாழ்தேவி' என்ற பெயரில் ஒரு படையெடுப்பு நடக்கிறது. இந்தச் சண்டையிலும் தனது குழுவை வழி நடாத்தி இலங்கை இராணுவத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் பெரிய ஒரு தோல்வியை -இழப்பை ஏற்படுத்திய வரலாற்றுச் சமரில் தனது கடமையைத் திறம்படச் செய்தவன். இந்த வெற்றியில் இவனுக்குப் பெரியதொரு பங்குண்டு. தனது குழுவில் பலரை இழந்துவிட்ட நிலையிலும் ஓர் இரு போராளிகளோடு நின்று இறுதிவரை களத்தில் சமராடினான். தனது ஆயுதத்தின் ரவைகள் தீர்ந்ததும் வீரச்சாவடைந்த போராளியின் ஏ.கே.-இலகு இயந்திரத் துப்பாக்கியுடன் நின்று எதிரி மீது தாக்குதல் தொடுத்து பல எதிரிகளை எம் மண்ணில் சாய்த்தான்.

இந்தச் சண்டையில் இவனது திறமையையும் வீரத்தையும் கண் முன்னே காட்டியபோது இவன் நிச்சயமாக இவனுக்குக் கொடுக்கப்பட்ட மினி முகாமை (பூநகரியில் உள்ள முகாம்) கைப்பற்றுவான் என்ற அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை என் மனதில் இருந்தது. நம்பிக்கையின் நட்சத்திரமாக இவன் விளங்கினான். பூநகரிச் சண்டைக்கான நகர்வுகளுக்கான ஆயத்த வேலைகளைச் செய்யும்போது ஒவ்வொரு போராளிகளினதும் சகல உடமைகளையும் தானே பார்வையிட்டு ஒழுங்குபடுத்திச் சரிசெய்து கொண்டு இருந்தான். சூரியன் தன்னை மறைத்துக் கொள்கிறது. இயற்கையும் எமக்கு பூமழை தூவி வழியனுப்புகின்றது. அந்த மழையில் நனைந்தபடி இரவோடு இரவாக இராணுவப் பிரதேசத்துக்குள்ளால் பல மணி நேர நடையின் பிற்பாடு எமக்குரிய முகாமில் இருந்து 1 கி.மீற்றர் தூரத்தில் நிற்கின்றோம். வேறு ஓர் இடத்தில் சண்டை தொடங்கிவிட்டது. உடனடியாக எமது இலக்குகளை நோக்கி வேகமாக நகரத் தொடங்குகின்றோம். குழுக்கள் பிரிந்து செல்லும் இடத்தில் வைத்து அந்த அந்த இலக்குகளுக்கு குழுக்கள் பிரிந்து நகருகின்றன. இவைகள் அனைத்தும் ஒரு குறுகிய நிமிட நேரத்திற்குள் நடைபெறுகின்றன.

முன்னே சென்று கொண்டிருந்த தினேஸ் திரும்பி வந்து எனது கையைப் பிடித்து சத்தியம் செய்கிறான். அவனது சத்திய வாக்குக்குக் கட்டுப்பட்டு வோக்கியில் அவனைத் தொடர்பு கொண்டு நிலமையைக் கேட்டபோது அவனிடம் இருந்து டைசியாக கிடைத்த பதில், "இன்னும் ஒரு நிமிடத்துக்குள் பிடித்துவிட்டு உங்களுடன் கதைக்கிறேன்" என்ற வசனம் மட்டுமே. பெரிய வெடியோசைகள், எங்கு திரும்பினாலும் ஒரே பரா வெளிச்சக்குண்டுகள், இராணுவத்தினரின் லேசர் ரவைகள் தணல் தணலாகப் பறந்தன. ஒரு வாண வேடிக்கையே நடந்தது. பலமான துப்பாக்கிச் சண்டை ஒருவரை ஒருவர் எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வைத்து நடக்கிறது.

இவனை தொலைத் தொடர்பு சாதனம் மூலம் தொடர்பு கொள்கிறேன். தொடர்பு இல்லை. சிறிது நேரத்தில் போராளி அறிவிக்கின்றான். முகாம் எமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டமையும் தினேஸ் வீரச்சாவு என்ற செய்தியும் வருகின்றது. இவனோடு சேர்ந்து இன்னும் பல போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர். இவன் கடைசியாக வோக்கியில் சொன்ன அந்த வசனம் இன்னும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. பெரிய ஒரு வரலாற்றுச் சமரிலே இந்த மக்களுக்காக தன்னை அழித்ததன் மூலம் இன்று இதே மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இவன் எம் இனம் வாழும்வரை வாழப்போகின்றான். இவனது... வீரச்சாவு இவனது பேச்சையும் மூச்சையும் நிறுத்திக் கொண்டதே தவிர எம் மனங்களில் மக்களின் மனங்களில் இலட்சியத்தை இன்னும் வீச்சாக்கியுள்ளது. ■

■ வ. செல்வராசா
யாழ். மாவட்ட
சிறப்புத் தளபதி

## அமைதிப் பேச்சு....

கூறுகிறார்கள். அது சிறீலங்கா அரசின் பிரச்சினை. போர்நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பன பேச்சு வார்த்தைக்கு அவசியம் என்பதே எமது நிலைப்பாடு" இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

### யுத்தத்தை எதிர் கொள்ள ஆயத்தம்

இதற்கிடையில், சிறீலங்கா அரசாங்கம் உதட்டளவில் பேச்சுவார்த்தைக் கதைகளைப் பேசிக் கொண்டு செயலளவில் பாரிய இராணுவத் தாக்குதலுக்கான சகல ஆயத்தங்களிலும் ஈடுபட்டு வருகின்றது. இதனால் தமிழீழமெங்கும் விடுதலைப் புலிகளும் எத்தகைய பாரிய ஆக்கிரமிப்பு முயற்சிகளையும் முறியடிக்கக் கூடிய ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் பாரிய யுத்தமொன்று ஏற்படுமானால், மக்கள் அனைவரும் அதனை எதிர்கொள்ள தம்மாலான கடமைகளைச் செய்ய வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ■

## போருக்காக ஒரே.....

அவர்களை இனங்கண்டு அழிக்க முடியாமல் உள்ளது. அவர்களை இனங்கண்டு கொண்டால் ஒரு வாரத்துள் அழித்து விடலாம்" என தனது 'இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே' தத்துவத்திற்கு ஆதரவாகப் பேசியுள்ளார். அத்துடன் "யுத்தத்திற்காக வருடா வருடம் இருபத்தையாயிரம் மில்லியன் ரூபா செலவாகிறது. அவர்களை பில்லி சூனியம் செய்து வெல்ல முடியாது. யுத்தம் செய்துதான் வெல்ல வேண்டியுள்ளது. யுத்தத்திற்குப் பயன்படாத கத்தியால் பலாக்காயா வெட்டுவது? என்று சிங்களத்தில் ஒரு பழமொழியுண்டு. பணம் இருப்பது தேவைகளுக்குச் செலவழிக்கத்தான். ஆகவே நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. பணம் செலவழிந்தாலும் பரவாயில்லை, நாட்டை இரண்டாகப் பிரிக்க என் உயிர் உள்ளவரை ஒரு போதும் இடமளிக்கமாட்டேன். எம்மிடம் சாதி, மத பேதமில்லை. உலக நாடுகளில் இலங்கை நாட்டில் மட்டுமே சிறுபான்மையினருக்கு சம அந்தஸ்து உண்டு. புத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நாம் அதே வழியிலேயே செயலாற்றி வருகின்றோம்" என்று கூறியுள்ளார். ■

## புலிகளின் நிர்.....

ஈடுபட்டிருப்பதால் இராணுவம் அந்த வீடுகளை விட்டு இப்போதைக்கு வெளியேற முடியாது. வடக்கு -கிழக்குப் பகுதிகளில் இப்படி இராணுவத்தினர் வீடுகளைச் சுவீகரிப்பது ஒன்றும் புதிதல்ல என்று இராணுவ தரப்பில் கூறப்பட்டது.

மன்னார் தீவில் உணவுப் பற்றாக்குறை நிலவுவதாகவும், உணவு விநியோகத்தை மேற்கொள்ளுவதற்கு எரிபொருள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மன்னார் பெருநிலப்பரப்பில் உணவு நிலைமை திருப்திகரமாக உள்ளது என்று அதிகாரிகள் கூறினர்.

மன்னார் கடலில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதை தடுக்குமாறும் பல அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். இவ்வாறு சமிந்திரா பெர்டினன்டோ அக்கட்டுரையில் எழுதியுள்ளார். ■

## இரண்டாம் பதவி....

இதேவேளை, டி. பி. விஜேதுங்கா இவ் அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் அதாவது பாராளுமன்ற உறுப்பினர் மூலம் ஜனாதிபதித் தெரிவு என்பதை உருவாக்குவதன் மூலம், ஜனாதிபதித் தெரிவில் சிறுபான்மை இனங்களால் ஏற்படும் பாதிப்பை இல்லாது ஒழிக்கவும் முற்படுகின்றார்.

அதாவது, பௌத்த - சிங்கள பேரினவாதத்திற்கான தலைமை வகிக்க முற்படும் டி. பி. விஜேதுங்கா தனது பதவியை சிறுபான்மை இனங்களின் வாக்குகள் தீர்மானிப்பதையோ, அன்றி சிறுபான்மை இனங்களினால் தனது பதவிக்கு ஆபத்து வருவதையோ அவர் திட்டமிட்டே தவிர்த்துவிட விரும்புகின்றார். இந்நிலையிலேயே அரசியல் அமைப்பு மாற்றத்திற்கும் ஒற்றையாட்சி முறையைப் பேணுவதெனவும், சிங்கள இனத்தின் ஒற்றுமை பற்றியும் பேசி இனவாதம் மூலம் ஆதரவு கோர முற்பட்டுள்ளார்.

இந்த வகையில் விஜேதுங்கா தனது பதவியை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையாக மட்டுமல்ல, பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைமையை உறுதிப்படுத்தும் நோக்கிலும், அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கு முற்பட்டு நிற்கின்றார். தனது தனிப்பட்ட ஆளுமையிலும் தலைமைத்துவ ஆற்றலிலும் நம்பிக்கையீனம் கொண்டுள்ள டி. பி. விஜேதுங்கா அதற்கு ஐ. தே. கட்சியையும் அரசியல் யாப்பையும் உபயோகப்படுத்த விழைகின்றார். ■

## இரட்டைச் சூட்டடுப்பு கிளிநொச்சியில் அறிமுகம்

காட்டுவளம் அழிவதனைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இரட்டைச் சூட்டடுப்பு கிளிநொச்சிக் கோட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக கிராமிய உற்பத்திக்குழுக்கள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கலந்துரையாடல்களில் பொதுமக்களும், கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களும், பொதுநிறுவனப் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். ■

## நிகழ்வும் நினைவும்

-திலீபன்-

# ஜனாதிபதித் தேர்தல்

## யுத்த நிறுத்தத்திற்கு வழி கோலுமா?

சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதியினை பாராளுமன்றம் மூலம் தேர்ந்தெடுப்பது குறித்த ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்காவின் திட்டம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் மூலம் இதுவரை காலமும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியினை, ஜனாதிபதித் தேர்தல் இன்றி பாராளுமன்றம் மூலம் தேர்ந்தெடுப்பது எனவும் ஆனால் ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் இப்பொழுது உள்ளது போல தொடர்ந்து இருக்கும் என்பது இத் திட்டத்தின் சாராம்சமாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் தன்னால் வெல்ல முடியாது என்பதாலேயே இப் புதிய திட்டத்தினை அமுல்படுத்த டி. பி. விஜேதுங்கா விரும்புவதாகத் தெரிவித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வந்து தன்னுடன் போட்டியிடுமாறு டி. பி. விஜேதுங்காவிற்கு சவாலும் விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியலமைப்பில் மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டுமானால் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவை. 225 அங்கத்தவர்களைக் கொண்ட சிறீலங்காப் பாராளுமன்றத்தில் குறைந்தது 150 அங்கத்தவரின் ஆதரவு இருந்தாலே இத்தகைய மாற்றம் சாத்தியப்படும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 125 ஆசனங்களே உள்ளன. ஐ. தே. கட்சி அங்கத்தவர்களையும் இம் மாற்றத்திற்கு ஆதரவு அளிக்கக் கூடிய ஏனைய கட்சிகளைச் சேர்ப்பினும் 150 அங்கத்தவர்களைப் பெற முடியாது. இதனால் இம் மாற்றத்தினைக் கொண்டுவர, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கம் இழுத்து, தேவையான 150 உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றுவிடுவதில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது எனவும் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஏன் இத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்துவதில் முனைந்து நிற்கின்றார்? இதற்கு இரண்டு வகையான காரணங்களைக் கூற முடியும்.

1. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டச் சிக்கல்கள்.
2. தேர்தலில் வெற்றி பெற சிறுபான்மையினரிடம் தங்கி நிற்கும் நிலையினை மாற்றுதல்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி, தேர்தல் நாடு பூராகவும் நடைபெற வேண்டும். எந்த ஒரு மாவட்டத்தினையும் தேர்தலில் இருந்து தள்ளி வைக்க முடியாது. அவசர நிலைமைகளில் தேர்தலுக்கு என அறிவிக்கப்பட்ட திகதியில், ஏதாவது ஒரு மாவட்டத்தில் தேர்தலை நடாத்த முடியாவிட்டால், ஜனாதிபதியின் தற்போதைய பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அத்தேர்தல் நடாத்தப்பட்டுவிட வேண்டும். இவ்வாறு வேறொரு திகதியில் நடைபெறும் தேர்தலில் வாக்களிப்பு முடியுமட்டும், முன்னர் இடம்பெற்ற தேர்தல் மாவட்டங்களின் முடிவினை அறிவதற்கான வாக்குத் தொகை எண்ணிக்கை ஆரம்பிக்கப்பட முடியாது.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் சட்டம் கூறுவது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு பிரச்சினையினைக் கொடுக்கின்றது. இன்றைய நிலைமைகளில் வடக்கு, கிழக்கில் தேர்தல்களை நடாத்துவதில் சிறீலங்கா அரசு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. கிழக்கில் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை அமைத்து ஒரு போலித் தேர்தலை சிறீலங்கா அரசால் நடாத்த முடியும். ஆனால் வடக்கில் இராணுவ முகாம் பகுதிகளையும், இராணுவத்தினரால் ஆக்கிமிக்கப்பட்ட சில பகுதிகளையும்விட 85% இற்கும் அதிகமான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. இதனால் வடக்கில் விடுதலைப் புலிகளின் சம்மதமின்றி ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முடியாது. வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முடியாவிடின் ஜனாதிபதித் தெரிவு என்பது, ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின்படி சட்டரீதியற்றதாகிவிடும்.

இது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா எதிர்கொள்ளும் ஒரு புதிய பிரச்சினையாகும். முன்னைய ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் இப் பிரச்சினையினை எதிர்கொள்ளவில்லை. இதுவரை இரண்டு தடவைகள் 1982, 1988 ஆம் அண்டுகளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. 1982 ஆம் ஆண்டு முழு இலங்கைத் தீவும் சிறீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதனால் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகிக் கொண்டார். (ஜே. - ஆர். முதலாவது தடவை ஜனாதிபதியாகும் போது, ஜனாதிபதித் தேர்தல் இன்றி அரசமைப்பு மாற்றத்துடன் ஜனாதிபதியானார்.) இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் 1988 இல் நடைபெற்றபோது தமிழீழம் இந்தியப் படையின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது. சிறீலங்காவில் ஜே. வி. பியினரின் நடவடிக்கையின் மத்தியிலும் சிறீலங்கா அரசால் தேர்தலை நடாத்தக் கூடியதாக இருந்தது. இந்திய ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த தமிழீழத்திலும் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் பிரேமதாசா ஜனாதிபதியாகிக் கொண்டார்.

ஆனால், இப்பொழுது விஜேதுங்கா எதிர்கொள்ளும் பிரச்சினை இலகுவில் தீர்வு காணப்பட முடியாத பிரச்சினையாக உள்ளது. விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு முழு வடக்கு -கிழக்கினையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து தேர்தலை நடாத்துவது என்பது சாத்தியமாகாத விடயம் என்பது சிறீலங்கா அரசுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்றே. அதனால் ஜனாதிபதித் தேர்தல் இன்றி, பாராளுமன்றம் மூலம் ஜனாதிபதியினைத் தெரிவு செய்துவிட்டால், தான் எதிர்நோக்கும் இப் பிரச்சினையில் இருந்து விடுபடலாம் என விஜேதுங்கா நம்புகிறார்.

ஆனால், இது பிரச்சினையின் ஒரு பக்கத்தினை மட்டுமே காட்டுகின்றது. விஜேதுங்கா எதிர்நோக்கும் பிரச்சினைக்கு இன்னொரு பக்கமும் உண்டு. அது தேர்தலின் வெற்றி தொடர்பானது. இன்றைய அரசியல் சூழ்நிலைகளில் தமிழ், முஸ்லீம் மக்களின் ஆதரவின்றி எவராலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாதுள்ளது. இதனால் தான் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகள் சிறீலங்கா அரசியலில் ஒரு முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானின் பலமும் இத் தங்கு நிலையிலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது விருப்பத் தேர்வு வாக்களிப்பு பயன்படுத்தப்டுகின்றது. 50% இற்கும் மேற்பட்ட, வாக்களித்த வாக்காளர்கள் ஒரு வேட்பாளருக்கு ஆதரவாகத் தமது முதலாவது விருப்பத் தேர்வினை அளிக்காவிடின், பின்னர் இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தேர்வுகள் கவனத்திற் கொள்ளப்படும். இதனை இலகுவாகக் கூறுவதாயின் விழும் வாக்குகளில் 50% இற்கு மேலான வாக்குகள் ஐ. தே. க. வேட்பாளருக்கு விழாவிடின் அவருக்கு வெற்றி சாத்தியமானதல்ல. ஏனெனில் ஐ. தே. கட்சிக்கு எதிரான வாக்குகள் இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தேர்வாக ஐ. தே. க. வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை.

இதனால், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின், 50% இற்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். இவ் 50% இற்கும் அதிகமான வாக்குகளப் பெறல் என்பது ஐ. தே. கட்சிக்கு வழமையாக விழும் தமிழ், முஸ்லீம் வாக்குகள் நிச்சயமாக விழுந்தால்தான் சாத்தியமாகும். இவ்வாறு ஐ. தே. கட்சிக்கு 50% இற்கும் அதிகமான வாக்குகள் விழ வேண்டுமானால் அது தமிழ் -முஸ்லீம் தலைமைகளில் தங்கி நிற்க வேண்டிவரும். முஸ்லீம்களைப் பொறுத்தவரை, அஸ்ரப் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லீம் வாக்குகள் என்பவற்றைத் தவிர்த்துப் பார்த்தால்கூட கணிசமான வாக்குகளை ஐ. தே. க. பெறும்.

இதனால் பிரச்சினை தமிழ் மக்களைப் பொறுத்துத் தான் வருகின்றது. தமது கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாக்குகளுக்காகத் தங்கி நிற்பதனை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அடியோடு வெறுக்கின்றார். இத் தங்கு நிலையில் இருந்து விடுபட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சியாக சிறீலங்காவினை ஆள வேண்டும் என அவர் விரும்புகின்றார். பெரும்பான்மையினர் சிறுபான்மையினரிடம் தங்கி நிற்கக் கூடாது; மாறாக சிறுபான்மையினர் பெரும்பான்மையிரிடம் தங்கி நிற்க வேண்டும் என்பதே விஜேதுங்காவின் அடிப்படை நிலைப்பாடு. ஜனாதிபதித் தேர்தல் என்னும் வடிவிலேயே பெரும்பான்மையினர், சிறுபான்மையினரிடம் தங்கி நிற்க வேண்டி வருகின்றது. இதனால் ஜனாதிபதித் தேர்தல் இல்லாது ஜனாதிபதியினைத் தெரிவு செய்துவிட்டால் பெரும்பான்மையினர் கம்பீரமாகத் தமது செயற்பாடுகளில் ஈடுபடலாம் என விஜேதுங்கா நினைக்கிறார்.

இதனைவிட, ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு கொழும்புத் தமிழ் வாக்குகள் கணிசமாக உதவி வந்துள்ளன. ஆனால் பிரேமதாசாவின் மறைவுக்குப் பின் அவ் வாக்குகள் எவரை நோக்கித் திரும்பும் என்பது நிச்சயமற்ற ஒன்றாகவே உள்ளது. "இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது" என்ற சிறீலங்கா ஜனாதிபதியின் பிரகடனமும் அவரது இனவாதப் பேச்சுக்களும் கொழும்புத் தமிழ் வாக்குகளின் போக்கில் மாற்றத்தினை எற்படுத்தலாம் என்ற சந்தேகமும் விஜேதுங்காவுக்கு உண்டு. தொடர்ந்து வரும் மாதங்களில் இனப்பிரச்சினை தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுக்கும் எண்ணம் விஜேதுங்காவுக்கு உண்டு. இக் கடும் நடவடிக்கைகள் தென்னிலங்கைத் தமிழ் வாக்குகளைத் தமக்குப் பாதகமாக மாற்றினாலும் தமது வெற்றி வாய்ப்பில் பாதிப்பு வரக்கூடாது என்பதும் ஜனாதிபதித் தேர்தல் இன்றி ஜனாதிபதினைத் தேர்ந்தெடுக்கும் விஜேதுங்காவின் முயற்சிக்குக் காரணம் எனலாம்.

ஜனாதிபதி, விஜேதுங்கா இன்று ஒரு இக்கட்டான நிலைக்குள் மாட்டப்பட்டுள்ளார். சட்டப் பிரச்சினைகளின்றி ஜனாதிபதியினைத் தெரிவு செய்வது; சிறுபான்மையினரிடம் தங்கி நிற்காது தேர்தலில் வெற்றி பெறுவது என்பவற்றை அடைந்து கொள்வதற்கான அவரது முயற்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்ப்பால் பிசுபிசுத்துள்ளது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் சிலரை தமது பக்கம் இழுத்து இம் முயற்சியில் வெற்றி பெற்றால் அவருக்கு அடுத்த ஜனாதிபதி ஆகும் சந்தர்ப்பம் உண்டு. இது கைகூடாவிடின் அவர் நெருக்கடியினை எதிர்கொள்ள வேண்டிவரும். ஆனால் பதவியினைக் கைப்பற்ற சமரசங்களை நோக்கிப் போவது ஆட்சியாளர்களுக்கு ஒன்றும் புதிதல்லவே. எனவே தேர்தல் மூலம் தான் ஜனாதிபதியினைத் தெரிவு செய்வது என்பது நிச்சயமானால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய முக்கிய தலைவர்களில் ஒருவர் தமிழ் மக்களைக் கவரக்கூடிய அரசியலை நடாத்துவார். விஜேதுங்கா சிங்கள பௌத்த உணர்வுகளைத் தூண்டிவிட்டு வாக்குகளைச் சேகரிக்க, ஏனைய சிலர் தமிழ் மக்களின் வாக்குகளைப் பாதுகாக்க முயல்வர்.

எல்லா மாவட்டங்களிலும் தேர்தல் நடாத்துவது தொடர்பான சட்டச் சிக்கலில் இருந்து விடுபட, ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் மாற்றத்தினைக் கொண்டுவர முயற்சிகள் நடைபெறலாம். இது வெற்றியளிக்காது, எல்லா மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெறுவது, ஜனாதிபதித் தெரிவுக்கு அவசியமானால், வேறு வழியின்றி ஒரு யுத்த நிறுத்தத்திற்கும் போலிச் சமாதான முயற்சிக்கும் சிறீலங்கா அரசு முன்வருதலும் ஆச்சரியத்துக்குரியதல்ல. ■

# மட்டு. மாநகரசபை உறுப்பினர் கூட்டம் நடத்துவது எங்கே?

■ மக்கள் மனத்தில் எழுந்துள்ள கேள்வி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாநகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதும் கூட, மாநகரசபை உட்பட சில பிரதேச சபைகளுக்காக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எங்கே கூட்டம் நடத்துவார்கள் என்ற கேள்வி அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் தற்போது எழுந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஏனெனில், மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்தில் இராணுவ முகாமும், பிரிகேடியர் அலுவலகமும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர கூட்டம் நடாத்தக் கூடிய பெரிய கட்டடங்கள் மட்டக்களப்பு நகரத்தில் தற்போது இல்லை. அத்தோடு காத்தான்குடி, மற்றும் மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச சபைக் கட்டடங்களில் பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்றன. அத்துடன் கோறளைப்பற்று வடக்கு (வாகரை), போரதீவுப்பற்று, பட்டிப்பளை, மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேசச் சபைக் கட்டடங்கள் இராணுவ நடவடிக்கையின் போது இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதனால், இப் பிரதேச செயலகங்கள் தனியார் வீடுகளில் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் எங்கே கூடுவார்கள் என்பதே பொதுமக்கள் மனதில் எழுந்துள்ள கேள்வியாகும். ■

# மன்னார்ப் பகுதியில் இராணுவம் பின்வாங்கியது

மன்னாரில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலியில் 150 யார் நீளமான பகுதியிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

மன்னார் தீவிலும் பெரு நிலப்பரப்பின் சிறு பகுதியிலுமே தற்போது இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இவ்வாறு வெளியேறியுள்ள இராணுவத்தினர் பல பயன்தரும் மரங்களைத் தறித்துக் காவல் அரண்களை அமைத்துள்ளனர். இதே வேளை, இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ரண்விலேஜ் கிராமத்தில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்கள் பேசாலைக் கிராமத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ■



# பாடம் இது புதிது!

புபலாய் எழுந்த புலிப்போர்ப் படைபணி
புகுந்தனர் "பூநகரி!"
துபரே அளித்த துட்டரின் பாசறை
துடைத்தனர் "பாவுஞ் சரி"
பயந்து சிதறிய பாதகப் பதர்கள்
பறந்தனர் மகிழ்ந்து சிரி!
உயிரினை ஈந்தநம் உத்தமர்களுக்காய்
ஓரிரு துளிகள் சொரி!

பாதையை மறித்துப் படையினை நிறுத்திப்
படுகொலை புரிந்தவர்கள்!
நீதியை மிதித்து நித்தமும் அநீதி
நிகழ்த்தியே திரிந்தவர்கள்!
ஊதிடப் பறக்கும் சருகுகளாகி
உயிர்விட்(டு) உருண்டனர் காண்!
மேதினி வியந்து மெச்சிடும் சாதனை
வென்றனர் மறப்புலிகள்!


முழுங்குகடல், வான், தரையென எதிரி
முப்படை பெரிதென்றான்!
வழங்கிடும் கூலிப் பிச்சையை ஏந்த
வந்தவர் அரியென்றான் !
விளங்கிட வைத்தனர் வீரம் எதுவென
வேங்கைகள் அடி ஒன்றால்!
இழந்தனர் மானம் இனவெறிப் படைகள்
எமபுரம் குடி கொண்டார்!

புலிப்படை வீரர் போர்க்களத் திறமை
புதுப் புற நானூறு!
அலியெனக் கிடந்த அந்நியப் படைக்கு
ஆம்! இது நெருப்பாறு!
நிலையென எதிரி நிம்மதியோடெம்
நிலத்தினில் இனிக் கிடவான்!
வலையினிற் சிக்கிய வாளை மீனென
வதங்கியே அழிந்திடுவான்!

பூநகரிப் படை முகாம் அடி புலிகள்
புகட்டிய புதுப்பாடம்!
ஈனர்க்கு இன்னும் இருக்குது அதிர்ச்சி
எரிதழல் எழுந்தாடும்!
மானத்தைப் பெரிதாய் மதிப்பவர் தமக்கு
மரணமோர் விருந் தாகும்!
தானமாய் உயிரைத் தந்தவர் தாகம்
தணித்திடல் கடன், வாரும்!!!

-நிலா தமிழின்தாசன்



U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers